# வருடாந்த அறிக்கை

# 2012

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை**

**இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில,**

**நுகேகொட.**

## உள்ளடக்கம்


- அறிக்கை மற்றும் மாண்புமிகு அமைச்சருக்கு அறிவித்தல்- 01
- நிறுவனத்தின் நோக்கு மற்றும் அரும்பணி பற்றிய பிரகடனம்- 02
- பணிப்பாளர் சபை- 03
- நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு- 04
- முகவுரை 05

**2012 ஆம் ஆண்டின் சபையின் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு**

- நெறிப்படுத்தல் பிரிவு- 08
- காப்புறுதிப் பிரிவு- 14
  - கமத்தொழில் காப்புறுதிப் பணிகளும் கால்நடைக் காப்புறுதிப் பணிகளும்
- கமக்காரர் ஓய்வூதியப் பிரிவு- 18
  - கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
- நிர்வாக மற்றும் மனிதவளங்கள் பிரிவு- 28
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு- 34

**நிதிப்பிரிவு**

- கணக்குகள் 37
- ஒட்டுமொத்தமான செயற்றிட்டங்கள் பற்றிய ஒன்றிணைந்த கணக்குக்கூற்று- 42
- கமத்தொழில் காப்புறுதித்திட்டம்- 47
- கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்- 72
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்- 94

**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள்**

- கமத்தொழில் காப்புறுதித்திட்டம்- 111
- கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்- 129
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்- 140

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்கள்**

- கமத்தொழில் காப்புறுதித்திட்டம்- 150
- கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்- 167
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்- 173

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams: රක්ෂණ / ரக்ஷன / Rakshana

117-සුභද්‍රාරාම පාර,ගංගොඩවිල,නුගේගොඩ
117-Subadrarama road,Gangodawila
Nugegoda

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No.: 3/1/13

ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No.:

දිනය / திகதி / Date: 2014/04/24

செயலாளர்,

நிதி, திட்டமிடல் அமைச்சு,

பொதுச் செயலகம்,

கொழும்பு01.

செயலாளர் அவர்களே,

## வருடாந்த அறிக்கை – 2012

2012 ஆம் ஆண்டில் இச்சபையின் நிர்வாக, நெறிப்படுத்தல் மற்றும் நிதிச் செயற்பாடுகள் அமுலாக்கப்பட்ட விதத்தை உள்ளிட்டதாக ஆண்டில் ஈடேற்றப்பட்ட சகலவிதமான செயற்பாடுகளையும் உள்ளிட்ட வருடாந்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,

சட்டத்தரணி ஆரியதிலக தஹநாயக்க
தலைவர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை,

| | සභාපති / தலைவர் / Chairman | සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephones | 448693 / 448694 | 438607 | 448691-2 / 438606 / 430058 |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 449316 | 438607 | |

**கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபை**

# நோக்கு

உள்நாட்டு விவசாயத்துறையின் உன்னதமான பாதுகாவலனாக அமைவதன் ஊடாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் கமத்தொழில் காப்புறுதி நிறுவனமாக அமைதல்

# அரும்பணி

கமத்தொழில் காப்புறுதியையும் பாதுகாப்பினையும் வழங்குவதற்கான கூட்டு முயற்சி மற்றும் நிறுவனங்களின் இணைப்பாக்கத்தின் ஊடாக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

## பணிப்பாளர் சபை- 2012

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. தமித்தா ரத்நாயக்க<br>பிரதிப் பணிப்பாளர் ,<br>திறைசேரி நெறிப்படுத்தல் திணைக்களம்<br>கொழும்பு 01<br><br>திரு.பீ.ஏ. அபேசேகர<br>பிரதிச் செயலாளர்<br>பொதுதிறைசேரி<br>கொழும்பு 01 | தலைவர் (பதில்) 2012.08.09 வரை<br><br>தலைவர் (2012.08.15 முதல்) |
| 2 | திரு. சாந்த பண்டார<br>மேலதிக செயலாளர்<br>கடற்றொழில், நீரக வளங்கள் அமைச்சு<br>புதியசெயலகம்<br>மாளிகாவத்த, கொழும்பு 10 | அங்கத்தவர் |
| 3 | திரு. ரவீந்திர ஹேவாவிதாரண<br>கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்<br>கமநல அபிவிருத்தி திணைக்களம்<br>கொழும்பு 07<br>திரு. எம்.ஏ.எஸ். வீரசிங்க<br>கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்<br>கமநல அபிவிருத்தி திணைக்களம்<br>கொழும்பு 07 | அங்கத்தவர் (2012.04.27 வரை)<br><br>அங்கத்தவர் (2012.08.09 முதல்) |
| 4 | திரு. ரீ.எச்.சீ.எஸ். பெரேரா<br>பணிப்பாளர்(சமூக மற்றும்பொருளாதாரத் திட்டமிடல்)<br>கமத்தொழில் திணைக்களம்<br>பேராதனை | அங்கத்தவர் |
| 5 | டாக்டர் திரு. சிவயோகநாதன்<br>பணிப்பாளர்<br>கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சு<br>45, புனித மைக்கல் வீதி<br>கொழும்பு 03 | அங்கத்தவர் |
| 6 | திரு. பீ. சீ. தென்னக்கோன்<br>“சீவலீ நிவச”<br>கொபெய்கனே | அங்கத்தவர் |

# கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
## தாபனக் கட்டமைப்பு



## முகவுரை

இலங்கையின் விவசாயத் துறைக்கு ஒழுங்கமைந்த அபாயநேர்வு முகாமைத்துவ வழிமுறையாக கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ்செய்து 1973 இன் 27 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலமாக தாபிக்கப்பெற்ற கமத்தொழில் காப்புறுதிச் சபையானது 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினால் சம்பந்தப்பட்ட பணிகளை மேலும் விரிவுபடுத்தி ஈடேற்றுகின்ற தனது அரும்பணியில் 40 வது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது.

விவசாயத் துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்ற தீவின் ஒரேயோர் அரச நிறுவனமென்ற வகையில் சுதேச விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை நிலைபேறானதாக அமைப்பதற்காக கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்ச அளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு 2012 ஆம் ஆண்டிலும் பல்வேறு செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியில் அமுலாக்க சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் மூலமாக2012 ஆம் ஆண்டில் சபை ஈட்டியுள்ள காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 124 மில்லியன் ரூபாவாக அமைந்தது.

### 2006 முதல் 2012 வரையான கட்டுப்பண வருமானம்

| செயற்றிட்டம் | 2006 (மில். ரூ) | 2007 (மில். ரூ) | 2008 (மில். ரூ) | 2009 (மில். ரூ) | 2010 (மில். ரூ) | 2011 (மில். ரூ) | 2012 (மில். ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| பயிர்க் காப்புறுதி | 6.23 | 12.08 | 47.41 | 55.35 | 79.69 | 119.07 | 99.9 |
| கால்நடைவளக் காப்புறுதி | 5.45 | 8.76 | 14.24 | 14.52 | 12.77 | 18.24 | 15.8 |
| களஞ்சிய மற்றும் விவசாய உபகரணக் காப்புறுதி | 0.21 | - | 0.96 | 1.54 | 3.4 | 5.93 | 6.5 |
| சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி | 23.4 | 7.41 | 7.88 | 9.01 | 9.62 | 14.23 | 2.5 |
| **கூட்டுத்தொகை** | **35.29** | **28.25** | **70.49** | **80.42** | **105.48** | **157.47** | **124.7** |

நிகழ்காலத்தில் உலகம் பூராவிலும் தோன்றிவருகின்ற காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் காரணமாக விவசாயத்தொழில் அபாயநேர்வு நிலையினை அடைந்திருப்பதால், கடந்த ஆண்டுகளில் அந்நிலைமை தொடர்ச்சியாக இலங்கையின் விவசாயத்துறை மீதும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2010/2011 பெரும் போகத்தில் வெள்ளப்பெருக்கினாலும் 2012 சிறு போகத்தில் கடும் வரட்சியினாலும் இலங்கையின்

பிரதானமான விவசாய வலயங்களில் பயிர்செய்கைக்கு பாரிய சேதம் ஏற்பட்டதோடு 2013 ஆம் ஆண்டில் அப்பிரதேசங்களில் 2012/2013 பெரும் போகத்தில் மிகையான மழையினாலும் வெள்ளப் பெருக்கினாலும் பாரியளவில் சேதமேற்பட்டது.

2008ஆம் ஆண்டில் சபையின் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டதுடன் கமத்தொழில் காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டமையால் 2011 இன் முன்னரைப் பாகத்தில் காப்புறுதி நிதியம் 269 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. எனினும் தீவின் பிரதானமான நெற்செய்கை மாவட்டங்களான அநுராதபுரம், பொலொன்னறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு ஏற்பட்ட மிகையான வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக 2011 ஆம் ஆண்டில் 227 மில்லியன் ரூபாவினை நட்டஈடாக செலுத்தவேண்டிய நிலையேற்பட்டது. அதன் பின்னர் 2012 ஆம் ஆண்டிலும் அப்பிரதேசங்களில் நிலவிய கடும் வரட்சியினால் ஏற்பட்ட பயிரச்சேதங்களுக்காக நட்டஈடு செலுத்தியதால் காப்புறுதி நிதியம் 111 மில்லியன் ரூபா வரை வீழ்ச்சியடைந்தது. 2013 சனவரியில் இருந்து நிலவிய மிகையான வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக 2012/13 பெரும்போகத்தில் சேதமடைந்த பயிர்களுக்காக பெருந்தொகையான நட்டஈட்டினைச் செலுத்தியதாலும் தொடர்ந்தும் காப்புறுதி நிதியம் நலிவடையும் நிலைமைதோன்றியுள்ளது.

எவ்வாறாயினும் திடீர் அனர்த்த நிலைமைகளின் மத்தியில் விவசாயத்தையும் விவசாயியையும் பாதுகாப்பதில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினை ஓரளவுக்கேனும் தளர்த்தும்பொருட்டு விவசாய அபாயநேர்வு முகாமைத்துவத்துடன் தொடர்புகொள்கின்ற அரசதுறையின் ஒரேயொரு காப்புறுதி நிறுவனம் என்றவகையில் பயிர்ச்சேதமேற்பட்ட கமக்காரர்களுக்கு சபையினால் செலுத்தப்பட்ட நட்டஈடு பெரிதும் உறுதுணையாக அமைந்தது. அத்துடன் நிதிநிறுவனங்களால் வழங்கப்படுகின்ற விவசாயக் கடன்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக கடன்களை விநியோகிக்கையில் சம்பந்தப்பட்ட பயிர்களுக்கு காப்பீட்டினை வழங்குவதன் மூலமாக சபையினால் ஈடேற்றப்படுகின்ற பணிப்பொறுப்பும் மிகமுக்கியத்துவம் வகிக்கின்றது.

கடந்த ஒருசில வருடங்களாக புதிய தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து பயிர்ச்சேதம் ஏற்பட்ட மாவட்டங்களிலேயே இழப்பீட்டினைக் கணிப்பீடுசெய்து போகம் நிறைவடைவதற்கு முன்னராகவே இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டமையால் கமக்காரர்களினதும் வங்கித்துறையினதும் நம்பிக்கையை வென்றெடுக்க சபைக்கு ஆற்றல் கிடைத்துள்ளது.

குறிப்பாக யுத்தத்தின் தாக்கம் நீங்கியமையால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அம்மாகாணங்களில் நெற்பயிர்ச்செய்கைக்கு மேலதிகமாக சோளம், மிளகாய், வெங்காயம், மரக்கறிகளை உள்ளிட்ட ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காகவும் காப்பீட்டினை வழங்க சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பிரதேசங்களில் புதிதாக சாகுபடி செய்யப்படுகின்ற காணிகளில் பயிர்களுக்கு ஏதெனும் சேதமேற்பட்டால் காப்பீடு மூலமாக அதற்கான இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடிந்தமையால் அந்த மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையும் அப்பிரதேசங்களின் விவசாய அபிவிருத்திக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

விவசாயத்துறையிடன் தொடர்புடையதாக அமுலாக்கப்படுகின்ற காலநடைவளக் காப்புறுதி, களஞ்சியக் காப்புறுதி, டிரெக்டர் மற்றும் விவசாய உபகரணக் காப்புறுதியை உள்ளிட்ட காப்புறுதிச் செயற்றிட்டங்களும் விவசாயியின் நலனோம்பலை இலக்காகக்கொண்ட சுவசெத சுகாதாரக் காப்புறுதித் திட்டம் மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதிச் செயற்றிட்டமும் சபையினால் 2012 ஆம் ஆண்டிலும் நாடளாவியரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசியமட்டப் பிரச்சினைகளில் ஒன்றாக மாறியுள்ள காட்டு யானைகளினால் ஏற்படுகின்ற உயிர் மற்றும் விவசாய சேதங்களுக்காக காப்பீட்டினை வழங்கும் செயற்றிட்டமொன்றும் சபையினால் தயாரிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்படுள்ளதோடு அதற்கான நிதியங்கள் கிடைத்த பின்னர் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உரமானியத்தின் கீழ் பயிர்க்காப்புறுதிச் செயற்பாடுகளை அமுலாக்குதல் தொடர்பான செயற்றிட்டமொன்று 2011 ஆம் ஆண்டில் சபையினால் தயாரிக்கப்பட்டிருந்ததோடு 2012 வரவு-செலவு அறிக்கை மூலமாகவும் அது சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட பிரேரணையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட காப்புறுதி நடவடிக்கைகளையும் அமுலாக்குகையில் சபை கொண்டுள்ள அனுபவம் மற்றும் ஆற்றலுடன் செயற்றிட்டம் பற்றிய சாத்தியவள அறிக்கையொன்று அமைச்சின் கவனத்திற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

சபையின் பெயர் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் பிரபல்யமடையக் காரணமாக அமைந்த சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் நிதியம் பூச்சியநிலையை அடைந்ததன் விளைவாக 2012 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதலை இடைநிறுத்த நேரிட்டமையால் மக்களைப் போன்றே வெளிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களிடையேயும் சபைமீது நிலவிய நம்பிக்கை சிதைவடைந்ததால் 2012 ஆம் ஆண்டில் சபையின் செயற்றிட்டங்களை விரிவாக்குவதிலும் நிதிசார் இலக்குகளை அடைவதிலும் பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டன.

2012 ஆம் ஆண்டில் சபைக்காக அலுவலர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதோடு இருக்கின்ற பதவியணியினர் மூலமாக சம்பந்தப்பட்ட கடமைகள் ஈடேற்றிக்கொள்ளப்பட்டன. உரிய திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை 421 ஆக அமைந்தபோதிலும் தற்போதய பதவியணி 306 பேர் ஆகும். அதற்கிணங்க வெற்றிடங்களின் எண்ணிக்கை 115 ஆகும்.

இத்தகைய பின்னணியிலும்கூட கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை தனது பொறுப்பினை ஈடேற்றி 2012 ஆம் ஆண்டில் மேற்கொண்ட செயற்பாடுகளின் செயல்விளைவு இவ்வறிக்கை மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

# நெறிப்படுத்தல் பிரிவு

# நெறிப்படுத்தல் பிரிவு

கமத்தொழில்துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்றநாட்டின் ஒரேயோர் அரச நிறுவனமென்ற வகையில் சுதேச விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை நிலைபேறானதாக அமைப்பதில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினை ஈடேற்றுவதை நோக்கமாகக் கொண்டு கீழே குறிப்பிடப்பட்ட சபையின் செயற்றிட்டங்களை கமக்காரர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான சிறப்பு நெறிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டிலும் நாடளாவிய ரீதியில் அமுலாக்கப்பட்டன.

**1- பயிர்க் காப்புறுதிச் செயற்றிட்டங்கள் :-**

- நெற்பயிர்க் காப்புறுதித் திட்டம்
- சோளப் பயிர்க் காப்புறுதித் திட்டம்
- மேலதிகப் பயிர்க் ( பயறு, நிலக் கடலை, சோயா, உழுந்து)காப்புறுதித் திட்டம்
- பெரிய வெங்காயச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- கரும்புச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ஏற்றுமதிப் பயிர்க் காப்புறுதித் திட்டம்
- பெருந்தோட்டப் பயிர்ச் (தேயிலை) செய்கைக் காப்புறுதித் திட்டம்
- தெங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- உருளைக் கிழங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மலர்கள் மற்றும் அலங்காரச் செடிகள் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- இஞ்சி செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மிளகாய் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மரக்கறிச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- வாழைச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- பழச் செய்கைக் காப்புறுதித் திட்டம்

2- களஞ்சியக் காப்புறுதித் திட்டம்

3- டிரெக்டர் உள்ளிட்ட விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம்

4- கால்நடைவளக் காப்புறுதித் திட்டம்

- ஆடுகள்
- மாடுகள்

5- திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

6- சுவசெத சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

சம்பந்தப்பட்ட செயற்றிட்டங்களின் கீழ் உச்சஅளவிலான சேவையினை கமக்காரர்களுக்கு வழங்குதல் மற்றும் அதனூடாக சபையின் நிதிசார் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கத்தை வென்றெடுப்பதற்காக மாவட்ட அலுவலக வலையமைப்பினூடாக சம்பந்தப்பட்ட நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் நாடு பூராவிலும் அமுலாக்கப்பட்டன. இதன்போது வணிக

வங்கிகளுடன் ஒருங்கிணைந்து அமுலாக்கிய விவசாயக் கடன் திட்டத்தின் கீழான காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் வெளிநிறுவனங்களின் விசேட கருத்திட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்ட காப்புறுதிச் செயற்பாடுகளுக்காக முந்துரிமை அளிக்கப்பட்டதோடு அதன் மூலமாக அதிக வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்காலத்தில் தோன்றிவருகின்ற காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற பயிர்ச்சேதங்களுக்காக தொடர்ச்சியாக இழப்பீடு செலுத்த நேரிட்டமை சபையின் நிதிநிலைமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆயினும் 2012 சிறு போகத்திலும் தீவின் பிரதான விவசாய மாவட்டங்களில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திய வரட்சி காரணமான பயிர்ச்சேதத்திற்காக போகம் நிறைவடைவதற்கு முன்னராகவே இழப்பீட்டினைச் செலுத்தி, சபையின் பொறுப்பினை ஈடேற்றி வங்கித்துறையினதும் பொதுமக்களினதும் நம்பிக்கையை வென்றெடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வருடாந்த நிதிசார் இலக்கினை அடைவதில் முதன்மைச் செயற்பொறுப்பினை மாவட்ட அலுவலகப் பதவியினர் ஈடேற்றுவதால் வடக்கு- கிழக்கினையும் உள்ளடக்கியதாக தீவின் அனைத்து மாவட்ட அலுவலகங்களுடனும் இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி அவ்வலுவலகங்களின் முகாமைத்துவ உதவி அலுவலர்கள் அனைவரினதும் பங்கேற்புடன் தலைமையகம், அநுராதபுரம், கண்டி மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய இடங்களில் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நடைபெற்ற செயலமர்வுகளில் அவ்வேளையில் ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்தினதும் நிதிசார் முன்னேற்றமும் எதிர்கால நிதிசார் இலக்கினை அடைவதற்காக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள வேலைத்திட்டங்களும் பற்றி கலந்துரையாடப்பட்டு அவசியமான விழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க செயற்றிட்டத்தின் கீழ் தவணைப்பணத்தை அறவிடும்போதும் பயிர்ச்சேதங்களை மதிப்பீடு செய்யும்போதும் அவசியமான வகையில் அலுவலர்களை ஈடுபடுத்துதல், ஏனைய வசதிகளை வழங்குதல், உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் மூலமாக சம்பந்தப்பட்ட பணிகளை வினைத்திறனுடன் நெறிப்படுத்த நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. காப்புறுதிப் பணிகளை நெறிப்படுத்துவதில் விவசாயப் பரம்பலுக்கிணங்க தீவின் பிரதேசங்கள் பிரதானமான இரண்டு பாகங்களாக வேறாக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**<u>1- பிரதான விவசாய வலயங்கள் :-</u>**

மரபுரீதியான விவசாயத்திற்கு அப்பால்சென்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் ஒழுங்கமைந்த நீர்ப்பாசனத்தைக்கொண்ட ஏற்றுமதி விவசாயம் வரை வியாபித்து விவசாயத் தொழில்முயற்சியாளர்களாக மாறியுள்ள அதிகளவிலான விவசாயிகள் வசிக்கின்ற மாட்டங்களை உள்ளடக்கிய வலயம் இதில் உள்ளடங்கும். இவ்வலயத்தில் நிதி நிறுவனங்களின் உதவியுடன் சந்தையை இலக்காகக்கொண்டு பிரதானமாக பயிர்செய்யப்படுகின்ற நெல் மற்றும் சோளத்தை உள்ளடக்கிய முக்கியமான பயிர்களைக் காப்புறுதி செய்வதன் மூலமாக அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளவும் அதற்கு மேலதிகமாக மரக்கறி வகைகள், மேலதிகப் பயிர்கள் மற்றும் பல்லாண்டுப் பயிர்களைக் காப்புறுதி செய்வதன் மூலமாக அவ்வரிமானத்தை மேலும் விருத்திசெய்து கொள்ளவும்

எதிர்பாரக்கப்பட்டது. ஒவ்வோராண்டிலும் ஒட்டுமொத்த நிதிசார் வருமானத்தின் பெரும்பகுதி இவ்விவசாய வலயங்களின் பயிர்க் காப்புறுதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்படுகின்றபோதிலும் பல்வேறு ஏதுக்களின் தாக்கங்களால் 2011 ஆம் ஆண்டின் நிதிசார் வருமானத்துடன் சார்புடையதாக 2012 ஆம் ஆண்டில் நிதிசார் வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டில் பயிர்க் காப்புறுதி பணிகளில் நேரடியாகத் தலையிட்ட தனியார் காப்புறுதிக் கம்பெனிகளால் வங்கிக்கும் பிரத்தியேகமாக அவற்றின் உத்தியோகத்தர்களுக்கும் விசேட ஊக்குவிப்புப் படிகளைச் செலுத்தியதால் ஏற்பட்ட அழுத்தத்தினால் சம்பந்தப்பட்ட வங்கிகளின் கீழான காப்பறுதிச் செயற்பாடுகளை சபை இழந்ததுடன், தொடர்ச்சியாக கடந்த போகங்களில் நேர்ந்த பயிர்ச்சேதம் காரணமாக பயிர்ச்செய்கைக் கடன்கள் பதிவழிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் பயிர்ச்செய்கைக் கடனை மீளச்செலுத்தாதிருந்த விவசாயிகளுக்கு மீண்டும் பயிர்ச்செய்கைக் கடன் விநியோகிக்கப்படுவது மறுக்கப்பட்டமையும், புதிதாக வயல்நிலங்களை சாகுபடி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் கமக்காரர்களை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின்பால் ஊக்குவிப்பதற்கான விசேட சலுகையென்ற வகையில் அப்பிரதேசங்களின் நிதிநிறுவனங்களினால் காப்புறுதியின்றி பயிர்ச்செய்கைக் கடன் விநியோகிக்கப்பட்டமையும், அதிகரித்த நிதி வருமானம் எதிர்பார்க்கப்பட்ட 2012/2013 பெரும்போகத்திற்காக உரிய காலத்தில் போதியளவில் நீர் கிடைக்காமையினால் பயிர்ச்செய்கைப் போகம் தாமதித்தமை மற்றும் சீரற்றுப்போனமையினால் நடைமுறை அனுபவத்திற்கிணங்க பயிர்களுக்கு அதிக சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமென்பதால் தன்னிச்சையான காப்புறுதி நடவடிக்கைகளை ஊக்குவிக்காதிருக்க பிரதான விவசாய வலயங்களைச் சேர்ந்த மாவட்டப் பதவியணியினர் நடவடிக்கை

மேற்கொண்டமை ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் காரணமாக பயிர்க்காப்புறுதிச் செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்த்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமை 2012 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிதிசார் வருமானம் வீழ்ச்சியடைவதில் தாக்கமேற்படுத்திய பிரதான காரணங்களாகும்.

2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலகட்டத்தில் ஆரம்பித்து இன்றளவில் பிரதான பயிர்ச்செய்கை வலயங்களில் 2012/2013 பொரும்போகத்தில் பயிர்ச்செய்கைகளுக்கு மிகையான மழையினாலும் வெள்ளப்பெருக்கினாலும் ஏற்பட்டு வருகின்ற பயிர்ச் சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்துவதற்கு தற்போது சபை கொண்டுள்ள நிதியம் போதுமானதாக அமையவில்லையென்பதால் 2012 ஆம் ஆண்டில் பயிர்ககாப்புறுதிச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமைநிலவின்ற நிதிநிலைமையின் கீழ் மறைமுகமாக சபை பெற்ற ஒரு நிவாரணமெனக் குறிப்பிடலாம்.

## 2 <u>பகுதியளவிலான விவசாய வலயங்கள்:-</u>

விவசாயம் பிரதான வாழ்வாதாரமாக அமையாததோடு பகுதியளவில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் வசிக்கின்ற மாவட்டங்கள் இவ்வலயத்தில் அடங்குகின்றன. இந்த

மாவட்டங்களின் நிதிசார் இலக்குகளை அடையும்போது கால்நடைவளக் காப்புறுதி, சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதி என்பவை முதன்மைக் காப்புறுதிச் செயற்றிட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சபையின் பெயர் அண்மைக்காலத்தில் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடையக் காரணமாக அமைந்த சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் செலுத்துதல் 2011 ஆம் ஆண்டில் இருந்து மாற்றுவழிமுறையின்றி இடைநிறுத்தப்பட்டமையால் மக்களைப் போன்றே சபையின் செயற்றிட்டங்களுக்காக ஒத்திழைப்பு நல்கிவருகின்ற வெளிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களும் சபைமீது வைத்திருந்த நம்பிக்கை சிதைவடைந்தமை 2012 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செயற்றிட்டங்களை விரிவாக்குவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

<u>**சந்தைப்படுத்தல் மற்றும் பிரச்சாரப் பணிகள்**</u>

1. 2012 சிறுபோகத்தில் வரட்சியினால் ஏற்பட்ட பயிர்ச்சேத மதிப்பீட்டுப் பணிகளைத் துரிதமாக ஈடேற்றி போகம் நிறைவடைவதற்கு முன்னராகவே சம்பந்தப்பட்ட இழப்பிட்டுத் தொகைகளைச் செலுத்தியதன் மூலமாக சபைமீது வங்கித்துறையினதும் பொதுமக்களினதும் நம்பிக்கையை உறுதிசெய்ய நடவடிக்கை மேற்கொண்டமை
2. வரலாற்றில் முதற்றடவையாக அரசதலைவரின் தலைமையில் பயிர்க்காப்புறுதி இழப்பிட்டுத் தொகைகளை கமக்காரர்களுக்குச் செலுத்துவதைக் குறிக்குமுகமாக 2012 சிறுபோகத்தின் இழப்பீட்டுத் தொகைகளைச் செலுத்துவதற்கான தனிவேறான தேசிய வைபவம் அதிமேதகு சனாதிபதியவர்களின் தலைமையில் 2012.08.17 ஆம் திகதியன்று தம்புத்தேகமவில் நடத்தப்பட்டது.
3. அத்துடன் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர் கௌரவ. எஸ்.எம். சந்திரசேன அவர்களின் தலைமையில் இழப்பீட்டுத் தொகைகளைச் செலுத்துதல் தொடர்பான இரண்டு பிரச்சார நிகழ்ச்சிகள் 2012.10.16 அற்றும் 2012.10.22 ஆகிய திகதிகளில் அநுராதபுரம் மாவட்டத்திலும் பொலநறுவை மாவட்டத்தின் இழப்பீடு செலுத்துதல் சுகாதார அமைச்சர் கௌரவ. மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2012.09.05 ஆம் திகதியன்று பொலநறுவை புத்தி வளாகத்திலும் நடைபெற்றது.
4. இழப்பீடு செலுத்தும் வைபவங்கள் எப்போதும் பயிர்ச்செய்கைக் கடன் வழங்கும் வங்கிகளின் உத்தியோகத்தர்களினதும் பெருந்திரளான கமக்காரர்களினதும் பங்கேற்புடன் நடத்தப்படுவதோடு அதனூடாக சபையின் செயற்பாடுகள் பற்றி அவ்வுத்தியோகத்தர்கள் மற்றும் கமக்காரர்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5. இந்த இழப்பீடு செலுத்தும் நிகழ்ச்சிகள் பற்றி வானொலி மற்றும் தொலைக்காட்சி பிரதான செய்திகள் ஊடாக செய்திகள் வெளிப்படுத்தப்பட்டதுடன் தேசிய செய்தித்தாள்களிலும் பிரதான செய்திகளாக பிரசுரிக்கப்பட்டன. அதற்கிணங்க சபையின் காப்புறுதி வேலைத்திட்டம் பற்றி தேசிய மட்டத்தில் மக்களை விழிப்பூட்டவும் வாய்ப்பு கிடைத்தது.

6. பயிர்ச்செய்கைக் கடன்களின் கீழ் காப்புறுதிச் செயற்பாடுகளை அமுலாக்குகையில் மக்கள் வங்கி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான சுமுகமான ஒன்றுகூடல் பொலநறுவை மாவட்டத்திற்காக 2012.06.15 ஆம் திகதி பொலநறுவை விலேஜ் ஹோட்டலிலும் குருநாகல் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான சுமுகமான ஒன்றுகூடல் 2012.06.10 ஆம் திகதி பொலகஹவெலவிலும் நடைபெற்றது.

7. பிரதேச அபிவிருத்தி வங்கியின் கடன்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்கின்ற கால்நடைகளைக் காப்புறுதி செய்தல் தொடர்பில் கால்நடை விவசாயிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சியொன்று கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பன்வில மிருக வைத்தியர் அலுவலகத்தில் 2012.06.20 ஆம் திகதி நடத்தப்பட்டதோடு அன்றைய தினம் பற்கேற்ற விவசாயிகளுக்கு அவர்களின் கால்நடைகளுக்காக சபையினால் கனிப்பொருள் பொதிகள் பகிர்ந்தளிக்கப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
8. 2012/13 பெரும்போகத்தில் பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு கமக்காரர்களை விழிப்பூட்டுவதற்காக சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் 15,000 துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டு மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
9. 2011 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திடீர் விபத்துக் காப்புறுதிச் செயற்றிட்டத்தை விரிவாக்குவதற்கான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் விசேட முன்னேற்றத்தை வெளிக்காட்டிய சபையைச் சேர்ந்த மற்றும் வெளிவாரி உத்தியோகத்தர்களின் சேவையைப் பாராட்டவும் பரிசில்களை வழங்குவதற்குமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.
10. விவசாயத் திணைக்களத்தின் 100 வருடகால சேவையைக் கொண்டாடுவதற்காக 2012.09.12 முதல் 2012.09.16 வரை காலி லபுதூவ அரசாங்கப் பண்ணையில் நடைபெற்ற கண்காட்சியில் சபையின் கண்காட்சிக் கூடமொன்றும் பேணிவரப்பட்டது.
11. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2012/11/05 முதல் 2012/11/07 வரை காலி நகரசபை மண்டபத்தில் நடத்தப்பட்ட கித்துள் சீவல்தொழிலாளர்களின் தயாரிப்புக்களுக்கான கண்காட்சியில் சபையின் கண்காட்சிக்கூடமொன்றைப் பேணிவரவும் கித்துள் சீவல்தொழிலாளர்களுக்கான தனித்துவமான திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம் பற்றிய துண்டுப்பிரசுரம் மூலமான விழிப்பூட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
12. 2012/10/27 ஆம் திகதி அநுராதபுரம் கவரக்குளம் வயல்வெளியில் நடைபெற்ற 2012 தேசிய ஏர்பூட்டு விழாவில் பங்கேற்ற அழைப்பு விருந்தினர்கள் மற்றும் கமக்காரர்களுக்காக "தேசிய ஏர்பூட்டு விழா 2012 – கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை" எனும் தொனிப்பொருள் வாசகம் அச்சிடப்பட்ட 50 பெனியன்கள் சபையின் பிரச்சாரத்திற்காக வழங்கப்பட்டன.

# காப்புறுதிப் பிரிவு

## கமத்தொழில் காப்புறுதிச் செயற்றிட்டம்

## மற்றும்

## கால்நடைவளக் காப்புறுதிச் செயற்றிட்டம்

**காப்புறுதிப் பிரிவு - 2012**

ஒப்புறுதிச் செயற்பாடுகளும் இழப்பீடு கணித்தல் மற்றும் செலுத்துதல் காப்புறுதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணியாகும். இங்கு பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் கால்நடைவளக் காப்புறுதி நடவடிக்கைகளைப் போன்றே பொதுவான காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பான கொடுப்னவுகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்த ஆவனசெய்தலும் இழப்பீடு செலுத்துதலும் காப்புறுதிப் பிரிவு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் ஒப்புறுதியைப் போன்றே இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைளையும் துரிதமாக மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

**ஒப்புறுதிச் செயற்பாடுகள்**

1) மன்னம்பிட்டி வலயம் தொடர்பாக நெற் செய்கையின் கீழ் தரப்படுத்தப்பட்ட (நியம) விளைச்சல் திருத்தியமைக்கப்பட்டு நிகழ்கால சந்தை தேவைப்பாட்டுக்கு ஏற்றவகையில் செயற்றிட்டத்தை திருத்தியமைத்தல்.
2) செலான் வங்கியுடன் காப்புறுதிப் பணிகளைப் புரிதல். தேயிலைப் பயிர்க்காப்புறுதிச் செயற்றிட்டத்தை நிகழ்கால சந்தை அவசியப்பாட்டிளைக் கருத்தில்கொண்டு திருத்தியமைத்தல்.
3) வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பயிர்க்காப்புறுதிப் பணிகளை விரிவாக்கும் நோக்கத்துடன் வாய்ப்புவளம் நிலவுகின்ற பயிர்களுக்காக காப்பீட்டினை நீடித்தல். குறிப்பாக மிளகாய், வெங்காயம், மரக்கறிவகைகளுக்கு காப்பீட்டினை வழங்குதல்.
4) அத்துடன் அவ்வலயங்களுக்கான காப்பீட்டு மட்டங்களும் அதிகரிக்கப்பட்டன. குறிப்பாக வங்கிகள் மூலமாக கடன்வசதிகளை வழங்கும்போது அக்கடன்தொகையை உள்ளடக்கக்கூடியவாறு காப்புறுதித் திட்டங்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டன.
5) தேயிலைச் செய்கைக் காப்புறுதியானது திருத்தங்களுடன் மீண்டும் சந்தைக்கு அறிமுகஞ் செய்யப்பட்டதுடன் பயிர்க் காப்புறுதியின் கீழ் பாவிக்கப்படுகின்ற மாதிரிப்படிவங்கள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு திருத்தியமைத்து இற்றைப்படுத்தப்பட்டன.
6) கால்நடைவளக் காப்புறுதித் திட்டத்திற்கும் ஒருசில திருத்தங்கள் சேர்க்கப்பட்டன. குறிப்பாக காப்புறுதி நிபந்தனை வழிமுறைகளும் விலங்குகளை இனங்காண்பதற்கான வழிமுறைகளும் திருத்தியமைக்கப்பட்டன.
7) கால்நடைவளக் காப்புறுதிப் பத்திரங்களைத் துரிதமாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கால்நடைவளக் காப்புறுதி இழப்பீட்டினைச் செலுத்துவதிலான தாமதங்களைக் கணிசமான அளவில் பேணிவந்து இழப்பீட்டினை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
8) டிரெக்டர் காப்புறுதித் (பிறவுன்ஸ் கருத்திட்டம்) திட்டத்தின் கீழ் டிரெக்டர் தொடர்பில் இலவசமாக வழங்கப்படுகின்ற காப்பீட்டினை 02 வருடங்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**9)** சந்தை தேவைப்பாட்டுக்கிணங்க காப்புறுதிச் செயற்பாடுகளின்போது பாவிக்கப்படுகின்ற புதிய மாதிரிப்படிவங்களை அறிமுகஞ் செய்யவும், நிலவுகின்ற மாதிரிப்படிவங்களை திருத்தியமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்காலிக மாதிரிப் படிவங்களும் புறக்குறிப்புகளும் காலநடைவளக் காப்புறுதிப் பணிகளுக்காக சேர்க்கப்பட்டன.

**இழப்பீடு செலுத்தும் பணிகள்**

10) 2012 சிறுபோகத்தில் தோன்றிய கடும் வரட்சி நிலைமையின் மத்தியில் முன்வைக்கப்பட்ட பயிர்ச்சேத இழப்பீட்டினை ஒரு மாதமெனும் குறுகிய காலப்பகுதியில் செலுத்தித் தீர்த்தமையும் அதனூடாக சந்தை தேவைப்பாட்டனை வழங்கியமையும். இதன்பொருட்டு 5 நடமாடும் இழப்பீட்டுச் செலுத்துதல் கூறுகள் அமுலாக்கப்பட்டதோடு அதன்கீழ் ஏறக்குறைய 40 மில்லியன் ரூபா இழப்பீட்டுத்தொகை விடுவிக்கப்பட்டது.

11) 2012 ஆம் ஆண்டில் சபையின் பொறுப்பு என்றவகையில் விடுவிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் அளவு 100 மில்லியன் ரூபாவாகும். அது கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

## இழப்பீடு செலுத்தல்

| **காப்புறுதித் திட்டம்** | **செலுத்திய இழப்பீடு (மில். ரூபா)** |
|---|---:|
| நெற்பயிர்க் காப்புறுதி | 75,770,287.50 |
| சோளப் பயிர்க் காப்புறுதி | 9,456,453.05 |
| பிற பயிர்க் காப்புறுதி | 6,341,753.10 |
| கால்நடைக் காப்புறுதி | 7,818,212.51 |
| பொதுக் காப்புறுதி | 979,359.55 |
| **கூட்டுத்தொகை** | **100,366,065.71** |

**விசேட கருத்திட்டங்கள்**

காப்புறுதிப் பணிகளை மேற்கொள்ளும்போது தோன்றுகின்ற சிக்கல்கள் மற்றும் இழப்பீட்டினை விடுவிக்கும்போது தோன்றுகின்ற சிக்கல்களைப் போன்றே காப்புறுதி வழிமுறைகளை அமுலாக்குகையில் இருக்கவேண்டிய அடிப்படை புரிந்துணர்வு பற்றி உத்தயோகத்தர்களுக்கு விழிப்பூட்டும் பயிற்சி செயலமர்வுகள் மாவட்டங்கள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடியவாறு நடத்தப்பட்டன.

GIS தொழில்நுட்பத்தைக் காப்புறுதிப் பணிகளுக்குப் பாவிக்க இயலுமா என்பதைக் கண்டறிவதற்காக தொடங்கப்பட்ட முன்னோடிக் கருத்திட்டத்தை முடிவுறுத்துதல்.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக இடம்பெறுகின்ற அபாயநேர்வுக்கு எதிராக காப்புறுதி செய்வதற்கான காப்புறுதித் திட்டம் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டது. அதனோடு தொடர்புடைய அடிப்படை நிதியமொன்றுடன் இந்த செயற்றிட்டம் அமுலாக்கப்பட அங்கீகரிக்கப்பட்டபோதிலும் அடிப்படை நிதியமொன்றினை ஆரம்பிக்க இயலாமல் போனமையால் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க இயலாமல் போயிற்று. உரமானிய வேலைத்திட்டத்திற்கு சமாந்திரமாக காப்புறுதிச் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துகின்ற வாய்ப்பு சபையிடமிருந்து கைநழுவிச்சென்ற வருடமெனக் குறிப்பிடவேண்டும்.

# கமக்காரர் ஓய்வூதியப் பிரிவு

## கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

## மற்றும்

## கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

**<u>கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்  மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்</u>**

கமக்காரர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பானதாக அமைப்பதற்காக 1987 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது 25 ஆண்டுகள் நிறைவடைகின்றது. இந்த செயற்றிட்டத்தில் சேர்ந்துள்ள மொத்த உதவுதொகை செலுத்துநர்களின் எண்ணிக்கை 959, 254 ஆக அமைவதோடு 2012 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஓய்வூதியம் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை 90,573 ஆக விளங்கியது.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மூலமாக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக செலுத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஓய்வூதியத் தொகையைப் பார்க்கிலும் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தைச் செலுத்த மேற்கொண்ட தீர்மானத்தினால் 2010 இன் பின்னரைப் பகுதியில் கமக்கார்ர் ஓய்வூதிய நிதியமும் பூச்சிய நிலையை அடைந்தது. அத்தருணத்திலிருந்து 2011 திசெம்பர் மாதம் வரை பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் பொது திறைசேரியின் அனுமதியின்பேரில் சபையினால் பேணிவரப்பட்ட பிற நிதியங்ளைப் பயன்படுத்தி ஓய்வூதியத்தைச் செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் 2012 ஆம் ஆண்டில் ஓய்வூதியத்தைச் செலுத்த அவசியமான நிதியேற்பாடுளைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் 2012 ஆம் ஆண்டில் இப்பயனாளிகளுக்கு உரிய ஓய்வூதியத்தைச் செலுத்த ஆற்றல் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது 60 வயதினைப் பூர்த்தி செய்து ஓய்வூதியம் செலுத்தப்படாத நிலையில் புதிதாக ஓய்வூதியப் பதிவேட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 1230 உதவுதொகை செலுத்துநர்களுக்காக ஆரம்பகட்ட நடவடிக்கையாக ரூ. 6000/= வீதம் ஓய்வூதியக் கொடுப்பனவு 2012 மார்ச் மாதத்தில் இருந்து செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தோடு, இவர்களுக்காக செலுத்திய பணத்தொகை 7.3 மில்லியன் ரூபாவாகும். இதற்கிணங்க இத்திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து 2012 வரை 6877 மில்லியன் ரூபா பணத்தொகை ஓய்வூதியம் பெறுநர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் தோன்றியுள்ள நிதிநெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வினைப் பெற்றுக்கொடுத்து செயற்றிட்டம் செயலற்றுப்போகாமல் பேணிவரும்பொருட்டு நிதி, திட்டமிடல் அமைச்சின் ஆலோசனையின்பேரில் இதற்கான தீர்வாக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்கிணங்க நிரந்தர தீர்வினை அடைவதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள சபை ஆவன செய்துள்ளது.

**<u>இறப்பு மற்றும் ஏலாமை நன்மைகளைச் செலுத்துதல்:-</u>**

2012 ஆம் ஆண்டில் கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த அவசியமான நிதியேற்பாடுளை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் சிக்கலான நிலைமை தோன்றியபோதிலும் இந்த செயற்றிட்டத்தின் உதவுதொகை செலுத்துநராகிய பின்னர் இறந்த மற்றும் ஏலாமைநிலையுற்ற உதவுதொகை செலுத்துநர்களுக்கு உரித்தான நன்மைகள்

அனைத்தையும் முறைப்படி செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் , 2012 ஆம் ஆண்டில் இறப்புப் பணிக்கொடையாக 444 உதவுதொகை செலுத்துநர்களுக்கு ரூ. 7,012,987/= பணத்தொகையும் ஏலாமைநிலையுற்ற **05** உதவுதொகை செலுத்துநர்களுக்கு ஏலாமை நன்மையாக ரூ. 135,827/= பணத்தொகையும் பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (பின்னிணைப்பு 01 )

**தேறிய தவணைப் பணத்தையும் வட்டியையும் செலுத்துதல் :-**

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்று தவணைப் பணத்தை தொடர்ச்சியாக செலுத்தாமையால் அங்கத்துவமிழந்த மற்றும் தொழில் கிடைத்ததனால் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து விலகிய 455 உதவுதொகை செலுத்துநர்களுக்காக ரூ. 4,569,943/= பணத்தொகையும் தேறிய தவணைப்பணமாக இவ்வாண்டில் பயனாளிகளுக்குச் செலுத்த சபை நடவடிக்கை எடுத்திருந்தது. ( பின்னிணைப்பு 02)

**கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக கமக்காரர் ஓய்வூதியம் பெறுநர்களின் தகவல்களைத் திரட்டுவதற்கான மதிப்பாய்வு:-**

கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் சம்பந்தமான நிதிசார் வாய்ப்புவளம் பற்றிய நெருக்கடிநிலையினை எதிர்நோக்கியுள்ளதால் இச்செயற்றிட்டத்தில் ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியம் பெறுநர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார்களா என்பது பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய மதிப்பாய்வொன்று கிராம அலுவலர்களினதும் பிரதேச செயலாளர்களினதும் ஒத்துழைப்புடன் 2012 ஆம் ஆண்டின் பெப்ருவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த மதிப்பாய்வின்போது ஒட்டுமொத்த ஓய்வூதியம் பெறுநர்களில் 88 சதவீதமானோர் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

**கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்:-**

2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் அங்கத்துவம் பெற்றுள்ள மொத்த கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 68,054 ஆக அமைந்ததோடு 2185 ஓய்வூதியம் பெறுநர்களுக்காக ரூ. 30,068,226/= பணத்தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டுள்ளது. 390 தபால் நிலையங்கள் மூலமாக இவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டது. ( பின்னிணைப்பு 3)

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்றவர்களில் இறந்த 65 பேர்களுக்காக ரூ. 919,000 இறப்புப் பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ளது.

**<u>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்</u>**

**<u>தேறிய தவணைப்பணத்தையும் வட்டியையும் செலுத்துதல் - 2012</u>**

| | | |
|---|---|---|
| கொழும்பு | 15 | 109502 |
| கம்பஹா | 36 | 316862 |
| களுத்தறை | 25 | 217676 |
| கண்டி | 29 | 340215 |
| மாத்தளை | 21 | 191764 |
| நுவரெலியா | 19 | 252505 |
| காலி | 48 | 442465 |
| மாத்தறை | 25 | 219480 |
| அம்பாறை | 7 | 54139 |
| வளவை | 3 | 34799 |
| புத்தளம் | 22 | 179677 |
| குருநாகல் | 29 | 310250 |
| மாகோ | 9 | 151839 |
| அநுராதபுரம் | 10 | 117199 |
| பொலநறுவை | 14 | 160333 |
| மொனறாகல | 4 | 65583 |
| அம்பாந்தோட்டை | 26 | 267785 |
| இரத்தினபுரி | 38 | 392288 |
| மகாவலி “எச்” | 1 | 8103 |
| பதுளை | 28 | 302219 |
| கேகாலை | 23 | 228402 |
| மகாவலி ”ஜீ” | 23 | 206858 |
| **மொத்தம்** | 455 | 4569943 |

| | மாவட்டம் | 2011.12.31 இல் எண்ணிக்கை | ஓய்வூதியம் பெறுநர்களுக்கு செலுத்திய மொத்தத் தொகை | 1992 இல் இருந்து இற்றைவரை செலுத்திய தொகை | தபால் நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 3606 | 3,671,498.00 | 257,057,499.00 | 167 |
| 2 | களுத்துறை | 6985 | 7,150,325.00 | 508,813,182.00 | 267 |
| 3 | கம்பஹா | 5882 | 5,977,524.00 | 435,104,209.00 | 165 |
| 4 | கண்டி | 8850 | 9,042,635.00 | 702,995,185.00 | 382 |
| 5 | மாத்தளை | 2392 | 2,465,610.00 | 180,284,097.00 | 112 |
| 6 | நுவரெலியா | 2498 | 2,567,154.00 | 183,363,987.00 | 127 |
| 7 | காலி | 8760 | 8,966,913.00 | 744,928,857.00 | 261 |
| 8 | மாத்தறை | 5837 | 5,954,299.00 | 433,463,775.00 | 240 |
| 9 | அம்பாந்தோட்டை | 4438 | 4,558,663.00 | 311,045,693.00 | 136 |
| 10 | யாழ்ப்பாணம் /கிளிநொச்சி | 1544 | 1,622,609,00 | 136,906,922.00 | 147 |
| 11 | மன்னார் | 32 | 33,019.00 | 1,518,697.00 | 9 |
| 12 | வவுனியா | 235 | 246,579.00 | 23,469,774.00 | 42 |
| 13 | முல்லைத்தீவு | 59 | 61,942.00 | 7,448,883.00 | 14 |
| 14 | மட்டக்களப்பு | 588 | 613,130.00 | 51,680,431.00 | 69 |
| 15 | அம்பாறை | 2426 | 2,513,944.00 | 194,418,169.00 | 111 |
| 16 | திருகோணமலை | 531 | 547,043.00 | 42,610,286.00 | 45 |
| 17 | குருநாகல்-மாகோ | 10094 | 10,357,950.00 | 716,418,299.00 | 364 |
| 18 | புத்தளம் | 3075 | 3,176,364.00 | 226,819,681.00 | 135 |
| 19 | அநுராதபுரம்/மகாவலி எச் | 3941 | 4,078,390.00 | 293,140,935.00 | 213 |
| 20 | பொலநறுவை பி-ஜீ | 3031 | 3,127,218.00 | 231,769,380.00 | 203 |
| 21 | பதுளை மகாவலி சீ | 3650 | 3,743,157.00 | 278,656,007.00 | 216 |
| 22 | மொனறாகலை | 2746 | 2,861,553.00 | 216,690,559.00 | 94 |
| 23 | இரத்தினபுரி/உடவளவை | 4162 | 4,269,904.00 | 318,550,773.00 | 211 |
| 24 | கேகாலை | 5211 | 5,306,231.00 | 372,950,155.00 | 235 |
| | **மொத்தம்** | 90573 | 92,913,654.00 | 6,870,105,435.00 | 3965 |

**கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

**2012 சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை இறப்பு மற்றும் ஏலாமை நலன் செலுத்துதல்**

| | மாவட்டம் | இறப்பு எண்ணிக்கை | செலுத்திய தொகை ரூபா | ஏலாமை எண்ணிக்கை | செலுத்திய தொகை ரூபா | மொத்த எண்ணிக்கை கூட்டுத்தொகை | மொத்த தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 08 | 107583.00 | - | - | 8 | 107,583.00 |
| 2 | கம்பஹா | 29 | 506,132.00 | - | - | 29 | 506,132.00 |
| 3 | களுத்துறை | 20 | 279,645.00 | 2 | 43,654.00 | 22 | 323,299.00 |
| 4 | கண்டி | 38 | 551,612.00 | 1 | 32,173.00 | 39 | 583,785.00 |
| 5 | மாத்தளை | 05 | 90,770.00 | - | - | 5 | 90,770.00 |
| 6 | நுவரெலியா | 15 | 204,451.00 | - | - | 15 | 204,451.00 |
| 7 | காலி | 36 | 480,613.00 | - | - | 36 | 480,613.00 |
| 8 | மாத்தறை | 12 | 199,221.00 | - | - | 12 | 199,221.00 |
| 9 | அம்பாந்தோட்டை | 23 | 403,217.00 | 1 | 30,000.00 | 24 | 433,217.00 |
| 10 | யாழ்ப்பாணம் | 08 | 83,000.00 | - | - | 8 | 83,000.00 |
| 11 | மன்னார் | 01 | 30,199.00 | - | - | 1 | 30,199.00 |
| 12 | வவுனியா | 04 | 63,000.00 | - | - | 4 | 63,000.00 |
| 13 | முல்லைத்தீவு | 00 | - | - | - | - | - |
| 14 | மட்டக்களப்பு | 04 | 64,372.00 | - | - | 4 | 64,372.00 |
| 15 | அம்பாறை | 01 | 24,563.00 | - | - | 1 | 24,563.00 |
| 16 | திருகோணமலை | 01 | 8,000.00 | - | - | 1 | 8,000.00 |
| 17 | புத்தளம் | 19 | 334,535,00 | - | - | 19 | 334,535.00 |
| 18 | குருநாகல் | 35 | 513,654.00 | - | - | 35 | 513,654.00 |
| 19 | மாகோ | 30 | 479,505.00 | - | - | 30 | 479,505.00 |
| 20 | அநுராதபுரம் | 18 | 306,536.00 | - | - | 18 | 306,536.00 |
| 21 | பொலநறுவை | 08 | 161,441.00 | - | - | 8 | 161,441.00 |
| 22 | மொனறாலை | 22 | 297,528.00 | - | - | 22 | 297,528.00 |
| 23 | பதுளை | 18 | 300,593.00 | 1 | 30,000.00 | 19 | 330,593.00 |
| 24 | இரத்தினபுரி | 26 | 488,729,00 | - | - | 26 | 488,729.00 |
| 25 | கேகாலை | 23 | 405,662.00 | - | - | 23 | 405,662.00 |
| 26 | மகாவலி எச் | 20 | 298,360.00 | - | - | 20 | 298,360.00 |
| 27 | மகாவலி பி | 10 | 194,207.00 | - | - | 10 | 194,207.00 |
| 28 | மகாவலி சீ | 07 | 80,000.00 | - | - | 7 | 80,000.00 |
| 29 | மகாவலி ஜீ | 02 | 30,000.00 | - | - | 2 | 30,000.00 |
| 30 | உடவளவ | 01 | 25,859.00 | - | - | 1 | 25,859.00 |
| | **மொத்தம்** | 444 | 7,012,987.00 | 5 | 135,827.00 | 449 | 7,148,814.00 |

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**
**2012 ஆம் ஆண்டில் இறப்பு மற்றும் ஏலாமை நலன் செலுத்துதல்**

| மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு | இறப்புப் பணிக்கொடை செலுத்துதல் | | | ஏலாமை நலன் செலுத்துதல் | | |
|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் எண்ணிக்கை | பணத்தொகை | | பூரண | பகுதி | பணத்தொகை |
| களுத்துறை | - | - | | - | - | - |
| காலி | 2 | 14,000.00 | - | - | - | - |
| மஹவெவ | 3 | 38,000.00 | - | - | - | - |
| மாத்தறை | 8 | 121,000.00 | - | - | - | - |
| கொழும்பு | 1 | 10,000.00 | - | - | - | - |
| தங்காலை | 1 | 10,000.00 | - | - | - | - |
| புத்தளம் | - | - | - | - | - | - |
| நீர்கொழும்பு | 9 | 89,000.00 | - | - | - | - |
| மட்டக்களப்பு | 2 | 16,000.00 | - | - | - | - |
| திருகோணமலை | - | - | - | - | - | - |
| மன்னார் | 3 | 38,000.00 | | - | - | - |
| கல்முனை | 5 | 63,000.00 | | - | - | - |
| முல்லைத்தீவு | 1 | 6,000.00 | | - | - | - |
| கிளிநொச்சி | 18 | 358,000.00 | | - | - | -- |
| யாழ்ப்பாணம் | 10 | 126,000.00 | | - | - | - |
| நன்னீர்ப் பரப்புகள் | | | | | | |
| நுவரெலியா | - | - | - | - | - | - |
| பொலநறுவை | - | - | - | - | - | - |
| இரத்தினபுரி | - | - | - | - | - | - |
| மொனறாகலை | - | - | - | - | - | - |
| குருநாகல் | - | - | - | - | - | - |
| அநுராதபுரம் | - | - | - | - | - | - |
| மாத்தளை | - | - | - | - | - | - |
| கண்டி | - | - | - | - | - | - |
| கேகாலை | - | - | - | - | - | - |
| பதுளை | - | - | - | - | - | - |
| வவுனியா | - | - | - | - | - | - |
| மட்டக்களப்பு நன்னீர் | 2 | 30,000.00 | | - | - | - |
| மொத்தம் | **65** | **919,000.00** | | - | - | - |

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

**2012.12.31 இல் சேர்த்துக்கொள்ளல்**

| மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு | வயதுப்பிரிவுக்கிணங்க உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளல் | | | | | | கடந்த மாதத்தில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை | 2012 மொத்த உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 18-29 | 30-35 | 36-45 | 46-50 | 51-54 | 55-59 | | |
| களுத்துறை | 1213 | 721 | 772 | 197 | 105 | 59 | 3067 | 3067 |
| காலி | 1082 | 676 | 840 | 221 | 118 | 95 | 3032 | 3032 |
| மஹவெவ | 3251 | 1700 | 2035 | 611 | 254 | 239 | 8090 | 8090 |
| மாத்தறை | 1747 | 973 | 1223 | 345 | 197 | 164 | 4647 | 4649 |
| கொழும்பு | 576 | 359 | 478 | 140 | 62 | 38 | 1653 | 1653 |
| தங்காலை | 2505 | 1384 | 1622 | 407 | 198 | 166 | 6282 | 6282 |
| புத்தளம் | 2166 | 1156 | 1222 | 255 | 107 | 61 | 4967 | 4967 |
| நீர்கொழும்பு | 2538 | 1597 | 2155 | 732 | 415 | 375 | 7812 | 7812 |
| மட்டக்களப்பு | 2230 | 1360 | 1603 | 544 | 259 | 262 | 6258 | 6258 |
| திருகோணமலை | 654 | 516 | 550 | 129 | 81 | 78 | 2008 | 2008 |
| மன்னார் | 1991 | 1145 | 1208 | 387 | 199 | 199 | 4938 | 5129 |
| கல்முனை | 1564 | 1108 | 1513 | 478 | 242 | 206 | 5095 | 5111 |
| முல்லைத்தீவு | 88 | 79 | 141 | 50 | 27 | 44 | 429 | 429 |
| கிளிநொச்சி | 519 | 340 | 540 | 250 | 185 | 183 | 2017 | 2017 |
| யாழ்ப்பாணம் | 2091 | 1037 | 1360 | 633 | 360 | 576 | 6057 | 6057 |
| **நன்னீர் பரப்புகள்** | | | | | | | | 66561 |
| நுவரெலியா | 29 | 28 | 47 | 7 | 1 | 3 | 115 | 115 |
| பொலநறுவை | 45 | 35 | 27 | 11 | 2 | 1 | 121 | 121 |
| இரத்தினபுரி | 27 | 15 | 9 | 1 | 3 | | 55 | 55 |
| மொனறாகலை | 17 | 14 | 10 | 1 | | | 42 | 42 |
| குருநாகல் | 45 | 24 | 24 | 1 | | 2 | 96 | 96 |
| அநுராதபுரம் | 169 | 81 | 84 | 17 | 7 | 5 | 363 | 363 |
| மாத்தளை | 31 | 14 | 23 | 5 | 2 | 3 | 78 | 78 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கண்டி | 13 | 12 | 25 | 5 | 3 | 3 | 61 | 61 |
| கேகாலை | 1 | 1 | 2 | | | | 4 | 4 |
| பதுளை | 59 | 33 | 33 | 3 | | 3 | 131 | 131 |
| வவுனியா | 59 | 33 | 41 | 15 | 4 | | 152 | 152 |
| மட்டக்களப்பு நன்னீர் | 84 | 52 | 67 | 27 | 20 | 25 | 275 | 275 |
| கூட்டுத் தொகை | | | | | | | | 1493 |
| **மொத்தம்** | 24794 | 14493 | 17654 | 5472 | 2851 | 2790 | 67845 | 68054 |

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்**

**கடற்றொழிலாளர் ஓய்வூதியம் செலுத்துதல் – 2012 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை**

| மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பிரிவு | ஓய்வூதியம் செலுத்துதல் | | தபால் நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | உறுப்பினர் எண்ணிக்கை | பணத் தொகை | |
| களுத்துறை | 61 | 846,222.00 | 13 |
| காலி | 78 | 1,039,418.00 | 22 |
| மஹவெவ | 223 | 3,077,496.00 | 21 |
| மாத்தறை | 227 | 2,989,928.00 | 18 |
| கொழும்பு | 39 | 504,448.00 | 10 |
| தங்காலை | 123 | 1,671,338.00 | 27 |
| புத்தளம் | 33 | 466,238.00 | 11 |
| நீர்கொழும்பு | 395 | 5,361,791.00 | 33 |
| மட்டக்களப்பு | 230 | 2,974,732.00 | 57 |
| திருகோணமலை | 62 | 837,826.00 | 14 |
| மன்னார் | 196 | 2,472,204.00 | 16 |
| கல்முனை | 225 | 3,037,228.00 | 37 |
| முல்லைத்தீவு | - | | -- |
| கிளிநொச்சி | 21 | 712,442,00 | 12 |
| யாழ்ப்பாணம் | 240 | 4,319,082.00 | 43 |
| **நன்னீர் பரப்புகள** | | | |
| நுவரெலியா | 8 | 117,004.00 | 3 |
| பொலநறுவை | 1 | 12,000.00 | 1 |
| இரத்தினபுரி | 1 | 14,196.00 | 1 |
| மொனறாகலை | - | 8,000.00 | 1 |
| குருநாகல் | 1 | 14,004.00 | 1 |
| அநுராதபுரம் | 2 | 26,798.00 | 3 |
| மாத்தளை | 4 | 52,476.00 | 4 |
| கண்டி | 3 | 39,000.00 | 3 |
| கேகாலை | - | | - |
| பதுளை | 2 | 24,000.00 | 2 |
| வவுனியா | - | | - |
| மட்டக்களப்பு நன்னீர் | 10 | 125,996.00 | 6 |
| **மொத்தம்** | 2185 | 30,743,867.00 | 359 |

# நிர்வாக மற்றும் மனித வளங்கள் பிரிவு

**<u>நிர்வாக மற்றும் மனிதவளங்கள் பிரிவு</u>**

**<u>பதவியணி</u>**

2012.12.31 ஆந் திகதியன்று கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பதவியணி கீழே காட்டடப்பட்டவாறு அமைந்நது.

**<u>பதவியணி உள்ளடக்கம்</u>**

| சேவைப் பிரிவு | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ள எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| சிரேட்ட முகாமைத்துவம் | | | | |
| HM | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | - |
| HM | பணிப்பாளர் | 5 | 1 | 4 |
| முகாமைத்துவம் | | | | |
| MM | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் | 45 | 32 | 13 |
| கனிஷ்ட முகாமைத்துவம் | | | | |
| JM | நிர்வாக உத்தியோகத்தர் | 2 | - | 2 |
| | முறைமை நிர்வாகி | 1 | - | 1 |
| | நிதிசார் உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| | திட்டமிடல் உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| இணையான உத்தியோகத்தர்கள் | | | | |
| ASS.O | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 55 | 38 | 17 |
| | வழங்கல் உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| | உள்ளக்க கணக்காய்வு உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | | | | |
| MA - Tech | போக்குவரத்து உதவியாளர் | 1 | 1 | - |
| | செயலாளர் | 1 | - | 1 |
| | புத்தகம் பதியுனர் | 4 | 1 | 3 |
| | மென்பொருள்/வன்பொருள் தொழில்நுட்பக் கலைஞர் | 1 | - | 1 |
| | தொழில்நுட்பக் கலைஞர் (செவிப்புல/கட்புல) | 1 | - | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) | | | | |
| MA - NonTech | முகாமைத்துவ உதவியாளர் | 220 | 175 | 45 |
| ஆரம்ப (செயல்நுணுக்க) | | | | |
| PL - Skilled | சாரதி | 38 | 22 | 16 |
| ஆரம்ப (செயல்நுணுக்கமல்லாத) | | | | |
| PL - Non Skilled | அலுவலக உதவியாளர் | 42 | 34 | 8 |
| | | **421** | **306** | **115** |

# 2012.12.31 ஆக் திகதியன்று பதவியணிப் பகுப்பாய்வு

## பதவியணி ஆண்/பெண் பகுப்பாய்வு

ஆண் - 190

பெண் - 116

மொத்தம் - 306




## வயதுப் பகுப்பாய்வு

| வயதுப் பிரிவு | ஊழியர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 56 - 60 | 7 | 2% |
| 51 – 55 | 80 | 26% |
| 46 – 50 | 60 | 20% |
| 41 – 45 | 35 | 11% |
| 36 – 40 | 49 | 16% |
| 31 – 35 | 48 | 16% |
| 30 இற்கு குறைந்த | 27 | 9% |
| மொத்தம் | 306 | 100% |




## சேவைக் காலத்திற்கிணங்க பகுப்பாய்வு

| வருடம் | ஊழியர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 30 இற்கு மேல் | 10 | 2% |
| 26 – 30 | 40 | 14% |
| 21 – 25 | 72 | 23% |
| 16 – 20 | 26 | 8% |
| 15இற்கு குறைவான | 158 | 53% |
| மொத்தம் | 306 | 100% |




## 2012 ஆம் ஆண்டில் ஓய்வுபெறுதலும் பதவி விலகலும்

ஆண் - 10

பெண் - 07

மொத்தம்- 17

## 2012 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பும் பதவியுயர்வும்

வெளிவாரி ஆட்சேர்ப்பு- கிடையாது

உள்ளக ஆட்சேர்ப்பு - 04

பதவியுயர்வு - 01

**<u>ஊழியர் பயிற்சியும் கல்விச் செயற்பாடுகளும்</u>**

2012 ஆம் ஆண்டில் நிதி, திட்டமிடல் அமைச்சின் மிலோதா நிறுவனத்தின் சம்பளப் பதிவேடுகளைத் தயாரித்தல் தொடர்பான குறுங்காலப் பாடநெறிக்காக திருமதி. சந்திரிக்கா குலரத்ன மற்றும் திருமதி. ஆர் பீ. லியனகே ஆகியோர் பங்கேற்கச் செய்விக்கப்பட்டதோடு நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஹைபிறிட் வாகனத் தொழில்நுட்பம் தொடர்பான குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சிக்காக போக்குவரத்து உதவியாளர்திர் கல்ப ரொஷான் குணதிலக பங்கேற்கச் செய்விக்கப்பட்டார்.

**<u>ஊழியர் நலனோம்புகை</u>**

சபை ஊழியர்களுக்காக காலையிலும் மாலையிலும் தேநீர் வழங்கும் வேலைத்திட்டமும் மருத்துவக் காப்புறுதித் திட்டமும் இவ்வாண்டிலும் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக சபை ஊழியர்களை உள்ளடக்கிய கிரிக்கெற் கழகத்தினால் 2012 மே மாதத்தில் மாவட்ட அலுவலக அணிக்கும் தலைமையக அணிக்கும் இடையிலான கண்காட்சி கிரிக்கெற் போட்டியொன்றும், குருநாகல் மக்கள் வங்கி மாவட்ட அணியுடன் நட்புறவுக் கிரிக்கெற் போட்டியொன்றும், இலங்கை உரக் கூட்டுத்தாபன அணியுடன் நட்புறவுக் கிரிக்கெற் போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் 2012 சித்திரைப் பெருவிழா அனைத்து மாவட்ட அலுவலகங்களினதும் பங்கேற்புடன் 2012 ஏப்பிறல் மாதம் 28 ஆம் திகதி நடத்தப்பட்டது.

**<u>கொள்வனவு வழங்கல் மற்றும் போக்குவரத்து துறை</u>**

**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

**2014திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

**05.03 செலவுகள்**

01. ஆண்டுக்கான மிகை அல்லது பற்றாக்குறையினைக் கணிப்பிடுகையில் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் செயற்பாடுகளுக்காக உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருமானத் திற்கு எதிராக அட்டுறு அடிப்படையில் எடுக்கப்பட்டு கணிப்பிடப் பட்டுள்ளது.

02. நேரில் செலவுகள் கீழே குறிப்பிடப்பட்ட சதவீதங்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது. இச்சதவீதங்கள் 401/04 ஆம் இலக்க பணிப் பாளர் சபை பத்திரத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

| **செலவுகள்** | **சதவீதம்** |
|---|---|
| வாடகையும் தொலைபேசியும் | 5%\ |
| தபால் கட்டணமும் நீர்வரியும் | 5% |
| மின்சாரம் | 5% |
| அலுவலக சாதனப் பராமரிப்பு | 5% |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 3% |
| எரிபொருள் | 2% |
| காகிதாதிகள் | 2% |
| சீருடைகள் | 2% |
| பாதுகாப்புச்செலவினம் | 5% |
| கணனிச் செலவுகள் | 5% |

## 06 எதிர்பாரா நிகழ்வுகள்

### கிடைக்கவேண்டிய வட்டி

சபையினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இலங்கை வங்கிக்கு எதிராக 1996 ஆம் ஆண்டில் வட்டியை இழந்தமை தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வழக்கு இலக்கம் | பெறுமதி |
|---|---|
| MR 21843 | 1,454,670.84 |
| MR 21844 | 1,172,602.46 |
| MR 21845 | 2,784,657.55 |

சபைக்கு சாதகமாக வழக்கு தீர்ப்பு கிடைத்துள்ளபோதிலும் தீர்ப்புக்கு எதிராக இலங்கை வங்கிமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை**
**கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**
**2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

## 07.காசுப்பாய்வு

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09ற்கு அமைவாக நேரில் முறையைப் பயன்படுத்தியே காசுப்பாய்வுக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 08 ஐந்தொகைத் தேதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் தேதிக்குப் பின்னரான அளவுசார் ரீதியான அனைத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டதோடு தேவையான இடங்களில் சீராக்கப்பட்டும் வெளிப்படுத்தப் பட்டும் உள்ளன.

**<u>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை</u>**

**<u>கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்</u>**

**<u>2012.12.31 இல் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்</u>**

**<u>குறிப்பு 01</u>**

2012 திசெம்பர் 31 இல் ஆதனம் ,சாதனம் ,பொறித்தொகுதி

| விபரம் | அலுவலக சாதனம் | நலன்புரி சாதனம் | தளபாடம், பொருத்திகள் | கணனி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2012.01.01 இல் கிரயம் | 380,728.50 | 1,325.00 | 50,376.92 | 259,515.00 | 691,945.42 |
| சேர்க்கப்பட்டது-ஆண்டுக்காகசேர்த்தவை | - | - | - | - | - |
| கழி – அகற்றப்பட்வை | - | - | - | - | - |
| 2012.12.31 இல் கூட்டுமொத்தம் | **380,728.50** | **1,325.00** | **50,376.92** | **259,515.00** | **691,945.42** |
| தேய்மான வீதம் | 10% | 10% | 10% | 20% | |
| 2012.01.01 இல் திரண்டதேய்மானம் | 380,091.30 | 1,325.00 | 50,376.92 | 255,959.00 | 687,752.22 |
| கழி – அகற்றப்பட்டவை | - | - | - | - | - |
| ஆண்டுக்கான தேய்மானம் | 318.60 | | | 908.00 | 1,226.60 |
| மொத்த தேய்மானம் | **380,409.90** | **1,325.00** | **50,376.92** | **256,867.00** | **688,978.82** |
| தேறிய பெறுமதி | **318.60** | - | - | **2,648.00** | **2,966.60** |

<u>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை</u>

<u>கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்</u>

<u>2012.12.31 இல் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்</u>

<u>குறிப்பு 02 -கையிருப்பு</u>

| | 31.12.2012 | 31.12.2011 |
|---|---|---|
| அச்சிடல் பொருட்கள் | 170,081.30 | 186,363.08 |
| | **170,081.30** | **186,363.08** |
| <u>குறிப்பு 03 – கிடைக்கவேண்டிவை</u> | | |
| கமத்தொழில் காப்புறுதி நிதியம்- | | |
| கமக். ஓய். திட்டத்திலிருந்து வருமதி | 608,316,450.94 | 553,014,955.94 |
| கடற்றொழில் திணைக்களத்திடமிருந்து வருமதியான பணம் | 1,500,000.00 | 1,500,000.00 |
| இறப்புப் பணிக்கொடை முற்பணம் | 50,000.00 | 50,000.00 |
| வருமதியான தணைப்பணம் | 259,825.00 | 317,351.00 |
| | **610,126,275.94** | **554,882,306.94** |
| <u>குறிப்பு 04 – கிடைக்கவேண்டிய வட்டி</u> | | |
| திறைசேரி உண்டியல்- (இ/வ | )94,275.97 | 285,833.05 |
| | **94,275.97** | **285,833.05** |
| <u>குறிப்பு 05 – முதலீடுகள்</u> | | |
| திறைசேரி உண்டியல்- (இ/வ) | 35,376,535.64 | 62,809,285.28 |
| | **35,376,535.64** | **62,809,285.28** |
| <u>குறிப்பு 06– வங்கியிலுள்ள காசு</u> | | |
| கணக்கு இலக்கம் 164790 – இலங்கை வங்கி யூனியன்பிளேஸ் | 156,865.23 | 113,793.23 |
| கணக்கு இலக்கம் 164795 – இலங்கை வங்கி யூனியன்பிளேஸ் | 2,303,190.35 | 734,534.95 |
| | 2,460,05.58 | 848,328.18 |
| <u>குறிப்பு 07– வங்கியிலுள்ள காசு</u> | | |
| முன்கொண்டுவந்த மீதி | 1,374,434,361.89 | 1,217,056.064.04 |
| முந்திய ஆண்டுக்கான சீராக்கல்- | | - |
| | 1,374,434,361.89 | 1,217,056.064.04 |
| ஆண்டில் சேர்த்தவை | 154,045,977.15 | 158,197,437.73 |
| <u>தொழிற்பாட்டு மிகை</u> | <u>647,199.48</u> | <u>819,139.88</u> |
| <u>வருமான –செலவுக் கணக்கின்</u> | | |
| <u>மிகை</u> | <u>154,693,176.63</u> | <u>157,378,297.85</u> |
| | **1,529,127,538.52** | **1374434361.89** |

**<u>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை</u>**

**<u>கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்</u>**

**<u>2012.12.31 இல் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்</u>**

| | 31.12.2012 | 31.12.2011 |
|---|---|---|
| **<u>குறிப்பு 08 – குழும ஆயுட் காப்புறுதி நிதியம்</u>** | | |
| முன்கொண்டுவந்த மீதி | 18,207,786.70 | 17,699,206.70 |
| **<u>சேர்த்தவை</u>** | | |
| ஆண்டின் பங்களிப்பு | 1,649,340.00 | 1,595,580.00 |
| **<u>கழித்தவை</u>** | | 10,000.00 |
| ஏலாமைப் பணிக்கொடைசெலுத்துதல் | | |
| - | 658,797,00 | 1,077,000.00 |
| இறப்புப் பணிக்கொடைசெலுத்துதல் | 658,797,00 | 1,087,000.00 |
| | 990,543.00 | 508,580.00 |
| | **19,198,329.70** | **18,207,786.70** |

**<u>குறிப்பு 09 –செலுத்தவேண்டியவை</u>**

| | | |
|---|---|---|
| ஓய்வூதியம் செலுத்துதல் | 310,059.00 | 2,226,246.0 |
| கமத்தொழில் காப்புறுதி திட்டத்திற்கு | 5,596,546,85 | 1,526,813.92 |
| மீளச்செலுத்தவேண்டிய உதவுதொகைப் பணம் | 189,740.00 | 252,157.00 |
| செலுத்தவேண்டிய இறப்புப் பணிக்கொடை | 316,000.00 | 456,000.00 |
| செலுத்தவேண்டிய ஏலாமை நன்மைகள்- | | |
| செலுத்வேண்டிய – ஊக்குவிப்புப்படி | 64,371.00 | 69,067,00 |
| மீளளிக்கவேண்டிய உறுப்பினர் பங்களிப்பு மீதான | | |
| வட்டி | 170,713.00 | 181,496.00 |
| செலுத்தவேண்டிய ஓய்வூதியத் தரகு- | | 28,695.00 |
| | **6,647,429.85** | **4,740,474.92** |

| | | |
|---|---|---|
| | 155000.00 | 75000.00 |
| | 17000.00 | 17000.00 |
| | 1059025.00 | 959025.00 |
| | **1231025.00** | **1051025.00** |

**<u>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை</u>**

**<u>கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்</u>**

**<u>2012.12.31 இல் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்</u>**

**<u>குறிப்பு 11 - நிர்வாகச்செலவுகள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளமும் ஊதியமும் | 1,846,497.68 | 1,789,702.23 |
| ஊழியர்சேமலாப நிதியம் | 221,579.73 | 214,764.27 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 55,390.81 | 53,691.07 |
| மேலதிகநேரப்படி | 14,539.56 | 14,947.48 |
| மதியுரைக் குழுப் படிகள் | 4,500.00 | 19,500.00 |
| விசேட படிகள் | 352,428.00 | 442,209.00 |
| பணிக்கொடை | 142,632.00 | 112,207.50 |
| எரிபொருள் | 125,789.06 | 104,529.82 |
| காகிதாதிகள் | 54,780.44 | 57,209.44 |
| அச்சிடல் | 96,281.78 | 182,590.39 |
| சீருடைகள் | 300.00 | 4,675.30 |
| அலுவலக வாடகை | 608,603.90 | 553,783.30 |
| தொலைபேசி | 131,819.33 | 126,638.26 |
| தபால் கட்டணம் | 49,495.64 | 60,910.81 |
| நீர்க் கட்டணம் | 14,927.39 | 19,221.14 |
| பாதுகாப்புச்செலவு | 32,581.39 | 22,843.34 |
| மின்சாரக் கட்டணம் | 114,275.64 | 88,477.25 |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 130,283.51 | 144,874.67 |
| கட்டடப் பராமரிப்பு | 7,296.60 | 18,603.51 |
| அலுவலக சாதனப் பராமரிப்பு | 17,421.82 | 29,836.82 |
| கணனிச்செலவுகள் | 18,078.43 | 10,275.36 |
| தேய்மானம் | 1,226.60 | 1,440.35 |
| கணக்காய்வுக் கட்டணம் | 100,000.00 | 100,000.00 |
| | **4,140,729.31** | **4,172,931.31** |

**குறிப்பு 12 – நிதிசார் செலவுகள்**

| | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 6,470.17 | 7,827.60 |
| பற்று வரி | - | 101.21 |
| | **6,470.17** | **7,928.81** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No: FB/E/AAIB/FA/2012
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 10 December 2013

**The Chairperson,**
**Agricultural and Agrarian Insurance Board.**

**Report of the Auditor General on the Financial Statements of the Agricultural and Agrarian Insurance Board for the year ended 31 December 2012 in terms of Section 14(2)(c) of the Finance Act, No. 38 of 1971**

With reference to my letter of even n ed 29 September 2013.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.A.S.Samaraweera
Auditor General

Copy to Secretary, Ministry of Finance and Planning

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. எவ்பீ/ஈ/ஏஜபீ/எவ்ஏ/2012 ඔබේ අංකය / உமது இல / Your No. දිනය / திகதி / Date 2013 ஒக்தோபர் 29

தலைவி,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி விரிவான அறிக்கையொன்று 2013 ஆகஸ்ட் 23 இல் சபையின் தலைவிக்கு சமர்ப்பிகக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ. மெயில் oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய 5 ஆண்டுகளிற்கான வருமான கணக்கிணக்கம், இழப்பீட்டுக் கொடுப்பனவு மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் என்பன கீழே கொடுக்கப்பட்டவாறு உள்ளன. எந்தவொரு அரசாங்க உதவியும் இல்லாமல் சபையின் தொடந்தியங்கும் தன்மையின் நிட்சயமின்மையை குறிக்கின்றது.

| ஆண்டு | பெறப்பட்ட தவணைப் பணம் | செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | செயற்பாட்டுச் செலவினம் | நிர்வாகச் செலவினம் | மொத்தச் செலவினம் | தவணைப் பணத்தை விஞ்சிய செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| 2008 | 70.5 | 27.0 | 4.2 | 78.7 | 109.9 | (39.4) |
| 2009 | 83.4 | 31.0 | 5.7 | 84.1 | 120.8 | (37.4) |
| 2010 | 105.1 | 268.7 | 5.6 | 86.3 | 360.6 | (255.5) |
| 2011 | 157.4 | 57.3 | 10.1 | 82.3 | 149.7 | 7.7 |
| 2012 | 124.7 | 126.6 | 8.6 | 81.8 | 217.0 | (92.3) |

(ஆ) சபையின் செயற்பாட்டு விளைவுகளை பாதகமாகப் பாதித்திருந்த மீளாய்வாண்டிற்கான நெல், மற்றும் துணைப்பயிர் காப்புறுதி திட்டங்கள் தொடர்பில் பாரிய செலவினம் ஏற்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| காப்புறுதி திட்டம் | வருமானம் | மொத்த செயற்பாட்டுச் செலவினம் | வருமானத்தின் சதவீதமாக செயற்பாட்டுச் செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| நெல் | 77,930,573 | 100,303,622 | 129 |
| கால்நடை | 15,807,854 | 5,241,680 | 33 |
| சுவசெத | 2,494,794 | 787,277 | 32 |
| துணைப்பயிர் | 22,016,546 | 20,065,955 | 91 |
| விவசாய உபகரணங்கள் | 929,429 | 129,405 | 14 |
| களஞ்சியக் காப்புறுதி | 199,987 | 100,000 | 50 |

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களானவை எஸ்எல்எவ்ஆர்எஸ் 1 இன்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. (முதலாவது தடவையாக இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பின்பற்றப்பட்டமை)

(ஆ) எல்கேஏஎஸ் 39 இன்படி, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதி (எவ்விபிஎல்), முதிர்ச்சி அடைந்த (எச்ரீஎம்), கடன் மற்றும் பெறவேண்டியவைகள் (எல்ஆர்) மற்றும் விற்பனைக்காக கிடைத்தவை (ஏஎவ்எஸ்) என்பன நிதிக்கருவிகளில் இனங்காணப்பட்டு அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 இன்படி, நிதிக் கருவிகளுடன் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எல்கேஏஎஸ் 19 இன்படி, வரையறுத்த நலன்புரித் திட்டத்தின் கீழான கடப்பாட்டை செயலாற்றும் நோக்கில் வரையறுத்த நலன்புரித் திட்டத்திற்காக காப்புறுதி கணிப்பீட்டுப் பெறுமதி மற்றும் கணக்கீடு என்பன செய்யப்பட்டிருக்காததுடன் தொழில்கொள்வோனின் பங்களிப்புகள் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) எல்கேஏஎஸ் 37 இன்படி, மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற கட்டளையின்படி, 2013 ஆம் ஆண்டில் ஒரு ஊழியரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 200,000 தொகையான இழப்பீட்டிற்காக மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயிர் காப்புறுதி செயற்பாட்டிற்காக ஜியோ- தகவல் தொழில்நுட்பம் மீது தயாரிக்கப்பட்ட சாத்தியவள அறிக்கை தொடர்பில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் ஜியோ- தகவல் பிரயோகம் மற்றும் பயிற்சிக்காக சர்வதேச நிலையத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 153,836 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னாள் தலைவிக்கு செலுத்தப்பட்ட படிகளில் கழிக்கப்பட்ட 2012 செப்தெம்பர், ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான ரூபா 12,000 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது இடைநிறுத்தப்பட்டு மீண்டும் மீள நியமிக்கப்பட்ட ஊழியர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய 2012 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்டதும் 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டதுமான ரூபா 561,220 தொகையான சம்பள நிலுவை மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூலக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளின்படி, மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நிர்வாகச் செலவினம் ரூபா 423,439 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக ஆண்டிற்கான பற்றாக்குறை அதேதொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 111,451 தொகையான வாடகை மற்றும் வரிகள் நிதிக்கூற்றுக்களில் முற்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. பதிலாக இது மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் தொடர்பில் அபிவிருத்திக் கிளையின் விரிவான பட்டோலையில் காட்டப்பட்ட தொகைக்கும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் பின்வரும் வித்தியசங்கள் அவதானிக்கப்பட்டன.

| காப்புறுதித் திட்டங்கள் | நிதிக் கூற்றுக்களின் படி | அபிவிருத்திக் கிளையின் விரிவான பட்டோலைகளின் படி | வித்தியாசம் |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கால் நடைகள் | 15,807,854 | 13,103,900 | 2,703,954 |
| சுவசெத மற்றும் ஆயுள் | 2,494,794 | 2,196,974 | 297,820 |
| விவசாய உபகரணங்கள் | 929,428 | 4,483,967 | 3,554,539 |
| களஞ்சியங்கள் | 199,987 | 238,370 | 38,383 |

(ஆ) மீளாய்வாண்டில் மேற்கொளப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பில் அபிவிருத்திக் கிளையின் விரிவான பட்டோலைகளில் காட்டப்பட்ட தொகைகளிற்கும் நிதிக் கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் பின்வரும் வித்தியசங்கள் அவதானிக்கப்பட்டன.

| காப்புறுதித் திட்டங்கள் | நிதிக் கூற்றுக்களின் படி | அபிவிருத்திக் கிளையின் விரிவான பட்டோலைகளின் படி | வித்தியாசம் |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கால் நடைகள் | 5,241,680 | 7,818,212 | (2,576,532) |
| நெல் | 100,303,622 | 75,770,287 | 24,533,335 |
| விவசாய உபகரணங்கள் | 129,405 | 165,823 | (36,418) |
| துணைப் பயிர்கள் | 20,065,955 | 15,798,206 | 4,267,749 |
| சுவசெத மற்றும் ஆயுள் | 787,276 | 713,365 | 73,740 |

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் ரூபா 2,254,178 கூட்டுமொத்த தொகையான ஊழியர்களின் கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் என்பன அறவிடப்படாமல் கணக்குகளில் மீதியாக இருந்தன. அதில், ரூபா 1,902,915 தொகை 5 ஆண்டுகிள்றகு மேல் அறவிடப்படாமல் இருந்தன.

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| இடர் கடன்கள் | | 1,238,190 |
| பண்டிகை முற்பணங்கள் | | 55,300 |
| விசேட முற்பணங்கள் | | 17,050 |
| எரிபொருள் முற்பணங்கள் | | 160,602 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | | 341,572 |
| விசேட பதவியினர் கடன்கள் | | 4,800 |
| நானாவித முற்பணங்கள் | | 324,293 |
| பிரயாண முற்பணங்கள் | | 8,000 |
| சம்பள முங்பணங்கள் | | 50,261 |
| சில்லறைக் கடன்பட்டோர் மற்றும் மோட்டார் சைக்கிள் செலவினம் | | 54,110 |
| | | 2,254,178 |

(ஆ) ரூபா 320,944 கூட்டு மொத்தத்தொகையான மரணமடைந்த ஊழியர்களிற்கு செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை நீண்ட காலமாக தீர்பனவு செய்யப்படாமல் இருந்தன.

(இ) 2007 இல் அரச வியபார கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 145,008 தொகையான வாடகை முற்பண மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 604,800 தொகையான உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் மீளளிக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரி திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்படாமல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையால் விவசாயிகளின் ஓய்வூதியங்கள் செலுத்துவதற்கு 2010 முதல் 2012 வரையான காலத்தின் போது விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 272,829,074 தொகை 2012 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நான்கு ஊழியர்கள் பின்வரும் நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அந்த நான்கு ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,908,815 தொகையான சம்பளங்கள் அறவிடப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோராக காட்டப்பட்டோ இருக்கவில்லை.

- தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் உடரட்ட அபிவிருத்தி அமைச்சு
- சமூக அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு
- மின்வலு மற்றும் சக்தி அமைச்சு,

- விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சு

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | ரூபா 21,253,050 தொகையான ஒரு ஊழியரிற்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியில் ரூபா 2,550,366 தொகையான 12 % ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புகள் கழிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்டிக்கவில்லை. |
| (ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவு | ரூபா 21,253,050 தொகையான ஒரு ஊழியரிற்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியில் ரூபா 637,592 தொகையான 3 % ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புகள் கழிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2011 ஏப்ரல் 18 ஆந்திகதிய பீஏவைஈ/வரி/இல1/2011 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்களச் சுற்றறிக்கை | மீனவர் ஓய்வூதிய திட்டத்தின் நிதிய முகாமைத்துவத்தில் பங்குபற்றியிருந்த உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட படிகளிலிருந்துரூபா 11,161 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நி.பி 110 | நட்டங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது தலைமை அலுவலகம் மற்றும் கிளையொன்று தொடர்பில் உரிய திகதிகளில் தண்ணீர் பட்டியல்கள் செலுத்தாமை காரணமாக துண்டிக்கப்பட்டிருந்த நீர் வழங்கலிற்கான மீள் இணைப்புக் கட்டணங்களாக ரூபா 18,480 தொகை செலுத்தியிலுந்தது.

(ஆ) சபையானது உரிய நேரத்தில் ஊழியர்களின் வருகையைப் பேணும் நோக்கத்திற்காக உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டில் 6 மாதங்களிற்காக ரூபா 325,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பயிர் காப்புறுதியின் நட்டஈட்டுக் கொடுப்பனவுககளிற்காக ஜீபிஎஸ்/ ஜீஎல்எஸ் தொழில்நுட்பம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஜீயோ- தகவல்சேகரிப்பின் முன்னோடிச் செயற்திட்டத்திற்காக இது தொடர்பில் ஏற்பட்ட ரூபா 625,346 தொகையான செலவினம் சிக்கமனற்றதாக இனங்காணப்பட முடியும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமா்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு மிகையான நிர்வாகச் செலவினங்களிற்கான அரசாங்க மானியத்தினை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 1,467,963 ஐ முன்னைய ஆண்டிற்கான ரூபா 101,215,444 நேரொத்த செயற்பாட்டு மிகையுடன் ஒப்பிடலாம். நிர்வாக மற்றும் நிதிச் செலவினங்களுடன் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 65,095,828 ஆன அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றை சீராக்கிய பின்னர் ஒட்டு மொத்த பற்றாக்குறையான ரூபா. 15,420,596 இற்கு எதிராக அந்த ஆண்டிற்கான நிர்வாக மற்றும் நிதிச் செலவினங்களுடன் ரூபா 68,998,243 ஆன அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றினை சீராக்கிய பின்னரான ஒட்டு மொத்த மிகை ரூபா 87,675,318 ஆகும். ஆதலால் நிதிசார் விளைவுகளில் ரூபா 103,095,914 ஆன வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மேற்குறிப்பிட்ட வீழ்ச்சிக்கான பிரதான காரணங்கள் பின்வருமாறு உள்ளன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 21 % ஆல் காப்புறுதி தவணைப் பணம் குறைவடைந்திருந்தது.
(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 100 % ஆல் செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்திருந்தது.
(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 72 % ஆல் ஏனைய வருமானம் குறைவடைந்திருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| **விடயம்** | **தற்போதைய ஆண்டு (2012)** | **முன்னைய ஆண்டு (2011)** | **முன்னைய ஆண்டை விஞ்சிய மாற்றங்களின் சதவீதம்** |
|---|---|---|---|
| | **ரூபா (000)** | **ரூபா (000)** | **%** |
| காப்புறுதி தவணைப்பணம் | 124,708 | 157,417 | (21) |
| வட்டி | 11,988 | 11,268 | 6 |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | 136,696 | 168,685 | (19) |
| செற்பாட்டுச் செலவினம் | (135,228) | (67,470) | 100 |
| செயற்பாட்டு மிகை/ (பற்றாக்குறை) | 1,468 | 101,215 | (99) |
| நிர்வாகச் செலவினத்திற்கான அரசாங்க மானியம் | 63,323 | 62,750 | 0.9 |
| ஏனைய வருமானம் | 1,773 | 6,248 | (72) |
| நிர்வாகம், நிதி மற்றும் ஏனைய செலவினம் | (81,984) | (82,538) | (0.7) |
| தேறிய மிகை / (பற்றாக்குறை) | (15,420) | 87,675 | (118) |
| விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல காப்புறுதிச் சபை ஒதுக்க நித்தியத்திற்கான ஏற்பாடு | - | 5,060 | - |
| ஏற்பாட்டின் பின்னர் தேறிய மிகை / (பற்றாக்குறை) | (15,420) | 82,615 | (119) |

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 5 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளின்படி, அரசாங்க மானியத்திற்கு முன்னரான தேறிய மிகை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தகை காட்டியது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| | 2012<br>ரூபா மில் | 2011<br>ரூபா மில் | 2010<br>ரூபா மில் | 2009<br>ரூபா மில் | 2008<br>ரூபா மில் | 2007<br>ரூபா மில் |
|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 139 | 175 | 128 | 114 | 96 | 48 |
| மொத்தச் செலவினம் | 217 | 150 | 361 | 121 | 134 | 50 |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (78) | 25 | (233) | (7) | (38) | (2) |
| அரசாங்க மானியம் | 63 | 63 | 85 | 75 | 42 | 12 |
| அரசாங்க மானியத்தின் பின்னர் மிகை/(பற்றாக்குறை) | (15) | 88 | (148) | 68 | 4 | 10 |

தேறிய மிகை/ (பற்றாக்குறையின்) பிரகாரம், சபையானது 2011 ஐ தவிர 2007 முதல் 2012 வரையான காலத்தின் போது அரசாங்க மானியங்களில் தங்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயிர் காப்புறுதி இழப்பீட்டுக் கொடுப்பனவு உத்தேசத் திகதி மாற்றப்பட்டிருந்த 24 நலனாளிகளிற்கு ரூபா 640,860 கூட்டுமொத்தத் தொகையான காப்புறுதி இழப்பீட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மட்டக்களப்பு மாவட்டத்தில் 2010/2011 பெரும்போக காலத்தின் போது 49 விவசாயிகளிற்கு இரண்டு தடவைகளில் ரூபா 1,099,780 கூட்டுமொத்தத் தொகையான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தக் கொடுப்பனவுகளில் 2013 சனவரி 31 வரை ரூபா 133,540 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**காப்புறுதித் திட்டங்களின் நிர்வாகம்**

கிடைக்கப்பெற்ற தகவலின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான காப்புறுதித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றலை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| விடயம் | அளவீடு | இலக்கு | | | | எய்தல் | | | | சதவீதமாக எய்தல் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | |
| | | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 | 2010 | 2011 | 2011 | 2012 |
| 1. பயிர் காப்புறுதி | | | | ரூபா (000) | ரூபா (000) | | | ரூபா (000) | ரூபா (000) | % | % | ரூபா (000) | ரூபா 000 |
| | | | | | | | | | | | | | |
| (அ) நெல் | எண்ணிக்கை ஏக்கர் | 90,519 | 97,290 | 71,371 | 85,897 | 101,741 | 66,352 | 94,437 | 77,931 | 112.40 | 68.20 | 132.32 | 90.73 |
| (ஆ) மிளகாய் | ஏக்கர் | 823 | 490 | 1,411 | 1,583 | 431 | 206 | 826 | 825 | 52.00 | 42.00 | 58.54 | 52.12 |
| (இ) பெரிய வெங்காயம் | ஏக்கர் | 341 | 1,125 | 3,386 | 3,328 | 998 | 1,538 | 2,744 | 4,086 | 292.67 | 136.71 | 81.04 | 122.77 |
| (ஈ) தென்னை | ஏக்கர் | 130 | 193 | 140 | 304 | 5 | - | 11 | - | 3.85 | - | 7.86 | - |
| உ) கரும்பு | | 1,040 | 1,200 | 2,570 | 2,000 | 30 | - | 28 | - | 2.88 | - | 1.09 | - |
| (ஊ) சோளம் | ஏக்கர் | 12,065 | 12,530 | 18,583 | 19,028 | 9,788 | 6,618 | 16,263 | 10,441 | 81.13 | 52.81 | 87.52 | 54.87 |
| (எ) ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர் | ஏக்கர் | 1,376 | 1,865 | 3,759 | 2,466 | 14 | 17 | 49 | 37 | 1.02 | 0.91 | 1.30 | 1.5 |
| (ஏ) மலர் தாவரம் | ஏண் | 64,752 | 5,050 | 261 | 201 | - | - | - | - | - | - | - | - |
| (ஐ) பெருந்தோட்டப் பயிர் | ஏக்கர் | 222 | 1,341 | 444 | 2,575 | 756 | 2,254 | 709 | 1,983 | 340.54 | 168 | 159.68 | 77 |
| (ஒ) உருளைக் கிழங்கு | ஏக்கர் | 600 | 1,280 | 3,037 | 3,200 | 817 | 732 | 2,919 | 2,886 | 136.17 | 57.18 | 96.11 | 90 |
| (ஓ) ஏனைய பயிர் | ஏக்கர் | 5,236 | 6,229 | 3,751 | 5,825 | 1,076 | 638 | 1,130 | 821 | 20.55 | 10.24 | 30.11 | 14.0 |
| (ஔ) மரக்கறி | ஏக்கர் | 375 | 400 | 1,273 | 1,200 | 889 | 631 | 869 | 937 | 237.07 | 157.75 | 68.26 | 78 |
| | | | | | | | | | | | | | |
| 2. கால்நடை | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| மாடு | எண் | 11,200 | 10,096 | 25,928 | 23,381 | 12,982 | 4,856 | 16,729 | 11,899 | 115.91 | 48.09 | 64.52 | 50.89 |
| ஆடு | எண் | 11,646 | 9,168 | 6,140 | 4,305 | 2,837 | 2,261 | 1,506 | 1,205 | 24.36 | 24.6 | 24.53 | 27.99 |
| | | | | | | | | | | | | | |
| 3. களஞ்சியங்கள் | எண் | 1,063 | 860 | 4,897 | 3,810 | 5 | 17 | 44 | 238 | 0.47 | 1.97 | 0.9 | 6.25 |
| | | | | | | | | | | | | | |
| 4. விவசாய உபகரணங்கள் | எண் | 3,645 | 4,109 | 13,600 | 13,625 | 402 | 316 | 5,881 | 4,484 | 11.03 | 7.69 | 43.24 | 32.91 |
| | | | | | | | | | | | | | |
| 5. சுவசெத | எண் | 36,085 | 33,715 | 15,478 | 14,946 | 13,181 | 3,013 | 6,953 | 1,040 | 36.53 | 5.97 | 44.92 | 6.9 |
| | | | | | | | | | | | | | |
| 6. ஆயுள் காப்புறுதி | எண் | 12,069 | 21,931 | 10,189 | 18,185 | 8,105 | 1,433 | 7,272 | 1,157 | 67.16 | 6.53 | 71.37 | 6.36 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்காள்ளப்படுகின்றன.

(அ) மிளகாய், ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், ஏனைய பயிர், ஆடுகள், மாடுகள், களஞ்சியங்கள், விவசாய உபகரணங்கள், ஆயுள் காப்புறுதி மற்றும் சுவசெத தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான பௌதீக இலக்குகள் 50 சதவீதத்தை விட குறையவே எய்தப்பட்டிருந்தது. ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், ஏனைய பயிர்கள், சுவசெத, ஆயுள் காப்புறுதி மற்றும் களஞ்சிய காப்புறுதி தொடர்பாக 7 சதவீதத்திற்கும் குறைவாகவே எய்தப்பட்டிருந்தது.

(ஆ) ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், ஏனைய பயிர்கள், ஆடுகள், களஞ்சியங்கள், விவசாய உபகரணங்கள், ஆயுள் காப்புறுதி மற்றும் சுவசெத என்பன தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான நிதிசார் இலக்குகள் 50 சதவீதத்திற்கு குறையவே எய்தப்பட்டிருந்தது. ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப்பயிர், ஆயுள் காப்புறுதி, சுவசெத மற்றும் களஞ்சிய காப்புறுதி என்பன 10 சதவீதத்திற்கு குறைவாக மாத்திரமே எய்தப்பட்டிருந்தது.

(இ) நெல், மிளகாய், சோளம், உருளைக்கிழங்கு ஏனைய பயிர், மாடுகள், ஆயுள் காப்புறுதி, விவசாய உபகரணங்கள் மற்றும் சுவசெத காப்புறுதி என்பன தொடர்பான இலக்குகளின் எய்துகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்திருந்தது.

(ஈ) மலர் தாவரம், தென்னை மற்றும் கரும்பு காப்புறுதி தொடர்பில் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எந்தவொரு தன்க் காப்புறுதியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

ஊழியர் ஒருவர் 57 வயதினை பூர்த்தி செய்த பின்னர் சேவைக் காலத்தை நீடிப்பதற்கு 2008 ஆம் ஆண்டில் சபைக்கு எதிராக நீதி மன்றம் ஒன்றில் வழக்கு தொடர்ந்திருந்தார். 2011 ஆம் ஆண்டின் போது வழக்கில் சபை தோல்வியடைந்திருந்ததுடன் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் நிர்வாக கவனயீனங்கள் காரணமாக மீளாய்வாண்டில் நீதிமன்றத்தால் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 4 வாகனங்கள் மூன்று ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் தலைமை அலுவலக வளவில் பயன்பாடின்றி விடப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 526,321 பெறுமதியான பயன்படுத்தப்படாத அச்சிடல் பொருட்கள் நீண்ட காலமாக பயன்பாடின்றி இருந்தன.

**4.4 செயற்திட்டத்தில் தாமதங்கள்**

2008 ஆம் ஆண்டில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான காணி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 585,800 ஆன செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மூலதன முற்பணமாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணியானது கட்டிடம் நிர்மாணிக்கப்படாமல் நீண்ட காலமாக பயன்பாடின்றி விடப்பட்டிருந்தது.

**4.5 காணிகளின் சட்டரீதியான உரித்துடமை இல்லாமல் கட்டிடம் நிர்மாணித்தல்**

(அ) சபையானது காணிகளின் சட்டரீதியான உரித்துடமை பெறாமல் எம்பிலிப்பிட்டிய மற்றும் தம்புதேகமவில் கட்டிடங்களை நிர்மாணித்திருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| பகுதி | நிர்மாணத்திற்காக செலவழித்த தொகை |
|---|---|
| | ரூபா |
| எம்பிலிப்பிட்டிய | 1,183,496 |
| தம்புதேகம | 1,283,815 |
| | 2,467,311 |

(ஆ) வதிவிட செயற்திட்ட முகாமையாளர் (வளவ்வ) சபைக்கு 1986 முதல் 2012 வரையான காலத்திற்காக வாடகை, தாமதக்கட்டணங்கள் மற்றும் ஆரம்ப கொடுப்பனவுகளாக ரூபா 1,844,750 தொகை செலுத்தப்பட வெண்டுமென்று சபைக்கு அறிவித்திருந்தார். ஆதனங்களை சுவீகர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமையால் சபை இத்தெகையை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 4.6 மனிதவள முகாமைத்துவம்

தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி, உண்மையான ஆளணி மற்றும் வெற்றிட நிலைமை என்பன கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | | | உண்மையான ஆளணி | | | ஆளணி வெற்றிடம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 |
| நிறைவேற்றுனர்கள் | 56 | 56 | 45 | 34 | 38 | 39 | 22 | 18 | 06 |
| நிறைவேற்றுனர் அல்லாதோர் | 285 | 285 | 264 | 216 | 235 | 176 | 69 | 50 | 88 |
| சிற்றூழியர்கள் | 80 | 80 | 69 | 56 | 60 | 60 | 24 | 20 | 09 |
| அமைய | - | - | - | 02 | 07 | 68 | - | - | - |
| மொத்தம் | 421 | 421 | 378 | 308 | 340 | 343 | 115 | 88 | 103 |

இது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு எதிராக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 103, 88 மற்றும் 115 ஆன வெற்றிடங்களிருந்ததுடன் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவிலை என்னு அவதானிக்கப்பட்டது

**4.7. வாகனங்களின் பாவனை**

சபையால் நீண்ட காலமாக சபைக்கு உரித்துடமை மாற்றப்பட்டிருக்காத ஒன்பது ஜீப் வண்டிகள் மற்றும் ஒரு கப் வாகனம் என்பன, அந்த வானங்களில் குறித்த சில வாகனங்கள் மீளாய்வாண்டின் போது வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதி என்பன பெற்றுக் கொள்ளாமல் சபையால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**5. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்**

**5.1 கூட்டுத்திட்டம்**

2009 - 2012 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின்படி, அது 2012 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத்திட்டம்**

மிளகாய், தென்னை, கரும்பு, சோளம், மலர் தாவரம், ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், மரக்கறி மாடுகள், ஆடுகள், களஞ்கியங்கள், விவசாய உபகரணங்கள், சுவசெத மற்றும் ஆயுள் காப்புறுதி போன்றவற்றின் காப்புறுதிகள் தொடர்பில் 2012 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தில் அமைக்கப்பட்ட குறித்த சில இலக்குகள் அடையப்பட்டடிருக்காததுடன் அது சபையின் முகாமைத்துவ கட்டுப்பாட்டிற்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2012 ஆம் ஆண்டிற்கான பாதீடடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதைக் காட்டுகிறது.

**6. முறைமைகள் மற்றுடும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காப்புறுதித் திட்டங்கள்

(ஆ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

(இ) கூட்டுத் திட்டமும் செயல்நடவக்கைத் திட்டமும்

(ஈ) பாதீடு

(உ) பதவியினர் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தீர்ப்பனவு

(ஊ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன

புதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

***M***

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: FB/E/FPS/FA/2012
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 10 December 2013

The Chairperson,
Agricultural and Agrarian Insurance Board.

**Report of the Auditor General on the Financial Statements of the Farmers' Pension and Social Security Benefit Scheme for the year ended 31 December 2012in terms of Section 14(2)(c) of the Finance Act, No.38 of 1971.**

---

With reference to my letter of even number dated 01 November 2013.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.A.S.Samaraweera
Auditor General

Copy to - Secretary, Ministry of Finance and Planning

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } எவ்பீ/ஈ/எவ்பிஎஸ்/எவ்ஏ/2012    ඔබේ අංකය / உமது இல / Your No. }    දිනය / திகதி / Date } 2013 நவம்பர் 01

தலைவி,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

**விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 28(4)ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி விரிவான அறிக்கையொன்று 2013 ஆகஸ்ட் 29 இல் சபையின் தலைவிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

---

விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் மீதியானது கீழே காட்டப்பட்டவாறு 2006 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,003 மில்லியன் சாதக மீதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 48,945.1 மில்லியன் எதிர்மறையான மீதிக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளின்படி, சகல நிதிகளும் 2010 ஆகஸ்ட் மாத இறுதியில் தீர்ந்துபோய்விட்டதுடன் அதன்பின்னர் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையில் இருக்கின்ற வேறு நிதிகளிலிருந்து குறுகியகாலக் கடன்களைப் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் எதிர்காலத் தங்கியிருத்தல் அரசாங்க மானியங்களிலேயே மொத்தமாகத் தங்கியுள்ளது.

| **ஆண்டு** | **நிதியத்தின் மீதி** |
|---|---:|
| | **ரூபா மில்** |
| 2006 | 2,003.7 |
| 2007 | 1,639.8 |
| 2008 | 1,404.8 |
| 2009 | 663.8 |
| 2010 | (40,536.7) |
| 2011 | (44,154.2) |
| 2012 | (48,945.1) |

**2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்**

---

பின்வரும் அவதானிப்புகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 1 இன்படி நிதிக் கூற்றுக்களானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. முதலாவது தடவையாக இலங்கை கணக்கீட்டு நியமங்கள பின்பற்றியமை.

(ஆ) எல்கேஏஎஸ் 39 இன்படி, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதி, முதிர்ச்சி அடைந்தவை, கடன் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் விற்பனைக்காக கிடைத்தவை என்றவாறான நிதிக் கருவிகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 இன்படி, நிதிக் கருவிகளுடன் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எல்கேஏஎஸ் 19 இன்படி, வரையறுத்த நலன்புரித் திட்டத்தின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில் வரையறுத்த நலன்புரித் திட்டத்திற்காக காப்புறுதிக் கணிப்பீட்டு பெறுமதி மற்றும் அதன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஊழியர் மற்றும் தொழில்கொள்வோனால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஓய்வூதிய பொறுப்புக்களின் இறுதி காப்புறுதிக் கணிப்பீட்டு மதிப்பாய்வு 2007 இல் செய்யப்பட்டிருந்தது. அதிலிருந்து, ஓய்வூதிய பொறுப்புக்களிற்காக காப்புறுதிக் கணிப்பீட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொறுப்புக்களின் சாத்தியமானதன்மை கேள்விக்குரியதாகும்.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் விவசாயிகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 7,305,897 தொகையான ஓய்வூதியம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஓய்வூதிய பொறுப்பிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நிதி நிலைமை கூற்றுத் திகதியிலுள்ளவாறான ஓய்வூதிய பொறுப்பு அதேதொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் தபால் அலுவலக மீளெடுப்பு ஓய்வூதிய கொடுப்பனவுகளிற்கு செலுத்தப்பட்ட ரூபா 6,148,860 தொகையான தரகு, தரகாக கணக்கிடுவதற்குப் பதிலாக ஓய்வூதிய பொறுப்பிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 4,654,023 தொகையான பெறவேண்டிய கணக்குகளின் மொத்த மீதிகளில் ரூபா 2,111,885 அல்லது 45 சதவீதம் மாத்திரமே உரிய தொடர்புபட்ட பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 2,382,031 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்படவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் நீண்டகாலமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திட்டத்தின் சகல நிதிகளும் தீர்ந்துபோனமையால் மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்திடமிருந்து ரூபா 553,014,955 மற்றும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையிடமிருந்து ரூபா 260,976,074 ஆகிய குறுகிய கால கடன்களை எடுப்பதன் மூலம் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. மேற்குறித்த கடன்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டிகள் 2013 மே 20 வரையிற்கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித்திட்டத்தின் ரூபா 2,791,679 பெறுமதியான நாற்பத்து எட்டுக் காசோலைகள் மற்றும் ரூபா 7,152,249 பெறுமதியான வங்கி வரைவுகள் என்பன சபையின் 2 பணிப்பாளர்கள் மற்றும் ஒரு உதவிப் பணிப்பாளர் என்போரால் 2008 ஆம் ஆண்டில் மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததென சபையானது எனக்கு அறிவித்திருந்தது.

(ஆ) ரூபா 369,590 தொகையான பணத்தை மோசடியாக பயன்படுத்திய வெளிக்கள உத்தியோகத்தருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மீளாய்வாண்டின் போது தள்ளுபடி செய்யப்பட்டது. அவரிடமிருந்து ரூபா 100,000 தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் வழக்கு மூடப்பட்டுவிட்டன. ஆகவே மிகுதி ரூபா 269,590 அறவிட முடியாதிருந்ததுடன் கணக்குகளில் அவசியமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களிற்கு 2013 மே 20 வரை ஆவணச்சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| விபரம் | தொகை<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலுள்ள 936 விவசாயிகளிற்காக செய்யப்பட்ட ஓய்வுதிய கொடுப்பனவுகள் | 3,288,000 | ஓய்வூதிய கொடுப்பனவுகளின் விரிவான பட்டோலை |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 4,670,653,346 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,617,570,557 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,053,082,789 அல்லது 29 சதவீதத்தால் பற்றாக்குறையின் அதிகரிப்பைக் காட்டுகின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2012 | 2011 | முரண் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| வட்டி வருமானம் | 2,702,921 | 1,566,195 | 72.6 |
| விவசாயிகள் பங்களிப்புகள் | 55,475,042 | 108,458,800 | (48.8) |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | (1,380,677,601) | (1,266,744,103) | (12.5) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (52,552,338) | (54,806,188) | 4.1 |
| செலவினத்திற்கு மேலான வருமானம் | (1,375,051,976) | (1,171,525,296) | (17.37) |
| அரசாங்க மானியம் | 8,232,560 | 664,855,487 | (98.8) |
| ஓய்வூதிய பொறுப்பு அதிகரிப்பு | (3,216,991,000) | (3,059,459,000) | (5.1) |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 1,320,949 | 1,227,701 | 7.6 |
| நிர்வாகத்திற்கான வருமானம் | 66,292,332 | 68,159,142 | (2.7) |
| நிர்வாக மற்றும் நிதிச் செலவினம் | (154,456,210) | (120,828,592) | (27.8) |
| ஆண்டிற்கான ஒட்டுமொத்தப் பற்றக்குறை | (4.670,653,346) | (3,617,570,557) | (29.11) |

மேற்குறிப்பிட்ட விளைவுகளிற்கு பின்வருவன தாக்கமளித்திருந்தன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் 72.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விவசாயிகளுடைய பங்களிப்புகள் 48.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(இ) ஐந்தொகை திகதியில் உள்ளவாறான விவசாயிகள் ஓய்வூதிய பொறுப்பு 2007 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட காப்புறுதிக் கணிப்பீட்டு மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு எல்கேஏஸ் 37 இன்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் ரூபா 3,216,991,000 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் நேரொத்த தொகைகள் மீள அமைக்கப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதியத்ததை செலுத்துவதற்கு ரூபா 8.23 மில்லியன் அரசாங்க மானியம் பெறப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் நேரொத்த தொகைகளுடன் ஒப்பிடும் போது 98.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**3.2 நிதிசார் விளைவுகள் மற்றும் நிதி நிலைமை என்பவற்றின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியங்களிலிருந்து நிர்வாகச் செலவினத்தின் ஒரு பகுதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் நிதி நிலைமை ஆபத்தான நிலைமையிலேயே தொடர்ந்திருந்தது. நிதியத்தின் நிதிசார் விளைவுகள் கீழே காட்டப்பட்டவாறு 2008 இன் இறுதியில் உள்ள ரூபா 235 மில்லியன் பற்றாக்குறையிலிருந்து 2012 இல் ரூபா 4,671 மில்லியன் பற்றாக்குறையாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் சாத்தியத்தன்மை ஆபத்தான நிச்சயமற்ற தன்மையிலுள்ளது.

முன்னைய 5 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | 2012<br>ரூபா<br>(000) | 2011<br>ரூபா<br>(000) | 2010<br>ரூபா<br>(000) | 2009<br>ரூபா<br>(000) | 2008<br>ரூபா<br>(000) |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 61,148 | 115,434 | 170,898 | 306,607 | 431,209 |
| மொத்தச் செலவினம் | (1,587,686) | (1,402,379) | (1,195,110) | (1,103,779) | (951,623) |
| ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு | (3,059,459) | (2,938,033) | - | - | - |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (4,743,529) | (4,346,404) | (3,962,245) | (797,172) | (520,414) |
| அரசாங்க மானியம் | 71,555 | 727,605 | 39,500 | 55,860 | 285,000 |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 1,321 | 1,228 | 1,477 | - | - |
| அரசாங்க மானியத்தின் பின்னர் .தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (4,670,653) | (3,617,571) | (3,921,268) | (741,312) | (235,414) |

(i) உறுப்பினர் பதிவு செய்வதற்கான மேம்பாட்டின் மீதான வருமானமானது 2008 முதல் 2012 வரையான காலப்பகுதியின் போது 85 சதவீதத்தால் படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதேநேரம் ஓய்வூதியத்திற்கு

தகுதியுடைய விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் திட்டத்திலிருந்து செய்யப்பட்ட மீளெடுப்புகள் காரணமாக, மொத்தச் செலவினமானது அதே காலப்பகுதியின் போது 67 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

(ii) உண்மையான நிபந்தனைகளில் ஓய்வூதிய பொறுப்பு தாபித்தமை மற்றும் செலவின அதிகரிப்புக் காரணமாக அரசாங்க மானியத்திற்கு முன்னரான தேறிய மிகை 2008 முதல் 2012 வரையான காலத்தின் போது படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் திட்டத்திற்காக விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **பங்களிப்புகள்** | **ஓய்வூதியக் கொடுப்பனவு** |
|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| 2008 | 163.1 | 809.1 |
| 2009 | 148.7 | 955.6 |
| 2010 | 136.7 | 1,044.7 |
| 2011 | 97.6 | 1,226.7 |
| 2012 | 49.6 | 1,380.7 |

(இ) முதலீடுகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து விரைவாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இதன் விளைவாக முதலீடுகளிலிருந்தான வருமானமும் கீழே காட்டப்பட்டவாறு 2012 ஆம் ஆண்டில் பாரியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

| **ஆண்டு** | **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான முதலீடுகள்** | **ஆண்டிற்கான வட்டி வருமானம்** |
|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| 2007 | 1,656.0 | 251.3 |
| 2008 | 1,256.1 | 243.9 |
| 2009 | 582.2 | 138.9 |
| 2010 | 3.5 | 14.9 |
| 2011 | 30.7 | 1.6 |
| 2012 | 12.4 | 2.7 |

மேற்குறித்த தகவல்களின்படி, முதலீடுகள் 2007 இல் இருந்த ரூபா 1,656 மில்லியனிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 12.4 மில்லியன் அல்லது 99 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் வட்டி வருமானம் 2007 இல் இருந்த ரூபா

251.3 மில்லியனிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 2.7 மில்லியன் அல்லது 98.92 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் நிதிகள் 2010 இல் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இதன்விளைவாக திட்டத்தின் நிதி நிலுவைகளின் அதிகரிப்பு காரணமாக உள் நுழைவு பதிவுகள் நிறுத்தப்பட்டிருந்தது. திட்டத்தின் செயற்பாடுகள் மீது இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, 2012 ஆம் ஆண்டிற்காக விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்காக செயல் நடவடிக்கைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 58,428,092 தொகையான இரண்டாவது மற்றும் அதற்குப் பின்னரான தவணைப் பணங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு எந்தவொரு விவசாயியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1992 இலிருந்து தேறாதவையாக இருக்கின்ற மூன்று வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட 116 காசோலைகள் தொடர்பான ரூபா 1,179,624 தொகையான தேறாத வைப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| கணக்கு இல | வைப்புச் செய்யப்பட்ட காலம் | காசோலைகளின் எண்ணிக்கை | பெறுமதி<br>ரூபா |
|---|---|---|---|
| 100-150-112345 | 1992-2000 | 81 | 1,112,339 |
| 100-150-112347 | 1993-2012 | 07 | 40,650 |
| 100-150-112344 | 1993-1998 | 28 | 26,635 |
| | | 116 | 1,179,624 |

### 4.3 செயற்திட்டங்களிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் பங்களிப்பாளர்களின் ஆளுக்குரிய தனிப்பட்ட கணக்குகளை கணனி மயப்படுத்துவதற்காக 1987 இலிருந்து ரூபா 21.5 மில்லியன் தொகை

செலுத்தப்பட்டிருந்த போதிலும், 25 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட கணக்குகள் கணனிமயப்படுத்தல் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவோ அல்லது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டோ இருக்கவில்லை. திட்டமானது விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான பங்களிப்புக்களின் கொடுப்பனவிற்கு தகைமைபெற்ற பங்களிப்பாளர்களை நிர்ணயிப்பதற்கு போதிய தகவல்களை கொண்டிருக்கவில்லை. மாவட்ட அலுவலகங்களிலும் கூட பங்களிப்பாளர்களின் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான புதிய கணனிமயப்படுத்தல் முறைமையொன்றை விருத்தி செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதிவரை அதில் ஏற்பட்ட செலவினம் ரூபா 5,479,120 ஆகும். உடன்படிக்கையின்படி, செயற்திட்டம் ஆறு மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும், எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கூட அது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை

(ஆ) நிதி முகாமைத்துவம்

(இ) ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படாத ஓய்வூதியங்களும்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
***M***

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No. FB/E/FISH/ FA/ 2012

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 13 December 2013

The Chairperson,

Agricultural and Agrarian Insurance Board.

**Report of the Auditor General on the Financial Statements of Fishermen's Pension and Social Security Benefit Scheme for the year ended 31 December 2012 in term of Section 14(2)(c) of Finance Act No. 38 of 1971.**

---

Reference to my letter of even number dated 01 November 2013 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.A.S. Samaraweera

Auditor General

Copy to :- Secretary, Ministry of Finance and Planning

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. எவ்பீ/ஈ/எவ்ஜஎஸ்எச்/எவ்ஏ/2012 ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2013 நவம்பர் 01

தலைவி,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

**மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1990 இன் 23 ஆம் இலக்க மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 28(4)ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி விரிவான அறிக்கையொன்று 2013 செப்தெம்பர் 05 இல் சபையின் தலைவிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / oaggov@sltnet.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிலைவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஓய்வூதிய நலத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

ஓய்வூதியப் பொறுப்பு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது தாபிக்கப்பட்டிருந்ததுடன் வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்ட ஏற்பாடுகள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளில் பொருமளவான எதிர்மறை விளைவை டீப்படுத்தியிருந்தது. இதன்படி, எதிர்காலத்தில் ஏற்பாடுகள் அதிகரிக்க வேண்டியிருப்பதுடன் எதிர்காலத்தில் நட்டங்களும் அதிகரிக்க வேண்டிவரும். மேலும், ஓய்வூதிய பொறுப்பு தாபித்தலின் விளைவாக நிதிக் கூற்றுக்களில் தேறிய சொத்து நிலைமை எதிமறையான தொகையைக் காட்டுகிறது. இது ஓய்வூதிய திட்டம் தொடர்ந்தியங்கலை பாரதூரமாக பாதித்திருந்தது.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பின்வரும் அவதானிப்பகள் அவதானிக்கப்படடுகின்றன.

(அ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 1 இன்படி, நிதிக் கூற்றுக்களானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. முதலாவது தடவையாக இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருந்தன.

(ஆ) எல்கேஏஎஸ் 39 இன்படி, நிதிசார் சொத்துக்களில் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில், விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை மற்றும் கடன் மற்றும் பெறவேண்டியவைகள் என்பன காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 இன்படி, நிதிக் கருவிகளுடன் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எல்கேஏஎஸ் 19 இன்படி, தீர்மானிக்கப்பட்ட நலன்புரித் திட்டத்தின் கீழான கடப்பாட்டை ஆற்றும் நோக்கில் தீர்மானிக்கப்பட்ட நலன்புரித் திட்டத்திற்காக புள்ளிவிபரத்திரட்டு மற்றும் அதன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. தொழில்கொள்வோனின் பங்களிப்புகளும் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) எல்கேஏஎஸ் 19 இன்படி, ஓய்வூதிய பொறுப்புக்களின் இறுதி புள்ளிவிபர மதிப்பாய்வு 2007 இல் செய்யப்பட்டிருந்ததுடன் அதன்பின்னர் 2013 மே 20 வரை ஓய்வூதிய பொறுப்புக்களிற்கான புள்ளிவிபர மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1991 மார்ச் 19 ஆம் திகதிய 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூக நலன்புரி ஓய்வூதிய திட்டத்தின் நிர்வாகச் செலவினத்தை மீளளிப்பதற்காக சபையின் சபைத் தலைவர் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியலவளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்போர் உடன்பட்டிருந்ததுடன் இதன்படி அச் செலவினம் 2010 ஆம் ஆண்டுவரை மீளளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2011 ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய தொகை கிடைக்க வேண்டியவையாக நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக கிடைக்கவேண்டிய தொகை கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவாக ஆண்டிற்கான வருமானம் அதேதொகையால் குறைத்துக்காட்டப்படிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக ரூபா 371,190 தொகையான செலுத்தப்பட்ட தரகு ஓய்வூதிய பொறுப்பிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இத் தரகு ஓய்வூதிய பொறுப்பு மதிப்பீடும் போது உள்ளடக்கப்பட்டிக்கவில்லை. ஆகவே ஓய்வூதிய பொறுப்பு அதேதொகையால் குறைத்துக்காட்டப்படிருந்தது.

(இ) நிதிக் கூற்றுக்களின்படி, திட்டத்தின் 6 ஊழியர்களிற்காக சம்பள செலவினம், பணிக்கொடை ஏற்பாடு என்பன செய்யப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. பௌதீக பரிசோதனையின்படி, 4 ஊழியர்கள் மாத்திரமே மீனவர் ஓய்வூதிய பிரிவுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் பணிக்கொடை என்பன அந்த ஊழியர்களிற்காக மாத்திரம் வழங்கப்பட வேண்டும். ஆகவே, ரூபா 602,864 தொகையான சம்பளச் செலவினம் மற்றும் ரூபா 304,360 தொகையான பணிக்கொடை ஏற்பாடு என்பன நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

கடற்றொழில் பிரிவிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி கணக்காய்வில் பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. இந்த வித்தியாசங்கள் 2013 மே 20 வரையில்கூட இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | நிதிக் கூற்றுக்களின்படி தொகை | கடற்றொழில் பிரிவால் பேணப்பட்ட பதிவேடுகளின்படி தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மீனவர்கள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு | 3,442,392 | 2,934,986 | 507,406 |
| தேறிய பங்களிப்புகளின் மீள் கொடுப்பனவு | 506,856 | 191,600 | 315,256 |
| தேறிய வட்டியின் மீள் கொடுப்பனவு | 433,133 | 204,168 | 228,965 |
| மரணப் பணிக்கொடையின் கொடுப்பனவு | 658,797 | 826,000 | (167,203) |

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீனவர்கள் ஓய்வூதிய நிதியத்தை செலுத்துவதற்காக விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்திற்கு கடனாக ரூபா 608 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ஐந்தொகை திகதியில் உள்ளவாறு வட்டி உள்ளடங்கலாக நிலுவையாகவிருந்த தொகை ரூபா 608 மில்லியனாக இருந்தது. மீனவர் ஓய்வூதிய நிதியம் 2013 மே 20 வரைகூட நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) ரூபா 1,059,025 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்படப்பவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் நீண்டகாலமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 823,980 தொகையான செலுத்தப்படாத மீனவர் ஓய்வூதியம் செலுத்தப்பட்ட வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1990 இன் 23 ஆம் இலக்க மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 20 | ஏற்பாடுகளின்படி ஆலோசகர்கள் குழுவில் 06 உத்தியோக பற்றற்ற உறுப்பினர்கள், மற்றும் 6 நியமன உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்ககாக 6 உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கபப்பட்டிருந்தனர். |
| (ii) பிரிவு 26 | அதிகாரச் சட்டத்தின்படி தவணைதப்பிய கட்ட உறுப்புரிமை காலாவதியானோரிடம் இருந்து உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுககக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுறற்றறிக்கை | |
| (i) அத்தியாயம் 9 இன் 7 ஆம் பந்தி | திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்படாமல் சில உத்தியோகத்தர்களிற்கு ரூபா 352,428 மொத்தத் தொகயான விசேட படி செலுத்தப்பட்டிருந்தது. |

**2.2.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

விவசாயிகளுடைய ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக விசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதிகளில் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக ரூபா 55,301,495 தொகையான வட்டி குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த இரண்டு திட்டங்களிற்கும் இடையில் நிலையான வட்டி வீதம் கொடுப்பனவு செய்வதற்கு எவ்வித உடன்படிக்கையும் இருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானத்தின் 92.5 சதவீதத்தை இந்த வட்டி வருமானம் பிரதிநிதித்துவப்படுத்தியதனால் திட்டத்தின் வட்டி வருமானமாக மேற்குறித்த தொகையை குறிப்பிடுவது கேள்விக்குரியதாக உள்ளது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 30,667,022 ஆன செயற்பாட்டு மிகையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 15,705,562 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 14,961,460 அல்லது 95 சதவீதமான அதிகரிப்பைக் காட்டுகின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | **முரண்** |
|---|---|---|---|
| | **2012** | **2011** | **%** |
| | **ரூபா** | **ரூபா** | |
| வட்டி வருமானம் | 59,813,431 | 40,525,747 | 47.6 |
| மீனவர் பங்களிப்புகள் | 3,442,392 | 3,025,262 | 13.78 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | (29,496,923) | (24,636,392) | (19.72) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (3,091,878) | (3,209,055) | 3.6 |
| செயற்பாட்டு மிகை | 30,667,022 | 15,705,562 | 95.0 |
| செயற்பாட்டு மானியம் | ---- | 1,500,000 | |
| ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு | (181,213,000) | (170,403,000) | (6.0) |
| நிர்வாக மற்றும் நிதிச் செலவினம் | (4,147,199) | (4,180,860) | 0.8 |
| ஆண்டுக்கான ஒட்டு மொத்தப் பற்றாக்குறை | (154,693,177) | (157,378,298) | 1.7 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக நலன்புரி திட்டத்திற்கு வழங்கப்பட்ட கடனிறுத்தற்கான வட்டி வருமானம் 47.59 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. திறைசேரி உண்டியல்களின் வட்டி 4,511,936 ஆக இருந்ததுடன் இது மொத்த வட்டி வருமானத்தின் 7.5 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீனவர்களுடைய பங்களிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 13.78 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டு ஓய்வூதிய நிதியத்திற்கான மொத்தப் பங்களிப்பு ரூபா 3,442,392 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மொத்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் ரூபா 29,496,923 ஆகும். ஆகவே, ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 757 சதவீதத்தால் பங்களிப்பை விஞ்சியிருந்தது.

(இ) நிதிநிலைமை கூற்றின் திகதியில் உள்ளவாறான ஓய்வூதிய பொறுப்புகள் 2007 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட உள்ளபடியான மதப்பய்வை அடிப்படையாகக் கொண்டு எஸ்எல்ஏஎஸ் 36 இன்படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஓய்வூதிய பொறுப்புக்களின் அதிகரிப்பு ரூபா 181,213,000 ஆக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) திட்டத்தின் மீனவர் ஓய்வூதிய நிதியத்தின் மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 27.4 மில்லியனிலிருந்து அல்லது 44 சதவீதம் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு அதிகளவு பங்களிப்பாளர்களின் ஆட்சேர்ப்பிற்காக எவ்வித மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கைளையும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 2,140 பங்களிப்பாளர்கள் சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட உள்ளபடியான பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 498 மாத்திரமேயாக இருந்தமையால் எய்தலானது 23.27 சதவீதத்ததை மாத்திரம் காட்டுகின்றது. மூன்று மாவட்டங்களில் எந்தவொரு பங்களிப்பாளரையும் சேர்த்திருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான சேர்ப்பனவின் நிதி இலக்கு ரூபா 4,117,000 தொகையாக இருந்த போதிலும் உள்படியான பங்களிப்புகள் ரூபா 2,104,381 மாத்திரமேயாகும் இரண்டு மாவட்டங்களில் எந்தவொரு பங்களிப்பாளர்களையும் சேர்க்கப்பட்டிருக்காததுடன் ஐந்து மாவட்டங்களில் ஒரு பங்களிப்பாளர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தமை குறைவான செயலாற்றலிற்கு காரணமெனவும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வர்டிற்காக இரண்டாவது மற்றும் அதற்குப் பின்னரான தவணைப்பண சேகரிப்பின் இலக்கு 39,854 பங்களிப்பினர்களிடமிருந்து ரூபா 5,978,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான உறுப்பினர் சேகரிப்பு 1,122 பங்களிப்பாளர்களிடமிருந்து ரூபா 830,605 ஆக மாத்திரமே இருந்தது. இதன்படி, உள்ளபடியான நிதி எய்தல் 13.89 சதவீதமாக மாத்திரமேயாக இருந்ததுடன் உள்ளபடியான சேர்ப்பனவு முன்னேற்றம் 2.81 சதவீதமாக மாத்திரமேயாக இருந்த அதேநேரம் 11 மாவட்டங்கள் எவ்வித தவணைப் பணத்தினையும் சேகரித்திருக்கவில்லை.

(உ) நிதிக் கூற்றுக்களின்படி, ரூபா 29,496,923 தொகையான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. அதேநேரம் சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் ரூபா 1,793,052 அல்லது மீளாய்வாண்டின் போதான ஓய்வூதிய கொடுப்பனவுகளில் 6.0 சதவீதம் மாத்திரம் இருந்தது.

### 4.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

---------------------------------------------------

சபையானது மீனவர் ஓய்வூதிய திட்டத்தின் உறுப்புரிமையை இழந்திருக்காத பங்களிப்பாளர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தவணைப்பண நிலுவைகளை அறவிட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) குறிக்கோள்களை எய்துதல்
(ஆ) மீனவர்களிற்கான நலக் கொடுப்பனவுகள்
(இ) பெறவேண்டிய காசு
(ஈ) 2 ஆவது மற்றும் பிந்திய தவணைப் பணங்களின் அறவீடு
(உ) ஆலோசனைக் குழுக்களின் செயற்பாடுகள்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
***M***

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams } රක්ෂණ / ரக்ஷன / Rakshana
117-සුභද්‍රාරාම පාර,ගංගොඩවිල,නුගේගොඩ
117-Subadrarama road,Gangodawila
Nugegoda

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No. } 2012/4/5/மு/ரி/2
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No. }
දිනය / திகதி / Date } 2013/07/08

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2012 ஆம் ஆண்டுக்காக கமத்தொழில் காப்புறுதித் திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 14 (2) (சீ) அறிக்கைக்குப் பதிலளித்தல்</u>**

2012 ஆம் ஆண்டுக்காக கமத்தொழில் காப்புறுதித் திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 14 (2) (சீ) அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பம்/ பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

දුරකථන / தொலைபேசி / Telephones | සභාපති / தலைவர் / Chairman 448693 / 448694 | සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager 438607 | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office 448691-2 / 438606 / 430058
ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 449316 | 438607

**<u>கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்</u>**

2. <u>நிதிக்கூற்றுக்கள்</u>

2.1 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u>

2.2 <u>நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</u>

2.2.1 <u>சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை</u>

**(அ)** 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை கமத்தொழில் காப்புறுதிச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒரேயோர் அரச நிறுவனமாகும். உள்நாட்டு விவசாயத்துறையின் உன்னதமான தலைவனாக அமைவதே எமது நோக்கமாகும். கடந்த 06 வருடங்களைக் கருத்திற் கொண்டால் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஆண்டுகள் அனைத்திலும் தொழிற்பாட்டு இலாபத்தை அடைய இயலுமாயிற்று.

கடந்த 06 வருடத் தரவுகள் பின்வருமாறு.

| ஆண்டு | தவணைப்பண வருமானம் | காப்புறுதி இழப்பீடு செலுத்துதல் | சதவீதமாக (%) |
|---|---|---|---|
| 2007 | 37.5 | 21.3 | 56.8 |
| 2008 | 70.5 | 27 | 38.2 |
| 2009 | 83.4 | 31 | 37.1 |
| 2010 | 105.1 | 268.7 | (255.6) |
| 2011 | 157.4 | 57.3 | 36.4 |
| 2012 | 124.7 | 126.6 | (101.5) |

2010 மற்றும் 2012 ஆம் ஆண்டினைத் தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் காப்புறுதி வருமானத்தைக்கொண்டு இழப்பீட்டினை முகாமைசெய்ய இயலுமாயிற்று என்பது இத்தரவுகளை ஆராய்கையில் புலனாகின்றது. 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான பாதகமான வானிலை காரணமாக இவ்விதமாக காப்புறுதி செய்துகொண்ட கமக்காரரர்களுக்கு கைகொடுத்து உதவும் பெருட்டு இழப்பீடு செலுத்தவேண்டி நேரிட்டது.

வருங்காலத்தில் தோன்றக்கூடிய எதிர்பாரா நிலைமைகளின்போது கமத்தொழில் காப்புறுதி நிதியம் இழப்பீடு செலுத்த போதுமானதாக அமையாவிட்டால் திறைசேரியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அதற்கான தீர்வுகளைப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது..

**(ஆ)** கடந்த ஒருசில வருடங்களில் தோன்றிய காலநிலை மாற்றங்களினால் உள்ளூர் கமக்காரர்களின் பயிர்ச்செய்கைகள் அழிவடைந்தமையால் பாரிய வசதியீனங்கள் தோன்றின. சபையின் காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொண்ட கமக்காரர்களுக்கு துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்தியதன் மூலமாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திவதில் எமது சபை வெற்றிகண்டது.

2.2.2 **இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

**(அ)** புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க முகப்பெறுமதி சமர்த்தல் இடம்பெற்றபோதிலும் முதற்றடவையாக சமர்ப்பிக்கும்போது மேற்கொள்ளவேண்டிய மீள்வகைப்படுத்தல் **Reclassification** மற்றும் மீள்கணிப்பீடு செய்யப்படல் **Remeasurement** மேற்கொள்ளப்படவில்லை. எதிர்வரும் கணக்காண்டில் சபையின் சொத்துக்களும் பொறுப்புக்களும் மீள்வகைப்படுத்தப்படவும் **(Reclassification)** மீள்கணிப்பீடு செய்யப்படவும் **(Remeasurement)** எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ)** கமத்தொழில் காப்புறுதித் திட்டத்திற்குச் சொந்தமான நீண்டகால முதலீடுகள் ஏதும் இல்லையென்பதோடு முதலீடுகள் அனைத்தும் குறுங்கால முதலீடுகளாகும். எனவே அந்த முதலீடுகளின் சந்தைப் பெறுமதிக்கும் புத்தகப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாடு கிடையாது.

**(இ)** எதிர்காலத்தில் அவசியமான வெளிப்படுத்தல்களைச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஈ)** பணிக்கொடை செலுத்துதல்களைக் கணிப்பிடுகையில் ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாவிட்டாலும் மெய்ச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பொறுப்பு கணிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பு தொடர்பாக தனிவேறான முதலீடு பேணப்படாவிட்டாலும் சபைனின் ஏனைய முதலீடுகளுல் இந்த முதலீடுகள் அடங்குகின்றன.

**(உ)** சம்பந்தப்பட்ட வழக்குதொடர்பாக நிதியறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததோடு அவ்வழக்குத தீர்ப்புக்கிணங்க இழப்பீடு செலுத்த நேரிட்ட 2013 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக கணக்குப்பதிய எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2.3 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ)** பயிர்க் காப்புறுதி நெறிப்படுத்லுக்காக புவியிடங்காட்டித் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான சாத்தியவளக் கற்கையானது முன்னோடிக் கருத்திட்டக் கிரயமொன்றாக அமைவதோடு இந்த ரூ. 153,836/= பணத்தொகையை மீண்டும் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துதல் மேற்கொள்ளப்படுகின்ற ஆண்டில் செலவினமாக கணக்குப்பதிய எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ)** முன்னாள் தலைவரின் மாதாந்தப் படியிலிருந்து கழிக்கப்பட்ட உழைக்கும்போதே செலுத்துதலானது அச்செலவு மேற்கொள்ளப்பட்ட 2013 ஆம் ஆண்டில் கணக்குப் பதியப்பட்டது.

**(இ)** சபையினால் நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணை அறிக்ககைக்கிணங்க சம்பந்தப்பட்ட நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டு தொடர்பாக இச்செலுத்துதல் கணக்குப் பதியப்பட்டது.

**(ஈ)** இறுதிக் கணக்குகள் பெப்ருவரி 28 ஆம் திகதியளவில் தயாரிக்கப்பட வேண்டுமென்பதால் கணக்குகள் முடிவுறுத்தப்படுகின்ற வேளையில் அறிவிக்கப்பட்ட அட்டுறு செலவினங்கள் அனைத்தும் கணக்குப் பதியப்பட்டன. பின்னர் அறிவிக்கப்படுகின்ற செலவுகள் 2013 ஆம் ஆண்டுக்காக கணக்குப் பதியப்பட் எதிர்பார்க்கப்படுகின்றது.

**(உ)** ஒருசில மாவட்ட அலுவலகங்களுக்கான வாடகை ஒரேதடவையில் சில மாதங்களுக்காக செலுத்தப்பட்டுள்ளதோடு அது செலுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் செலவினமாக கணக்குப் பதியப்பட்டுள்ளது. வருங்காலத்தில் வாடகையும் வீதவரியும் எதிர்வரும் ஆண்டின் ஒருசில மாதங்களுக்காக செலுத்தப்பட்டிருப்பின் அது எதிர்காலத்திற்காக மேற்கொண்ட செலுத்துதலாக காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.4 <u>விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்</u>**

**(அ)** இறுதிக் கணக்குகள் ஊடாக காட்டப்பட்டுள்ள வருமானம் சரியானதென்பதோடு கணக்குகளைத் தயாரிக்கும்போது சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுவதாலும் பிறவுன்ஸ் நிறுவனம் ஊடாக நேரடியாகவே வருமானம் கிடைப்பதாலும் நெறிப்படுத்தல் பிரிவிலும் இறுதிக் கணக்குகள் மூலமாகவும் காட்டப்படுள்ள காப்புறுதி வருமானத்தை ஒப்பிட இயலாது.

**(ஆ)** இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் காப்புறுதி இழப்பிட்டுக்கான ஒதுக்கீடுகள் செய்யப்படுவதால் காப்புறுதிப் பிரிவின் இழப்பீட்டுடன் ஒப்பிட இயலாது.

**2.2.5 <u>வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்</u>**

**(அ)** ஊழியர் கடன் முற்பண மீதிகளாக காட்டப்படுள்ள ரூ. 2,254,178/= பணத்தொகையில் கீழே குறிப்பிடப்பட்ட வகையினங்களில் காட்டப்பட்ட அறவிடப்படாத கடன் மற்றும் முற்பணம் சம்பந்தமாக தொடர்புடைய கடன்படுநர்களுக்கு கோரிக்கைப் பத்திரங்கள் மற்றும் கடிதங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் கடனையும் முற்பணத்தையும் செலித்த இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே கீழே குறிப்பிடப்பட்ட கடன்மீதிகளுக்காக பிணைகாரர்கள் உள்ள கடன்களுக்காக பிணைகாரர்களிடமிருந்து அறவிட அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ஏனைய கடன்படுநர்களுக்காக பணிப்பாளர் சபையின் தீரமானத்தின் பிரகாரம் வழக்கு தொடருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| | <u>பணத் தொகை (ரூபா)</u> |
|---|---|
| அ. இடர்க்கடன் | 12,38190.00 |
| ஆ. பண்டிகை முற்பணம் | 55300.00 |
| இ. விசேட முற்பணம் | 17050.00 |
| ஈ. மோட்டார் சைக்கிள் கடன் | 34,1572.00 |
| உ. விசேட ஊழியர் கடன் | 4800.00 |

**(ஆ)** இறந்த ஊழியர்களிடமிருந்து சபைக்கு அறவிடப்படவேண்டிய கடன் மற்றும் முற்பணத்தை பணிக்கொடையிலிருந்து அறவிட்டு ஏற்புடைய செலுத்தித் தீர்த்தலை மேற்கொள்ளும் பொருட்டு பணிப்பாளர் சபையிடமிருந்து 2012.12.28 ஆம் திகதிகொண்ட அனுமதி கோரப்பட்டுள்ளது. விபரமான தகவல்களை அறிவித்து இது சம்பந்தமாக மீண்டும் 2013.07.01 ஆம் திகதி நடைபெறவுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் கிடைத்த பின்னர் செலுத்துதல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ)** **STC** நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டுள்ள ரூ. 145,008/= பணத்தொகையை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு அந்நிறுவனத்திற்கு அறிவித்து அதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஈ)** இந்த மீதி 20 வருடங்களுக்கு மேலாக பழமை வாயந்ததென்பதால் பணிப்பாளர் சபைக்கு ஆற்றுப்படுத்தி கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**(உ)** கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காக கமத்தொழில் காப்புறுதி நிதியத்தில் இருந்து கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட இக்கடன்தொகை வருங்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட உள்ளது.

**(ஊ)** வெளிநிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு சம்பளம் மீள்நிரப்பப்படாத ஊழியர்கள் இன்றளவில் சேவையாற்றி வருவதில்லையென்பதோடு இது சம்பந்தமான பணிப்பாளர் சபைக்கு அறிவித்து தீர்மானம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.6 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை</u>

**(அ)** சபையானது ஊழியர் சேமலாப நிதியத்தைக் கணிப்பிடுவதற்காக அடிப்படைச் சம்பளம், கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் பதிற்கடமைப் படி போன்றவற்றையே ஆதாரமாகக் கொள்கின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் வரவு-செலவு முன்மொழிவுகள் மூலமாக வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியும் 15% விசேட கொடுப்பனவும் இக்கணிப்பீட்டுக்காக பயன்படுத்தப்படவில்லை. தொழில் ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைக்கிணங்க 2013 மே மாதத்தில் இருந்து இக்கொடுப்பனவுகளுக்கும் **<u>ஊசேநி</u>** கணிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** ஊழியர் நம்பிக்கைக்பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்பினை வழங்கும்போது அடிப்படைச் சம்பளம், கமக்காரர் ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் பதிற்கடமைப் படி போன்றவற்றையே ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வரவு- செலவு முன்மொழிவுகள் மூலமாக வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியும் 15% விசேட கொடுப்பனவும் இக்கணிப்பீட்டுக்காக பயன்படுத்தப்படவில்லை. தொழில் ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைக்கிணங்க 2013 மே மாதத்தில் இருந்து இக்கொடுப்பனவுகளுக்கும் **<u>ஊநநி</u>** கணிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(இ)** உழைக்கும்போதே செலுத்தும் வரியைக் கணிப்பிடுகையில் கடற்றொழிலாளர் ஓய்வூதியக் கொடுப்பனவு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படாவிட்டாலும் வருமான வரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும்பொருட்டு சம்பந்தப்பட்ட ஊழியருக்கு வழங்கப்படுகின்ற T10 அறிக்கையில் கெகொடுப்பனவிளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் அக்கொடுப்பனவினையும் மொத்தச் சம்பளத்தில் சேர்த்து உழைக்கும்போதே செலுத்தும் வரியை செலுத் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஈ)** சேதப் பதிவேட்டினை இற்றைப்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**(அ)** 2011 பெப்ருவரி மாதத்திற்கான நீர்ச்சிட்டைக் கட்டணமானது மார்ச் மாதத்திற்கான சம்பந்தப்பட்ட சிட்டையை மாத்திரம் செலுத்தியதன் பேரில் தவறவிடப்பட்டுள்ளது. எனவேமீண்டும் இணைப்பினை வழங்கவதற்கான கட்டணமாக ரூ.6720/= பணத்தொகையை செலுத்தவேண்டி நேரிட்டுள்ளது. இத்தகைய நிலைமை வருங்காலத்தில் ஏற்படாத வண்ணம் ஆவன செய்வேன்.

**(ஆ)** தலைமையகத்தை கங்கொடவிலவில் அமைந்துள்ள கட்டடத்திற்கு கொண்டுவந்தமையால் புகையிரதம் மூலமாக சேவைக்கு வருகைதந்த கம்பஹா மற்றும் அண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த ஊழியர்களால் உரியநேரத்தில் கடமைக்குச் சமுகமளிப்பதிலான சிரமத்தையும் வீடுதிரும்பிச் செல்வதிலான சிரமத்தையும் கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபைக்கு விடயங்களை எடுத்துரைத்து போக்குவரத்துச் சேவை வழங்கப்பட்டது. இந்த போக்குவரத்துச் சேவை மருதானை புகையிரத நிலையத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, புகையிரத தாமதம் காரணமாக ஊழியர்களுக்கு இப்போக்குவரத்துச் சேவை வழங்கப்பட்டபோதிலும் பெரும்பாலும் சேவைக்குச் சமுகமளிப்பதிலான சிரமங்கள் அவ்வாறே நிலவின.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட போக்குவரத்து உடன்படிக்கை ஆறுமாத காலத்திற்காக கைச்சாத்திடப்பட்டிருந்தமையால் 2012.12.31 வரை அவ்வாறே அமுலாக்கவேண்டிய நிலையேற்பட்டது. பின்னர் 2012.12.31 இல் இருந்து போக்குவரத்துச் சேவை நிறுத்தப்பட்டது. இதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு வருகைதருவதற்காகவும் வெளியேறிச் செலலவதற்காகவும் சலுகைக் காலமொன்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கம்பஹா பிரதேசத்தில் இருந்து வருகின்ற ஊழியர்களுக்கு பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கிணங்க போக்குவரத்து வசதிகளை வழங்காமை பற்றி இதற்கு முன்னரும் சபை ஊழியர்களின் மனக்குறைகள் மற்றும் பல்வேறு விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு இது ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகையேயன்றி சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**(இ)** எங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விதத்தில் இது பலனற்ற செலவாகக் கருதப்பட்டுள்ள போதிலும் அது பலனற்ற செலவு எனும் பிரிவுக்குள் வருவதில்லை.

இது சம்பந்தமாக 2013/01/16 ஆம் திகதிய தங்களது FB/E/AAIB/2012/AQ/05 இலக்கமுடைய கணக்காய்வு ஐயவினாவுக்கு 2013/01/28 ஆம் திகதி அளிக்கப்பட்ட

நீண்டதும் விரிவானதுமான பதிலுக்கிணங்க இக்கருத்திட்டம் பற்றியும் அதன் மூலமாக பெற்றுக்கொள்ள முயற்சி செய்த விடயம் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்க கொள்கைக்கிணங்க கமத்தொழில் காப்புறுதியை எதிர்காலத்தில் விரிவாக அமுலாக்கும் பொருட்டு பிறிதொரு நிறுவனத்திடம் கையளித்தல் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளமையால் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள சபை மேலும் முயற்சி செய்யாதிருக்கும்.

எவ்வாறாயினும் ஆய்வுரீதியான கருத்திட்டத்திலிருந்து கிடைத்த பெறுபேற்றினை பயனுறுதிமிக்கதாக எதிர்காலத்தில் ஈடுபடுத்த இயலாவிட்டால், எதிர்காலத்தில் கமத்தொழில் காப்புறுதியை அமுலாக்குகின்ற நிறுவனமொன்றிடம் கையளிப்பதன் மூலமாகவும் அதனைக் காப்புறுதி நெறிப்படுத்தல் செயற்பாட்டில் பயன்படுத்திவதன் மூலமாகவும் இது பலனற்ற செலவல்ல என்பது தெளிவாகும்.

## 3. <u>நிதிசார் மீளாய்வு</u>

### 3.1 <u>நிதிசார் பெறுபேறுகள்</u>

### 3.2 <u>நிதி நிலைமை பற்றிய பகுப்பாய்வுரீதியான மீளாய்வு</u>

### 3.3 <u>கருத்துபேதங்களுக்கு ஏதுவான விடயங்கள்</u>

**(அ)** வங்கிகள் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற விவசாயக் கடன்களை உள்ளடக்கும்போது கடனை விநியோகிக்கின்ற வேளையிலேயே காப்புறுதியுடன் தொடர்புடைய தவணைப்பணத்தை கடன்தொகையிலிருந்து கழித்து அதற்கான பற்றுச்சீட்டு வங்கியிலேயே விநியோகிக்கப்படும்

கடன் வழங்கப் பொருத்தமான மற்றும் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிர்ச்செய்கைக் கடன் வழங்கப்படுவதால் ஏற்புடைய பிரேரணைப் பத்திரம் அத்தருணத்திலேயே அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் சபையினால் பூர்த்திசெய்யப்படுகின்ற தருணங்கள் உள்ளன. இது 3 தரப்பினர்கள் கூட்டாகப் புரியும் கருமமென்பதால் இத்தகைய குறைபாடுகள் இடம்பெறுகின்றன. இத்தகைய குறைபாடுகளை முற்றாகவே இல்லாதொழித்து காப்புறுதிப் பணிகளை மேற்கொள்ள இயலாதென்பதால் குறைத்துக்கொள்வதற்கான உச்சமட்ட மயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் மாவட்ட அலுவலகங்கள் இடைக்கிடையே விழிப்பூட்டப்பட்டுள்ளன.

நேர்ந்துள்ள சேதம் உண்மையானதெனில், அத்துடன் சேதத்தை அடைந்த கமக்காரர்கள் சரிவர உறுதிப்படுத்தப்பட்டிருப்பின், அதனை (மா.உ.ப) விதந்துரைத்திருப்பின் இழப்பீட்டினை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

கமத்தொழில் காப்புறுதிப் பணிகளை ஈடேற்றுதல் மிகவும் சிக்கல்நிறைந்த செயற்பாடாக அமைவதால் இத்தகைய குறைபாடுகளின் மத்தியிலேனும் சேதத்தின் திட்பநுட்பத்தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டு கமக்காரர்களை சரிவர

இனங்கண்டு இழப்பீடு செலுத்தவேண்டிய நிலையேற்பட்டுள்ளதென்பதை தயவுடன் குறிப்பிடுகிறேன்.

**(ஆ)** இன்றளவில் அறவிடப்பட எஞ்சியுள்ள பணத்தொகை ரூ. 125,040.00 ஆகும். இத்தடவை பெரும்போகத்தில் இழப்பீட்டுத் தொகையை விடுவிக்கும்போதும் நிலுவைத் தொகைகள் மீள்அறவீடு செய்யப்படவேண்டியுள்ள கமக்காரர்களிடமிருந்து அப்பணத்தொகைகளைக் கழித்து சபைக்குப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு நடமாடும் இழப்பீட்டுக்கணிப்பு நடைபெற்ற இடங்களிலேயே மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் விழிப்பூட்டப்பட்டார்கள்.

**4. தொழிற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**<u>காப்புறுதிச் செயற்றிட்டங்களின் நிர்வாகம்</u>**

**(அ), (ஆ), (இ)**

2012 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் நிதியம் தீர்ந்தமையால் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருப்பவர்களுக்கும் புதிதாக ஓய்வூதியம்பெறத் தகைமைபெற்ற உதவுதொகை செலுத்துநர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டது. அரசாங்க நிதியங்கள் வழங்கப்படும்வரை ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் கமக்காரர்கள் அனைவரினதும் மனங்களைக் கவர்ந்த அத்துடன் கமக்காரர்களுக்கு நேரடியாக நன்மைகளைப் பெற்றுக்கொடுத்த செயற்றிட்டமாக அமைந்ததால் இந்த திட்டத்தினால் வழங்கப்பட்ட நன்மைகள் நிறுத்தப்பட்டமையால் கமக்காரர்கள் சபைமீது வைத்திருந்த நம்பிக்கை பழுதடைந்தது. சபையினால் அமுலாக்கப்படுகின்ற செயற்றிட்டங்கள் அனைத்துமே கமக்காரர்களுக்காக திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களாக அமைவதால் ஏனைய செயற்றிட்டங்களை கமக்காரர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி சேர்த்துக்கொள்வதும் சிரமமானதாக அமைந்தது. கமக்காரர் ஓய்வூதியத்தை கமக்காரர்களுக்கு செலுத்தும்வரை ஏனைய செயற்றிட்டங்களில் சேர்ந்துகொள்வதை கமக்கார்கள் மறுத்தார்கள். அதற்கிணங்க சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்துச் றெயற்றிட்டங்களினதும் நிதிசார் மற்றும் பௌதீக ஆகிய இரு துறைகளிலும் முன்னேற்றம் 2011 ஆம் ஆண்டைவிட மிகவும் வீழ்ச்சியடைந்தது.

எமது நிறுவனம் மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்களைக்கொண்ட நிறுவனமென்பதால் செயற்றிட்டங்களை வெளிக்களமட்டத்தில் நடைமுறைப்படுத்தும்போது விவசாயத்துறையுடன் தொடர்பிடையதாக செயலாற்றுகின்ற ஏனைய சகோதர நிறுவனங்களின் ஒத்துழைப்பினை உச்சஅளவில் பெற்றுக்கொண்டு இயங்கி வருகின்றது. அதற்கிணங்க கமநலஅபிவிருத்தி திணைக்களம், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், கமத்தொழில் திணைக்கணம், சிறு ஏற்றுமதிப் பயிர் திணைக்களம், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், சமுர்த்தி அதிகார சபை ,மகாவலி அதிகார சபை போன்ற அரச திணைக்களங்கள், சபைகள, அதிகார சபைகளினதும்

பிராந்திய அலுலகங்களினதும் குறைவற்ற ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட திட்டங்களை அமுலாக்கி உரிய இலக்குகளை அடைந்து வருகின்றது. குறிப்பாக அந்நிறுவனங்களின் ஏற்புடைய வெளிக்களப் பதவியினரது ஒத்துழைப்பு உச்சஅளவில் பெறப்பட்டது.

குறிப்பாக விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள், கிராம அலுவலர்கள், விவசாய ஆலோசகர்கள், அலகு முகாமையாளர்கள், மிருக வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் போன்ற வெளிக்களப் பணிகளுக்காக கமக்காரர்களுக்கு நெருக்கமான சேவைகளை நல்கிவருகின்ற உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு இதன்பொருட்டு குறைவின்றிக் கிடைத்தது. கமக்காரர் ஓய்வூதியத் திட்டதததை பிரபல்யப் படுத்துகையில் இவர்களின் ஒத்துழைப்பு குறைவின்றிக் கிடைத்ததோடு கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டமையால் தோன்றிய நெருக்கடிநிலையை எதிர்கொள்ளவேண்டிய நிலை இவர்களுக்கும் ஏற்பட்டது. அதற்கிணங்க அதுவரை அவர்கள் சபைக்கு வழங்கிய ஒத்திழைப்பினை நிறுத்திக்கொண்டதோடு அதற்கமைய வெளிக்களப் பணிகளைப் பரிவது எமது நிறுவனத்திற்கும் பாரிய சிக்கலாக அமைந்தது. உத்தியோகத்தர்களின் இந்த அதிருப்தி படிப்படியாக மாவட்ட விவசாயக் குழு வரை வியாபித்ததோடு , மாவட்ட மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்குவதுகூட நிறுத்தப்பட்டது. இது சம்பந்தமாக கொழும்பு மாவட்ட விவசாயக் குழுவில் கலந்துரையாடி பெற்றுக்கொண்ட தீர்மானத்தைக் காட்டுகின்ற கொழும்பு மாவட்ட விவசாயக் குழுவின் அறிக்கையும் கொழும்பு மாவட்ட உதவிப் பணிப்பாளரின் கடிதமும் பின்னிணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது. அங்கு கமக்காரர் ஓய்வூதிய சிக்கலைத் தீர்க்கும்வரை எந்தவொரு செயற்றிட்டத்தையும் விரிவாக்க ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டாதெனக் கூறப்பட்டுள்ளது. இந்த நிலைமை தீவு பூராவிலும் நடைமுறையில் இருந்ததோடு சபையின் வருமான நிலைமை 2011 ஆம் ஆண்டைவிட துரிதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கிணங்க பௌதீக மற்றும் நிதி ஆகிய இரண்டு பிரிவினதும் பின்னனடைவு காட்டப்பட்டுள்ளதோடு அந்தந்த மாவட்டங்களில் ஏறக்குறைய சம்பந்தப்பட்ட முன்னேற்றங்கள் அடையப்பெற்றுள்ளன.

இதற்கு மேலதிகமாக வங்கியூடாக பயிர்செய்கைக் கடன் வழங்கும் அளவு குறைவடைந்தமையும் பயிர்க் காப்புறுதி முன்னேற்றத்திலான வீழ்ச்சிமீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2010/2011 பாரிய வெள்ளப்பெருக்கு மற்றும் 2011/2012 பாரிய வரட்சி போன்ற காரணங்களின்பேரில் கமக்காரர்களின் விளைச்சல் அழிவடைந்ததோடு அதற்கமைய விவசாயிகள் பெற்றுக்கொண்ட கடன்மீளளிப்பு வீதமும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. அதன்விளைவாக வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடனின் அளவும் குறைவடைந்ததோடு பயிர்ச்செய்கைக் கடனை அடிப்படையாகக்கொண்டு அமுலாக்கப்படுகின்ற காப்புறுதியின் முன்னேற்றமும் அதன்படி வீழ்ச்சியடைந்தது. ஏனைய பயிர்களான மிளகாய் செய்கைக்காகவும் கடன்வழங்கப்படுவது மட்டுப்படுத்தப்பட்டமையால் ஏற்புடைய இலக்குகளை அடைய இயலவில்லை.

ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்தினால் மானிய வேலைத்திட்த்தின் கீழ் அமுலாக்கப்படுகின்ற பயிர்களைக் காப்புறுதி செய்யும் நோக்கத்துடன் ஏற்றுமதிக்கான பல்லாண்டுப் பயிர்க் காப்புறுதி நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், அந்த மானியத் திட்டங்கள் தாழ்ந்த மட்டத்தில் நிலவியமையும் அக்காப்புறுதிப் பணிகளின் விரிவாக்கத்திற்குத் தடையாக அமைந்நதது.

போட்டித்தன்மைகொண்ட காப்புறுதி நிறுவனமொன்றும் இக்காப்புறுதிப் பணிகளில் பிரவேசித்ததுடன் குறிப்பாக சணச போன்ற நிறுவனங்கள் கால்நடைக் காப்புறுதிக்காக எமது நிறுவனத்தைப் பாரக்கிலும் சலுகைநிறைந்த வழிமுறையொன்றையும் தவணைப்பணத்தையும் அறிமுகஞ் செய்தமையால் கால்நடைக் காப்புறுதித்திட்டத்திலும் சம்பந்தப்பட்ட முன்னேற்றத்தை அடையஇயலவில்லை.

காலநடைக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மாடுகள் காப்புறுதித் திட்டத்திற்காக சணச மூலமாக அமுலாக்கப்பட்ட தவணைப்பண வீதமானது எமது நிறுவனத்தினால் அமுலாக்கப்படுகின்ற தவணைப்பண வீதத்தைப் பார்க்கிலும் சவர்ச்சிகரமான வீதமாக விளங்கியது. சபை எதிர்நோக்கியுள்ள பொருளாதார வசதியீனங்களின் பேரில் நிறுவனத்தினால் அமுலாக்கப்படுகின்ற தவணைப்பண மட்டத்தைக் குறைப்பதற்கான ஆற்றல் இருக்கவில்லையென்பதோடு சணச மூலமாக மாடுகள் காப்புறுதிக்காக அறவிடப்படுகின்ற தவணைப்பண வீதம் காப்புறுதிப் பெறுமதியின் 3%மாத்திரமே. அது அனைத்து வரிகளையும் உள்ளடக்கியதாக 3.56 இல் இருந்து 4.6 % வரையான பெறுமானம் கொண்டதாக அறவிடப்பட்டுள்ளது.

இந்த தவணைப்பண வீதம் சபையினால் அறவிடப்படுகின்ற தவணைப்பண வீதத்தைப் பாரக்கிலும் குறைவான பெறுமானம் கொண்டதாக அமைந்ததோடு அந்தளவு குறைந்த தவணைப்பண மட்டத்தைப் பேணிவருவது சபைக்கு மிகவும் சிரமமான கருமமாக அமைந்தது. அதற்கிணங்க அரச நிறுவனங்களில் காப்புறுதி செய்யப்பட்ட விலங்குகளில் பெரும்பாலானவை சணச நிறுவனத்தினால் கவர்ந்திழுக்கப்பட்டதுடன் எமது முன்னேற்றத்தில் பாரிய வீழ்ச்சியும் ஏற்பட்டது. அதற்கிணங்க சபையின் தவணைப்பணம் சம்பந்தமாகவும் ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ள இவ்வாண்டில் சபைக்கு நேர்ந்தது.இந்த தவணைப்பணத் திருத்தங்கள் சணச நிறுவனம் அமுலாக்குகின்ற தவணைப்பணத்துடன் போட்டியிடப் போதமானதாக அமைவதில்லையென்பதோடு, சபை நிகழ்காலத்தில் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைமையின் கீழ் இதைவிடக் குறைந்த மட்டத்திற்கு அதனைக் கொண்டவருவதற்கான ஆற்றலும் சபைக்கு கிடையாது.

அத்துடன் ஆடுகள் காப்புறுதிக் கருத்திட்டமானது அரச உதவியின் கீழ் வழங்கப்படுகின்ற கருத்திட்டங்களில் உள்ள ஆடுகளைக் காப்புறுதி செய்யும் அடிப்படையில் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க அரசாங்கத்தினால் ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் ஏற்றஇறக்கங்களுக்கமைய அதன் இலக்குகளை அடைவதிலான சதவீதமும் கூடிக்குறையும். எனவே அரசாங்கத்தின் ஆடுகள் கருத்திட்டம் அதிகளவில் அமுலாக்கப்படாமையால் இந்த காப்புறுதியின் முன்னேற்றமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இக்காப்புறுதிச் செயற்பாடுகளில்

பங்கேற்கின்ற ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற தரகுக் கொடுப்பனவும் எமது நிறுவனத்தைப் பார்க்கிலும் தனியார் நிறுவனங்களினால் கவர்ச்சிகரமானதாக பேணிவரப்படுவதும் இக்காப்புறுதி இலக்குகளை அடைவதில் சிக்கலாக அமைகின்றது. எவ்வாறாயினும் ஆடுகள் மற்றும் மாடுகள் காப்புறுதியை ஒட்டுமொத்தமாக எடுத்துநோக்கினால் அநுராதபுரம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்கள் இலக்குளை விஞ்சிசெல்வதில் வெற்றியடைந்துள்ளதோடு கம்பஹா, மன்னார், மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் மன்னம்பிட்டி ஆகிய மாவட்டங்கள் 90% ஐ பாரக்கிலும் முன்னேற்றத்தை அடைந்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டம் 80 % ஐ விஞ்சிய முன்னேற்றத்தையும், மொனறாகலை மாவட்டம் 65 % ஐ விஞ்சிய முன்னேற்றத்தையும், பதுளை மாவட்டம் 57 % ஐ விஞ்சிய முன்னேற்றத்தையும், திருகோணமலை மாவட்டம் 46 % ஐ விஞ்சிய முன்னேற்றத்தையும், கேகாலை மாவட்டம் 42 % ஐ விஞ்சிய முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. 30% ஐ விஞ்சிய முன்னேற்றத்தை நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களும் 20% ஐ விஞ்சிய முன்னேற்றத்தை மாத்தளை, காலி, கண்டி ஆகிய மாவட்டங்களும் அடைந்துள்ளன. அம்பாறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்கள் 19% ஐ விஞ்சிய முன்னேற்றத்தை அடைந்துள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அது 15.39% ஆகும். பொலநறுவையும் உடவளவையும் 10%ஐ விஞ்சிய முன்னேற்றத்தையும் பெற்றிள்ளதோடு களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் மாத்திரமே 10% இற்கு குறைவான முன்னேற்றத்தைப் பதிவுசெய்துள்ளன.

விவசாய உபகரணங்கள் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி மற்றும் சுவசெத போன்ற காப்புறுதித் திட்டங்களின்பால் கமக்காரர்கள் தமது சுயவிருப்பின்பேரில் தூண்டப்படல் வேண்டுமென்பதோடு கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தாமை அவர்களை அக்காப்புறுதித் திட்டங்களின்பால் ஈர்த்துக்கொள்வதில் பாரிய தடையாக அமைந்தது. கமக்காரர்களுக்கு மீண்டும் ஓய்வூதியம் செலுத்தப்படும் வரை வேறு எந்தவொரு திட்டத்திலும் சேர்ந்துகொள்வதை கமக்காரர்கள் மறுத்தனர்.

நெற்பயிர்க் காப்புறுதியைச் சார்ந்ததாக அரசாங்கம் கொள்வனவில் ஈடுபட்டு அவற்றைக் களஞ்சியப்படுத்துகையில் ஓர் அரச நிறுவனமென்ற வகையில் அவற்றைக் காப்புறுதி செய்வதை நோக்கமாகக்கொண்டு களஞ்சியக் காப்புறுதி நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அவ்வேளையாகும்போது அரசாங்க நெற்களஞ்சியங்களை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகம் மூலமாக காப்புறுதி செய்ய நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை எடுத்திருந்தமையால் அந்த இலக்குகளை அடைய சம்பந்தப்பட்ட மாவட்டங்களால் இயலவில்லை. அதற்கிணங்க சிறியளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற கம்பஹா போன்ற மாவட்டங்களில் மாத்திரமன்றி பாரியளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற அம்பாறை போன்ற மாவட்டங்களில் இருந்தும் எவ்விதமான முன்னேற்றத்தையும் பெற்றுக்கொள்ள இயலாமல் போயிற்று.

**(ஈ)** மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் மலர்கள், தெங்கு மற்றும் கரும்புச் செய்கைக் காப்புறுதி தொடர்பிலும் தாக்கமேற்படுத்தின. அதற்கு மேலதிகமாக இப்பயிர்ச் செய்கைகள் சம்பந்தமாக எவ்விதமான முன்னேற்றத்தையும் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமைக்கு பின்வரும் காரணங்களும் தாக்கமேற்படுத்தி உள்ளன. தீவில் பாரியளவில் அமுலாக்கப்படுகின்ற

மலர்ச்செய்கைக் கருத்திட்டங்கள் அதிகளவில் இல்லாமையும் மலர்ச்செய்கைக் காப்புதியை நடைமுறைப்படுத்துவதில் தடையாக விளங்குகின்றது. அத்துடன் வீட்டுத் தோட்டங்களைச் சார்ந்த சிறிய செய்கைகளில் மடிகின்ற செடிகளின் எண்ணிக்கை குறைவானதென்பதால் மலர்ச்செய்கையாளர்கள் காப்புறுதி செய்துகொள்வதன்பால் தூண்டப்படுவதில்லை. அத்தகைய சிறியளவிலான செய்கைகளுக்காக கடன் வழங்கப்படுவதில்லையென்பதால் ஏற்புடைய இலக்குகளுக்கமைவாக எவ்விதத்திலும் காப்புறுதிசெய்ய இயலவில்லை.

தெங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம் தெங்கு அபிவிருத்தி அமைச்சு மற்றும் தெங்குச் செய்கை சபையின் வேண்டுகோளின் பேரில் தெங்கு முக்கோணத்தைச் சேர்ந்த குருநாகல், புத்தளம் , கம்பஹா, கேகாலை ஆகிய ஆளுகைப் பிரதேசங்களில் அமுலாக்கப்பட்டது. அதற்கிணங்க தெங்கு செய்கைச் சபையின் தெங்கு மீள்நடுகைக்கான உதவித்திட்டத்தின் கீழ் பயிர்செய்கைக்காக தெரிவுசெய்யப்பட்ட செய்கையாளர்களுக்கு காப்புறுதிக் காப்பீடு வழங்கப்பட்டதோடு தென்னங்கன்றுகளை நடுகை செய்த தினத்திலிருந்து 4 வருட காலஎல்லைக்காக மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டது. இத்தயை விசேட கருத்திட்டங்களை அமுலாக்குதல் மட்டுப்படுத்தப்பட்டமையால் இக்காப்புறுதி இலக்குகளை அடைய இயலவில்லை. இதன்கீழ் வேறு தெங்குச் செய்கைகள் காப்புறுதிக்கு உட்படுத்தப்படவில்லை. அந்நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற மானியங்கள் கூடிக்குறைவதற்கிணங்க இக்காப்புறுதித் திட்டத்தின் முன்னேற்றம் தங்கிஉள்ளது. மேற்படி மானியம் குறைவடைந்தமையால் இக்காப்புறுதியில் முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

கரும்புச் செய்கைக் காப்புறுதி ஹிங்குரான மற்றும் பெலவத்த கரும்புச்செய்கையைத் தொடர்புபடுத்திக்கொண்டு திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. ஹிங்குரான கம்பெனியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தவணைப் பணத்திலான திருத்தம் தொடர்பாக அந்நிறுவனத்தின் நிர்வாகிகள் முன்வைத்த பிரேரணையை பரிசீலனை செய்தபோது சபையின் நடப்பு நிலைமையின் கீழ் அத்தகைய திருத்தமொன்றைச் செய்து தவணைப்பணத்தைக் குறைப்பதற்கான ஆற்றல் சபைக்கு இருக்கவில்லை. இன்றளவில் கரும்புச் செய்கைக் காப்புறுதி சம்பந்தமாக போட்டிமிக்க நிறுவனமொன்றாக சணச தொடர்புகொண்டு அவர்கள் எமது சபையைப் பாரக்கிலும் குறைந்த தவணைப்பணத்தின் கீழ் காப்புறுதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்கள். ஹிங்குரான கரும்புச் செய்கைக் காப்புறுதிப் பணிகள் சணச மூலமாக மேற்கொள்ளப்படுவதோடு, எமது நிறுவனத்திற்கு அந்த வாய்ப்பு கைநழுவிப் போய்விட்டது.

பெலவத்த கம்பெனியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருந்த போதிலும் அந்நிறுவனத்தில் நிலவிய நிர்வாகச் சிக்கல் காரணமாக அது அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது. அதற்கிணங்க அந்நிறுவனத்தில் நிலவிய நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் சம்பளப் பிரச்சினை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு செயலாற்றப்பட்டதோடு, பயிர்ச்செய்கைக் காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பாக கவனஞ்

செலுத்தப்படவிலலை. இதனால் கரும்புச் செய்கைக் காப்புறுதிப மூலமாக எதிர்பாரத்த இலக்குகனை எமது சபையினால் அடைய இயலவில்லை.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையீனம்

முன்னாள் உதவிப் பணிப்பாளர் திருமதி.ஆர்.பீ. பந்துமதீ தொழில் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்த முறைப்பாடினை விசாரித்து அதன் நடுத்தீர்ப்பாளரால் நடுத்தீர்ப்பு அளிப்புத் தொகையாக ரூ. 225,000/= ஐ அவருக்குச் செலுத்துமாறு அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனஞ் செய்யப்பட்டிருந்தது. இதற்கு எதிராக சபை மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பேராணை மேன்முறையீட்டு வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்ததோடு அதனோடு தொடர்புடைய கடிதக்கோப்பு முறைப்படி சபையின் முன்னாள் பிரதிப் பணிப்பாளரினால் (சட்டம்) வழக்குக்காக தோற்றிய வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்படாமை என்ற காரணத்தின் பேரில் வழக்குக்காக அழைக்கப்பட்டிருந்த 2012.05.02 ஆம் திகதி வழக்கறிஞர் வழக்குக்காக தோற்றவில்லை. பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) திரு. கே.எம். எல். டயஸ் இக்கடமைக்குப் பொறுப்பாக இருந்ததோடு அவரது கடமை வினைத்திறமையீனம் மற்றும் நியமனத்துடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பியாமையின் பேரில் நியமனம் முடிவுறுத்தபட்டிருந்த நிலைமையின் கீழ் அக்கடமையை உரியவகையில் அமுலாக்க நிலவிய சூழ்நிலையின் கீழ் சபைக்கு முடியாமல் போயிற்று. இந்த நிலைமையின் கீழ் சம்பந்தப்பட்ட வழக்குக்காக வழக்கறிஞரோ அல்லது சபையின் பிரதிநிதியோ தோற்றாமையினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.எனவே ஏற்புடைய நடுத்தீர்ப்பு அளிப்புத் தொகையினை செலுத்தாமைக்கு எதிராக தொழில் ஆணையாளரால் நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையின் பேரில் நடுத்தீர்ப்பு அளிப்புத் தொகையாக ரூ.200,000/= பணத்தொகை சபையினால் சம்பந்தப்பட்ட ஊழியருக்கு செலுத்தும் பொருட்டு நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டது. நிலவுகின்ற சூழ்நிலையில் இத்தகைய தவறுகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத விடயமாக அமைந்தது. எனவே இது வேண்டுமென்றே புரிந்த ஒரு செயலல்ல எனச் சுட்டிக்காட்டுவதோடு தற்போது நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்ட கடமைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் பேணிவரப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவென்பதை அறிவிக்கிறேன்.

## 4.3 பாவனைக்கு எடுக்கப்படாத சொத்துக்கள்

**(அ)** 31 - 4288, HH 7355, HH 7263, HH 6983 இலக்கமுடைய வாகனங்களின் பழுதுபார்த்தலுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதோடு அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பழுதுபார்த்தலின் பின்னர் இவ்வாகனங்களைப் பாவனைக்கு எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ)** அச்சிடப்பட்ட கையிருப்பினை அழிப்பதற்காக சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதோடு, அதன் பின்னர் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பணக்குகளிலிருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 4.4 தாமதித்த கருத்திட்டங்கள்

இந்த இடம் சதுப்பு நிலமாக அமைவதால் நிர்மாணிப்புகளைத் தொடங்க முன்னர் நீரை வழிந்தோடச் செய்வித்து தரையைப் பண்படுத்துவதற்காக கமததொழில் அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல் கிடைத்ததோடு, மேற்படி அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ. 565,800/= செலவிடப்பட்டது. எனினும் எதிர்கால வேலைகளைச் செய்வதற்கு அவசியமான நிதியேற்பாடுகளை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் அக்கருத்திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது. எனினும் கருத்திட்டத்தை ஆரம்பித்து கட்டடத்தை நிர்மாணிக்க அவசியமான நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கேதுவாக ஒவ்வோராண்டிலும் வரவு-செலவு மதிப்பீடுகளில் உள்ளடக்குமாறு திறைசேரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தற்போதய சூழ்நிலையில் இந்த இடத்தில் கட்டடமொன்றினை அமைத்தல் தொடர்பாக நிதியேற்பாட்டினை ஒதுக்கிக்கொள்வதில் சிக்கல்கள் நிலவுவதால் காணிமீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியுள்ள பணத்தொகை சம்பந்தமாக அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்வேன்.
(இவ்விடயத்துடன் தொடர்புடைய EF/E/AAIB/2011/03– 2011.08.01 கணக்காய்வு ஐயவினாவுக்கு 3/6/2 இலக்கமும் 2011. 08.30 திகதியும் கொண்ட பதில் அனுப்பப்பட்டுள்ளது.)

### 4.5 <u>சொத்துவம் சபைக்கு உரித்தாகாத காணிகளில் கட்டடங்களை நிர்மாணித்தல்</u>

**(அ) , (ஆ)**

1986 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபை மூலமாக பெறப்பட்ட காணியொன்றில் சபையினால் எம்பிலிபிட்டிய பிராந்திய அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, அக்காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட காணிக்காக சட்டமுறையான சாட்டுதல் செய்யப்படவில்லை. இக்காணி பிற்காலத்தில் வரிசை அமைச்சிடம் கையளிப்பதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறையாகி உள்ளது. எனினும் இதற்காக மகாவலி அதிகார சபையினால் அறிவித்தல் வழங்கப் பட்டிருக்கவில்லை. தற்போது பகிரங்கத் தொழில்முயற்சிகளுக்காக (கூட்டுத்தாபனங்கள், சபைகள்) மகாவலி காணிகளின் சொத்துவ உரிமை நேரடியாக சாட்டுதல் செய்தல் நடைமுறையில் இல்லை.

தம்பத்தேகம அலுவலகக் கட்டடமும் காணியும் இலங்கை மகாவலி அதிகார சபையின் “எச்” வலயத்திற்குரியதாக அமைவதோடு எம்பிலிபிட்டிய அலுவலகக் காணியைப் போன்றே இதற்காகவும் சட்டமுறையான சாட்டுதல் செய்யப்படவில்லை. இக்கட்டடம் பிற்காலத்தில் சபையினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அப்போது நிலவிய சூழ்நிலையில் எதிர்காலத்தில் இக்காணி சபைக்கு கையளிக்கப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சபையின் உயர் முகாமைத்துவம் இக்காணிகளில் கட்டடடங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளமை புலனாகின்றது.
2011 ஆம் ஆண்டில் தம்புத்தேகம அலுவலகத்திற்காக நிலுவைக் குத்தகைத் தொகைகையைச் செலுத்துமாறு வதிவிட முகாமையாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க சம்பந்தப்பட்ட பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளதோடு30 வருட குத்தகை ஒப்பந்தத்தை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எம்பிலிபிட்டிய காணிக்காக 2012 ஆம் ஆண்டு வரை குத்தகை தொகையைச் செலுத்துமாறு முதல் தடவையாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.
இது இலங்கை மகாவலி அதிகார சபையினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைரீதியான தீர்மானமாகும்.
சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகையினைசெலுத்துதல் சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அமைச்சு செயலாளருக்கும் பிரதியை அனுப்பி நிவாரணம் கோரியுள்ளபோதிலும் மேற்படி நிலுவைத் தொகையினை செலுத்துமாறு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.
எவ்வாறாயினும் தற்போதய சூழ்நிலையில் இக்காணியை இந்நிறுவனத்திற்கு நிரந்தரமாக பொறுப்பேற்க இயலாதென்பதோடு நெடுங்கால குத்தகையின் கீழ் பேணிவரவேண்டி நேரிட்டுள்ளது.

(இவ்விடயத்துடன் தொடர்புடைய FB/E/AAIB/2012/AQ/10 – 2013.04.29 கணக்காய்வு ஐயவினாவுக்கு 3/6/2 இலக்கமும் 2013.05.16 திகதியும் கொண்ட பதில் அனுப்பப்பட்டுள்ளது.)

**4.6 மனிதவள முகாமத்துவம்**

2010.12.31 ஆந் திகதியில் இருந்து 2012.12.31 ஆந் திகதி வரை, சுட்டிக்காட்டப்பட்டுள்ள வெற்றிடங்கள் சபை தற்போது எதிர்நோக்கியுள்ள மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் மத்தியில் நிரந்தர நியமனங்கள் மூலமாக பூர்த்திசெய்யப்படுதலை தற்காலிகமாக இடைநிறுத்த பணிப்பாளர் சபை ஆலோசனை வழங்கியுள்ளதென்பதை குறிப்பிடுகிறேன்.

### 4.7 வாகனப் பாவனை

| வாகனம் | காரணம் |
|---|---|
| 31 - 4288 | விவசாய அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதெனக் குறிப்பிடப்பட்டபோதிலும் அவ்வதிகார சபை தற்போது மூடப்பட்டுள்ளதால் கையேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது |
| HH7355<br>HH7263<br>HH6983<br>HH7563<br>HH6105 | கமத்தொழில் அமைச்சு இவ்வாகனங்களின் விலைகளை மதிப்பீடு செய்து அப்பணத்தைச் செலுத்தி கையேற்பதற்கு ஆவன செய்யுமாறு அறிவித்துள்ளது. இதற்கான நிதியேற்பாடுகள் வழங்கப்படவில்லை என்பதால் இயலாமல் போயுள்ளது. |
| 32-5210 | ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய தாபனத்திற்கு சொந்தமானதென்பதால் கையேற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமல் போயுள்ளது. |
| 51-2423 | பல்லாண்டுப் பயிர்க் கருத்திட்டத்திற்குச் சொந்தமானதாக அமைவதோடு இதன் பதிவுப் புத்தகம் நீதிமன்றப் பணிக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் கையேற்கும் பணிகளை மேற்கொள்ள இயலாமல் போயுள்ளது |
| HH7563, HH6105, 32-5210, 51-2423 வாகனங்களின் வருமான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் காப்புறுதிப் பணிகள் இற்றைப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. | |

## 5. வகைபொறுப்பு கூறுதலும் நல்லாட்சியும்

### 5.1 கூட்டாண்மைத் திட்டம்

2005-2010 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டாண்மைத் திட்டத்தை மீளாய்வு செய்து சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் அனைவரினதும் பங்களிப்புடன் 2008 - 2012 வரையான புதிய கூட்டாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டதோடு அக்கூட்டாண்மைத் திட்டத்திற்கிணங்க சபைணின் வரவு - செலவுத் திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும் ஒவ்வோராண்டிலும் தயாரிக்கப்படும். தற்போது சபையை மறுசீரமைப்பதற்காக பொதுதிறைசேரி திட்டமிட்டு வருவதால் எதிர்காலத்தில்

அத்தகைய இற்றைப்படுத்தல் வேலைத்திட்டத்திற்கு நேரொத்ததாக எதிர்வரும் ஆண்டுகளுக்கான கூட்டாண்மைத் திட்டத்தை தயாரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

5.2 சபையின் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு நேரொத்ததாக செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து மாவட்ட அலுவலகங்களுக்காக நெறிப்படுத்தல் இலக்குகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட நெறிப்படுத்தல் இலக்குகளை மேற்பார்வை செய்து செயற்பாட்டுத் திட்டத்தை நல்லாட்சிக்கான கருவியாக சபை பாவித்தது.

5.3 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

**வரவு-செலவுத் திட்டத்தை சபையின் நல்லாட்சிக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

6. <u>முறைமைகளும் கட்டுப்பாடும்</u>

காப்புறுதிச் செயற்றிட்டங்கள், இழப்பீடு செலுத்துதல், கூட்டாண்மைத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம், பாதீடு, ஊழியர் கடன், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகிய முறைமைகளில் சிறந்த கட்டுப்பாட்டினை எற்படுத்தவல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams: රක්ෂණ / ரக்ஷன / Rakshana
117-සුභද්‍රාරාම පාර,ගංගොඩවිල,නුගේගොඩ
117-Subadrarama road,Gangodawila
Nugegoda

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No.: 2012/4/5/மு /டொ/2
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No.:
දිනය / திகதி / Date: 2013/07/23

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**2012 ஆம் ஆண்டுக்காக கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 14 (2) (சீ) அறிக்கைக்குப் பதிலளித்தல்**

2012 ஆம் ஆண்டுக்காக கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 14 (2) (சீ) அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பம்/ பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

| | සභාපති / தலைவர் / Chairman | සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephones | 448693 / 448694 | 438607 | 448691-2 / 438606 / 430058 |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 449316 | 438607 | |

**கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

சம்பந்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் சன்மைகளை ஐந்து மடங்குகளால் அதிகரித்து அறவிடப்படுகின்ற தவணைப்பணத்தை அவ்வாறே பேணிவந்தமையால் இந்த நிலைமை தோன்றியுள்ளது. எவ்வாறாயினும் செயற்றிட்டத்தின் நிதியங்கள் 2010 ஆம் ஆண்டில் தீர்ந்த பின்னரும் சபையில் அமுலில் உள்ள ஏனைய செயற்றிட்டங்களிலிருந்து நிதியங்களைப் பெற்று நன்மைகள் செலுத்தப்பட்டன. மேலும் தற்போது அமுலாக்கப்பட்டு வருகின்ற திட்டத்தை மறுசீரமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் தற்போது பொதுதிறைசேரியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அமைந்தொழுகாமை

**(அ)** புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க முகப்பெறுமதி சமர்த்தல் இடம்பெற்றபோதிலும் முதற்றடவையாக சமர்ப்பிக்கும்போது மேற்கொள்ளவேண்டிய மீள்வகைப்படுத்தல் **Reclassification** மற்றும் மீள்கணிப்பீடு செய்யப்படல் **Remeasurement** மேற்கொள்ளப்படவில்லை. எதிர்வரும் கணக்காண்டில் சபையின் சொத்துக்களும் பொறுப்புக்களும் மீள்வகைப்படுத்தப்படவும் **(Reclassification)** மீள்கணிப்பீடு செய்யப்படவும் **(Remeasurement)** எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ)** கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்குச் சொந்தமான நீண்டகால முதலீடுகள் ஏதும் இல்லையென்பதோடு முதலீடுகள் அனைத்தும் குறுங்கால முதலீடுகளாகும். எனவே அந்த முதலீடுகளின் சந்தைப் பெறுமதிக்கும் புத்தகப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாடு கிடையாது.

**(இ)** எதிர்காலத்தில் அவசியமான வெளிப்படுத்தல்களைச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஈ)** பணிக்கொடை செலுத்துதல்களைக் கணிப்பிடுகையில் ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாவிட்டாலும் மெய்ச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பொறுப்பு கணிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பு தொடர்பாக தனிவேறான முதலீடு பேணப்படாவிட்டாலும் சபைனின் ஏனைய முதலீடுகளுல் இந்த முதலீடுகள் அடங்குகின்றன.

**(உ)** 2007 ஆம் ஆண்டின் ஆயுட்கணிப்பு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியப் பொறுப்பு கணிக்கப்பட்டுள்ளது.

**2.2.3** **<u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>**

**(அ)** அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவினை செலுத்துகையில் திறைசேரியின் நேரடித் தலையீட்டின்பேரில் நிதியேற்பாடுகள் மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டமையால் சபையின் பொறுப்புக்கு சீராக்கங்கள் செய்யப்படவில்லை.

**(ஆ)** ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்பினை கணக்குப்பதியும்போது ஓய்வூதியம் செலுத்துதலுடன் தொடர்புடைய நேரடிச் செலவினமான ஓய்வூதியம் செலுத்துவதற்கான தரகுச் செலவும் கருத்தில் கொள்ளப்பட்டது.

**2.2.4** **<u>வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்</u>**

**(அ)** 2012.12.31 ஆந் தேதியில் சபைக்கு கூட்டுறவுச் சங்கங்களாலும் கிராமிய வங்கிகள் மூலமாகவும் வருமதியான பெறுமதியே வருமதியான வருமானமாக ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. 450 இற்கு மேற்பட்ட அத்தகைய நிறுவனங்கள் நாடு பூராவிலும் காணப்படுவதோடு ஏறக்குறைய 350 நிறுவனங்களுக்கு மாத்திரம் மீதியை உறுதிப்படுத்தி அனுப்பிவைக்குமாறு சபை அறிவித்துள்ளபோதிலும் அத்தகைய ஒருசில நிறுவனங்களிடமிருந்து மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் எமக்கு கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் 45% இற்கு மேற்பட்டவை மீதியை உறுதிப்படுத்தல்களை அனுப்பி உள்ளதோடு அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உயர் பெறுமானத்தைப் பெற்றுள்ளதெனச் சுட்டிக்காட்ட இயலும்.

**(ஆ)** கணக்காய்வுக் கட்டணங்களுக்காக முன்வைக்கப்பட்ட பணத்தொகையை சபையின் நடப்பு நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு குறைக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானத்திற்கிணங்க கணக்காய்வுக் கட்டணங்களைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ)** கமக்காரர் ஓய்வூதிய நிதியம் பூச்சியநிலையுற்ற வேளையில் அதற்கு தீர்வு காணும் பொருட்டு திறைசேரியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது சபையின் ஏனைய நிதியங்கள் மூலமாக கமக்காரர் ஓய்வூதியத்தைச் செலுத்துமாறு தீர்மானித்து வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் இருந்தும் கமத்தொழில் காப்புறுதி நிதியத்தில் இருந்தும் இந்நிதியங்கள் பெறப்பட்டன. பொதுதிறைசேரியின் இடையீட்டுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிதியங்களை மீளச் செலுத்தித் தீர்த்தல் பற்றி பரிசீலனைசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.2.5 கருத்து பேதங்களுக்கு ஏதுவாக அமையக்கூடிய விடயங்கள்**

**(அ)** மாவிலாறு சம்பவத்தினால் சேதமேற்பட்ட கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்துகையில் நேர்ந்துள்ள இந்த சிக்கலான சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருகின்றது.

**(ஆ)** இந்த தவணைப்பண மோசடியுடன் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர் திரு. சுசில் பிரேமரத்னவின் தொழில் இடைநிறுத்தப்பட்டிருந்ததோடு அவருக்கு எதிராக HC/5/2009 ஆம் இலக்க வழக்கு அநுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. இவர் ரூ. 100,000/= பணத்தை சபைக்கு செலுத்தி இருந்த வேளையில் இறந்துள்ளார். இதனால் இவருக்கு எதிராக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதென்பதால் சம்பந்தப்பட்ட வழக்கறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து திரமாம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

**2.2.6 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை**

பொலநறுவை மாவட்டத்துடன் தொடர்புடைய கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல் பதிவேடு மாவட்டச் செயலாளரால் தற்போது சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் பெறுபேறுகள்**

**3.2 நிதிநிலைமை பற்றிய பகுப்பாய்வுரீதியான மீளாய்வு**

**(அ)** **(i)** ஓய்வூதியத் திட்டம் மேம்படுத்தப்படாமையால் 2007 முதல் 2012 வரை வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதோடு வயது 60 வருடங்கள் பூர்த்தியானமையால் பெருந்தொகையானோர் ஓய்வூதியம் பெறுவதற்கான தகைமையைப் பெற்றதனாலும் மேலும் ஒருபகுதியினர் திட்டத்திலிருந்து விலகியமையாலும் செலவு படிப்படியாக அதிகரித்துள்ளது.

**(ii)** கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுகளில் சரியான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அதற்கிணங்க ஓய்வூதியப் பொறுப்பு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்பு அதிகரித்தமையால் பற்றாக்குறையும் படிப்படியாக அதிகரித்துள்ளது.

**(ஆ)** நிலவுகின்ற ஓய்வூதியத் திட்டம் மேம்படுத்தப்படாமையால் வருடந்தோறும் வருமானம் படிப்படியாக குறைவடைந்துள்ளதோடு திட்டத்தில் சேர்ந்துள்ள உதவுதொகை செலுத்துநர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கான தகைமையைப் பூர்த்திசெய்தமையால் வருடாந்தம் ஓய்வூதியம் செலுத்துவதற்கான செலவு அதிகரித்துள்ளது.

(இ) கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காக செயற்றிட்டம் கொண்டுள்ள ஒதுக்க நிதியங்களை ஈடுபடுத்த நேரிட்டமையால் 2007 இல் இருந்து திட்டத்தின் முதலீடுகள் படிப்படியாக குறைவடைந்துள்ளன. 2010 இல் ஒதுக்க நிதியம் பூச்சிய நிலையுற்றதோடு அதன் பின்னர் தவணைப்பண வருமானம் மாத்திரம் குறுங்கால ரீதியில் முதலீடு செய்யப்பட்டது. அதனோடு சார்புடையதாக முதலீட்டு வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது

4 **தொழிற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றுகை**

(அ) 2010 ஆகஸ்ற் மாதத்தில் இருந்து கமக்காரர் ஓய்வூதிய நிதியம் பூச்சியநிலையுற்ற பின்னர் தொடர்ந்தும் திட்டத்திற்கு சேர்த்துக்கொண்டதனால் திட்டத்தின் பொறுப்புக்களின் அளவு அதிகரித்தமையால் நிதிசார் நெருக்கடி மென்மேலும் வளர்ச்சியடைவதால் 2010 ஆகஸ்ற் மாதத்தில் இருந்து திட்டத்திற்கு கமக்காரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவது இடைநிறுத்தப்பட்டது.

அதற்கிணங்க இத்திட்டத்தின் அமுலாக்கல்தன்மை சம்பந்தமாக நிரந்தரமான தீர்மானத்திற்கு வரும்வரை 2012 ஆம் ஆண்டிலும் எவரையும் சேர்த்துக்கொள்வில்லை என்பதோடு அதனாலேயே இத தொடர்பான செயற்பாட்டுத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) ஓய்வூதியத் திட்டத்தின் வழியுரிமை சம்பந்தமாக இதுவரை எவ்விதமான நிரந்தரமான முடிவுக்கும் வராமையால் சேர்ந்துகொண்டவர்களிடமிருந்து இரண்டாவதும் பிந்தியதுமான தவணைகளை அறவிடல் இடம்பெறவில்லை.

(இ) புதிதாக சேர்த்துக்கொள்வதன் ஊடாக செயற்றிட்டத்தின் பொறுப்பு மேலிம் அதிகரிப்பதால் நடப்பு ஆண்டில் எவருமே சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

4.2 **முகாமைத்துவ வினைத்திறமையீனம்**

20 வருடங்களுக்கு மேலாக தேறாத இக்காசோலைகளைக் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.4 **தாமதித்த கருத்திட்டங்கள்**

(அ) , (ஆ)

சபையின் தலைமையலுவலகமும் 26 மாவட்ட அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. தற்போது கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு 950,000 உதவுதொகை செலுத்துநர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர். 22 வருட காலமாக கணனிமயப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிலவிய தொழில்நுட்ப விவரக்கூற்றுக்களுக்கிணங்க கணனிக் கருவிகளும் மென்பொருள்களும் கொள்வனவு செய்யப்பட்டு அவசியப்பாட்டுக்கமைய ஈடுபடுத்தப்பட்ட போதிலும் கொள்ளளவு அதிகரித்தமை காரணமாக அவசியப்பாட்டு மட்டம் மாற்றமடைந்ததாலும் புதிய தொழில்நுட்பத்துடன் ஒத்துவரத்தக்க வகையில் தகவல்களை

இற்றைப்படுத்தவேண்டிய தேவையேற்பட்டதாலும் இச்செலவினை ஏற்கவேண்டி நேரிட்டது. இன்றளவில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து அதிக கொள்ளளவு கொண்ட கணனி முறைமையொன்றை நிறுவி கொள்ளளவுக்கு ஏற்ற மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன.மேற்படி கணனி மென்பொருள் முறைமையில் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள அவசியமான தரவுகளை முறைமையில் சேர்த்துவருவதுடன் உறுப்புரிமை பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு நிறைவு செய்யப்பட்டுள்ளது. 22 வருடங்களாக இயங்கிவந்த திட்டத்தில் 950,000 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் சேர்ந்துள்ள சந்தர்ப்பத்தில் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் வீதம் தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ள வேளையில் பிந்திய தவணைகளை மில்லியன் கணக்கில் (No of Entries) கணனிமயப்படுத்திம் சிக்கல் மாத்திரம் தோன்றியுள்ளது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடும்

கணனி முறைமை, நிதிசார் முகாமைத்துவம், ஓய்வூதியம் செலுத்துதல் மற்றும் செலுத்தப்படாத ஓய்வூதியம் ஆகிய முறைமைகளில் சிறந்த கட்டுப்பாட்டினை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ee

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ / தந்தி / Telegrams — රක්ෂණ / ரக்ஷன / Rakshana
117-සුභද්‍රාරාම පාර,ගංගොඩවිල,නුගේගොඩ
117-Subadrarama road,Gangodawila
Nugegoda

මගේ අංකය / எமது இலக்கம் / My Ref. No. 2012/4/5/මු /ඕ/2
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Ref. No.
දිනය / திகதி / Date 2013/09/02

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

கொழும்பு.

**<u>2012 ஆம் ஆண்டுக்காக கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 14 (2) (சீ) அறிக்கைக்குப் பதிலளித்தல்</u>**

2012 ஆம் ஆண்டுக்காக கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 14 (2) (சீ) அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பம்/ பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

| | සභාපති / தலைவர் / Chairman | සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager | ප්‍රධාන කාර්යාලය / தலைமையகம் / Head Office |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephones | 448693 / 448694 | 438607 | 448691-2 / 438606 / 430058 |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | 449316 | 438607 | |

**கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

**2.2.2 கணக்கீட்டு நியமங்களும் இணங்காமையும்**

**(அ)** புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க முகப்பெறுமதி சமர்த்தல் இடம்பெற்றபோதிலும் முதற்றடவையாக சமர்ப்பிக்கும்போது மேற்கொள்ளவேண்டிய மீள்வகைப்படுத்தல் **Reclassification** மற்றும் மீள்கணிப்பீடு செய்யப்படல் **Remeasurement** மேற்கொள்ளப்படவில்லை. எதிர்வரும் கணக்காண்டில் சபையின் சொத்துக்களும் பொறுப்புக்களும் மீள்வகைப்படுத்தப்படவும் **(Reclassification)** மீள்கணிப்பீடு செய்யப்படவும் **(Remeasurement)** எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ)** கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்குச் சொந்தமான நீண்டகால முதலீடுகள் ஏதும் இல்லையென்பதோடு முதலீடுகள் அனைத்தும் குறுங்கால முதலீடுகளாகும். எனவே அந்த முதலீடுகளின் சந்தைப் பெறுமதிக்கும் புத்தகப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாடு கிடையாது.

**(இ)** எதிர்காலத்தில் அவசியமான வெளிப்படுத்தல்களைச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஈ)** பணிக்கொடை செலுத்துதல்களைக் கணிப்பிடுகையில் ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாவிட்டாலும் மெய்ச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பொறுப்பு கணிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பு தொடர்பாக தனிவேறான முதலீடு பேணப்படாவிட்டாலும் சபைனின் ஏனைய முதலீடுகளுல் இந்த முதலீடுகள் அடங்குகின்றன.

**(உ)** 2007 ஆம் ஆண்டின் ஆயுட்கணிப்பு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியப் பொறுப்பு கணிக்கப்பட்டுள்ளது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**)அ(** கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்தம் ரூ. 1,500,000 பணத்தொகை கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்பட்டபோதிலும் அப்பணத்தொகையைக் கட்டாயமாக சபைக்கு வழங்கவேண்டுமென எவ்விதமான உடன்படிக்கையும் சபைக்கும் கடற்றொழில் அமைச்சுக்கும் இடையில் கிடையாது. இன்றளவில் ஓய்வூதியத் திட்டம் மறுசீரமைக்கப்படுவதற்கு அவசியமான சட்டமுறையான நடவடிக்கைகள் நிதி, திட்டமிடல் அமைச்சு மூலமாக

மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இப்பணத்தொகையை சபைக்குப் பெற்றுக்கொள்ள இயலாமல் போகும்.

)ஆ( ஓய்வூதியம் செலுத்துகையில் அக்கொடுப்பனவினை மேற்கொள்வதற்காக ஏற்க நேடுகின்ற நேரடிச் செலவான தரகுத் தொகையும் ஓய்வூதியம் செலுத்துதலுடன் தொடர்புடைய செலவாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓய்வூதியப் பொறுப்பான 2,149 மில்லியன் ரூபா வுடன் ஒப்பிடுகையில் இந்த நேரடிப் பொறுப்பினைச் சீராக்குவதால் மொத்தப் பொறுப்புக்கு அளவுசார் ரீதியான தாக்கம் ஏற்படாது.

)இ( 1991 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு சபைக்கு கையளிக்கப்பட்ட பின்னர் அதற்கென விசேட பதவியணி சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

6 உத்தியோகத்தர்கள் இப்பிரிவின் கடமைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு ஒரேமாதிரியான அடிப்படையில் இவர்களின் சம்பளமும் பணிக்கொடையும் அப்பிரிவுக்கு உள்ளீர்க்கப்படும். சபையின் ஊழியர் பற்றாக்குறை காரணமாக தற்காலிகமாக வேறு வடமைகளில் இவ்வூழியர்கள் ஈடுபடுத்தப்பட்டபோதிலும் அவர்களை கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்குரிய ஊழியர்களாக கருதப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.2.4 <u>விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்</u>

கணக்குக் கூற்றுகள் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானவையாகும்.

### 2.2.5 <u>வருமதியான மற்றும் சென்மதியான செலவினங்கள்</u>.

)அ( ஓய்வூதியத் திட்டத்தில் தோன்றிய நிதிநெருக்கடி பற்றி பொதுதிறைசேரியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் மீள் நிரப்பும் அடிப்படையில் இப்பணத்தொகை கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இப்பணத்தொகை அறவிடப்பட உள்ளது.

**(ஆ)** கணக்காய்வுக் கட்டணங்களுக்காக முன்வைக்கப்பட்ட பணத்தொகையை சபையின் நடப்பு நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு குறைக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானத்திற்கிணங்க கணக்காய்வுக் கட்டணங்களைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

)இ( கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக தபால் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் பெற்றுக் கொள்ளப்படாத ஓய்வூதியம் செலுத்தப்படாத மீதியாக கணக்குப் பதியப்படுவதில்லை என்பதோடு விசேட காரணத்தின் நிமித்தம் மீண்டும் செலுத்த நேரிட்டால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற வருடத்தில் செலவாகக் கருதப்படும்.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமானங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் அமைந்தொழுகாமை

)அ( **(i)** கடற்றொழிலாளர் மதியுரைக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் அதற்கான உறுப்பினர்களைப் புதிதாக நியமிப்பதற்காக நிதியமைச்சின் செயலாளரூடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் அதுபற்றி உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, மீண்டும் உறுப்பினர்களை நியமித்தல் சம்பந்தமாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(ii)** கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்குச் சேர்த்துக் கொள்வதும் பிந்திய தவணைப் பணத்தை அறவீடு செய்வதும் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. உறுப்புரிமை நீக்கப்பட்ட உதவுதொகை செலுத்துநர்கள் பற்றிய அறிக்கையொன்று தற்போது கடற்றொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உறுப்புரிமை நீக்கப்பட்ட உதவுதொகை செலுத்துநர்களில் பெரும்பாலானோர் சுனாமியால் காணாமல்போன உதவுதொகை செலுத்துநர்களாக அமைவதோடு இது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சு எடுக்கும்.

)ஆ( **(i)** கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்திற்கிணங்க சேவையாற்றுகின்ற சபையின் ஊழியர்களுக்கு கடற்றொழில் அமைச்சின் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் மேலதிக வேலைகள் சில ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க சபையினால் ஆற்றப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் இக்கடமைக்காக தனிவேறான பதவியனியொன்று அங்கீகரிக்கப்படாமையால் இவ்வேலைகளையும் உள்ளடக்கிப் புரிவதற்காக இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. இது 1991 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திட்டம் ஆரம்பித்த நாளில் இருந்தே செலுத்தப்பட்டுள்ளது

இக்கொடுப்பனவுக்காக கீழே குறிப்பிடப்பட்ட அங்கீகாரங்கள் கிடைத்துள்ளன.

- கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திட்ட மதியுரைக்குழுவின் அங்கீகாரம்.
- பணிப்பாளர் சபையின் அங்கீகாரம்.
- விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு செயலாளரின் அங்கீகாரம்.

### 2.2.7 கருத்து பேதங்களுக்கு ஏதுவாக அமையக்கூடிய விடயங்கள்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியத்திலிருந்து கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்ட பணத்தொகை அத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கடன்தொகையாக கருதப்பட்டு செயலாற்றப்பட்டமையால் அவ்வட்டி சீராக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத் திட்டங்கள் அனைத்தையும் மறுசீரமைக்க

இன்றளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் எதிர்கால்தில் கிடைக்கவேண்டிய கடன் மற்றும் வட்டி பற்றிய தீரமானமொன்றினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

.3 **நிதிசார் மீளாய்வு**

3.1 **நிதிசார் பெறுபேறுகள்**

3.2 **நிதிநிலைமை பற்றிய பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

.4 **தொழிற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றுகை**

**(அ),(ஆ),(இ),(ஈ),(உ)**

இச்செயற்றிட்டத்தை கடற்றொழில் அமைச்சும் கடற்றொழில் திணைக்களமும் கூட்டாக அமுலாக்குவதோடு செயற்றிட்டத்தை நிர்வகிப்பதும் கணக்குப்பதிவதிம் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் செயற்பொறிப்பு ஆகும். செயலாற்றுகை தொடர்பில் கடற்றொ ழில் திணைக்களத்தினாலேயே செயலாற்றப்படும்.

4.2 **தொழிற்பாட்டு வினைத்திறமையீனம்**

திட்டத்திலிருந்து உறிப்புரிமை இழந்த உதவுதொகை செலுத்துநர்கள் பற்றிய தகவல்கள் கடற்றொழில் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோடு அவர்களின் நிலுவைத் தவணைப்பணத்தை அறவிடுதல் மற்றும் உறுப்புரிமையில் தக்கவைத்துக்கொள்ளல் சம்பந்தமாகவும் கடற்றொழில் அமைச்சுடன் எதிர்காலத்தில் கூட்டாகச் செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

.5 **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

செயற்றிட்டத்தின் நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ளல், கடற்றொழிலாளர்களுக்கு நன்மைகளை வழங்குதல், வருமதியான பணம், பிந்திய தவணைகளை அறவிடல், மதியுரைக் குழுவினை வினைத்திறன்மிக்கதாக இயக்குதல் ஆகிய விடயங்கள் மீது ஏற்கெனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு, வருங்காலத்தில் மேலும் விசேட கவனம் செலுத்தப்படும்.